விலை: 30.00
பக்கங்கள் : பதினாறு + பதினாறு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 கார்த்திகை 02 ஞாயிற்றுக்கிழமை (18.11.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 334

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

## நரேந்திர மோடி - சந்திரிகா மாலைதீவில் முக்கிய சந்திப்பு



15 ஆம் பக்கம் பார்க்க....

## முல்லை செம்மலையில் புதிதாக புத்தர் சிலை அமைக்க முயற்சி

### சாந்தி எம்.பி கண்டனம்

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு - செம்மலை நீராவியடிப் பிள்ளையார் ஆலயத்தின் பெயரை கணதேவி என புதிய பெயர்ப்பலகை இட்டு புதிதாக பாரிய புத்தர் சிலை திறக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இது தொடர்பில் பாராளுமன்ற

15 ஆம் பக்கம் பார்க்க....

### வெற்றிடங்களுக்கு ஆசிரியர்களை இணைக்க

## போட்டிப் பரீட்சை இன்றி நேரடியாக நேர்முகத் தேர்வு

### பட்டதாரிகளிடமிருந்து விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

வட மாகாணத்தில் உள்ள பாடசாலைகளில் வெற்றிடமாகவுள்ள கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், தகவல் தொழில்நுட்பம் ஆகிய பாட ஆசிரியர்களுக்கான பட்டதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது. 440 வெற்றிடங்கள் உள்ள போதிலும் குறைந்த அளவிலான விண்ணப்பங்கள் கிடைத்துள்ளதாக வடமாகாண கல்வியமைச்சின் செயலாளர் எஸ். சத்தியசீலன் அறிவித்துள்ளார்.

(விரிவான செய்தி 13-ம் பக்.)

## அனைத்துக்கட்சி பிரதிநிதிகளையும்

# விசேட சந்திப்புக்கு மைத்திரி அழைப்பு

**(கொழும்பு) பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அனைத்து கட்சிகளின் பிரதிநிதிகளையும் இன்று மாலை 5 மணிக்கு பாராளுமன்றக் கட்டடத் தொகுதிக்கு பேச்சுக்கு வருமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அழைப்பு விடுத்துள்ளார்.**

இச்சந்திப்பில் ஜனாதிபதியினால் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள மகிந்த ராஜபக்ஷவிற்கு எதிராக பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் மூன்றாவது தடவையாகவும் நிறைவேற்றப்பட்டுள்ள நம்பிக்கையில்லா தீர்மானம் தொடர்பில் பேசப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதன்காரணமாக இன்றைய சந்திப்பு அரச தரப்பிற்கு மிக முக்கியத்துவம் வாய்ந்த சந்திப்பாக பார்க்கப்படுகின்றது.

எனினும், பாராளுமன்றத்தில் பெரும்பான்மை பலத்தினை நிரூபிக்கமுடியாமல் தடுமாறிவரும் மகிந்தவுடன் இணைந்து செயற்பட முடியாது என்ற தீர்மானத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளதாக கூறப்படுகின்றது.

இதேவேளை, மூன்றாவது முறையாகவும் நம்பிக்கையில்லா தீர்மானத்தில் தோற்கடிக்கப்பட்டுள்ள மகிந்த ராஜபக்ஷவை பிரதமர் பதவியிலிருந்து நீக்காவிட்டால் ஜனாதிபதிக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் நேற்று முன்தினம் எச்சரிக்கை விடுத்திரு

16 ஆம் பக்கம் பார்க்க....

### கிளிநொச்சிப் பகுதியில்

## நிலக்கீழ் பதுங்கு குழி இராணுவத்தினரால் நேற்று உடைப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி புன்னைநீராவிப் பகுதியில் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் பயன்படுத்தியதாகக் கூறப்பட்ட நிலத்தின் கீழ் நான்கு பிரிவுகளைக் கொண்ட நிலக்கீழ் பதுங்கு குழி இராணுவத்தினரால் நேற்று உடைக்கும் பணி முன்னெடுக்கப்பட்டுள்ளது.

14 SLNG படை பிரிவின் கட்டுப்

16 ஆம் பக்கம் பார்க்க....

## அரசியலுக்குள் என்னை இழுக்க வேண்டாம்!

### என்கிறார் யோஷித்த

(கொழும்பு)

உண்மையாகவே இந்த பேரம் பேசும் செயல்களுக்கு எனக்கு நேரமில்லை. அதனால் என் பெயரை இந்த அரசியலுக்குள் இழுக்க வேண்டாம் என மகிந்த ராஜபக்ஷவின் புதல்வரான யோஷித்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சிகளின் பாராளு

16 ஆம் பக்கம் பார்க்க....

## எம்மக்களின் அபிலாசைகளை யார் பிரதிபலிக்கிறார்களோ அவரைப் பற்றி பரிசீலிப்போம்!

### சிறீதரன் எம்.பி தெரிவிப்பு



(கரணவாய்)

எங்கள் மக்களின் தேசிய அபிலாசைகள், அரசியல் எண்ணங்களை யார் பிரதிபலித்து தீர்வு காண முன்வருகிறார்களோ, எங்களது மக்களின் இயல்பு வாழ்க்கைக்கும், இருப்புக்கும் சரியான பாதையை

16 ஆம் பக்கம் பார்க்க....

## மக்கள் சேவைகள் எச்சந்தர்ப்பத்திலும் பலவீனமடைய இடமளிக்க வேண்டாம்

### அரச நிறுவனத் தலைவர்களுக்கு ஜனாதிபதி பணிப்புரை



(கொழும்பு)

அரச துறை நடவடிக்கைகள் மற்றும் மக்கள் சேவைகள் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பலவீனமடைவதற்கு இடமளிக்காது உரிய திட்டமிடல்களுடன் இலக்குகளை நோக்கி முறையாகவும் வினைத்திறனாகவும் அவற்றை முன்கொண்டு செல்லுமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அரச நிறுவனங்களின் தலைவர்களுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

நேற்று சனிக்கிழமை ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற அமைச்சுக்களின் செயலாளர்கள்,

16 ஆம் பக்கம் பார்க்க....

மகாராஜா பொதிகள் சேவை
Parcel.lk DHL GTV Express SRI LANKA aramex



(C-4447)
நத்தார் பண்டிகைக் காலத்தினை முன்னிட்டு விஷேட சேவைக்கட்டணத்துடனான பொதிகள் சேவை ஆரம்பம்.......
தாமதமின்றி இன்றே முந்திக்கொள்ளுங்கள் !!!

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | வவுனியா | கிளிநொச்சி |
|---|---|---|---|
| 225,கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம். | 81A, பருத்தித்துறை வீதி நெல்லியடி. | 25 கந்தசாமி கோவில் வீதி, வவுனியா. | கந்தசாமி கோவில் முன்பாக, A9 வீதி, கிளிநொச்சி. |
| 021 2224338 021 4925024 | 021 4930099 | 024 4930200 076 6908961 | 021 4930330 |

## அரசியலமைப்பை நம்ப முடியாது

### - ப.சத்தியலிங்கம்

(குருமன்காடு)

இன்றைய அரசியல் நிலையை பார்க்கையில் அரசியலமைப்பை நம்பி பலனில்லை எனத்தோன்றுவதாக முன்னாள் மாகாணசபை உறுப்பினர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.

நேற்று சனிக்கிழமை வவுனியாவில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்

16 ஆம் பக்கம் பார்க்க....

## முடிந்தால் பெரும்பான்மையை நிரூபித்துக் காட்டுங்கள்

### மகிந்தவுக்கு ஐ.தே.கட்சி சவால்

(கொழும்பு)

மகிந்த ராஜபக்ஷ தனது அரசின் பெரும்பான்மையை பாராளுமன்றில் நிரூபித்துத்துகாட்டவேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சி சவால் விடுத்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல இதனைத் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று செய்தியாளர்களை சந்தித்த போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதேவேளை, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் பிரதமர்

16 ஆம் பக்கம் பார்க்க....

# யார் பிரதமராக வந்தாலும் எமக்கு பிரயோசனம் இல்லை

## எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

தென்னிலங்கை அரசியலில் அதிகாரம் யாருக்குள்ளது என்பதைக் காட்டவே போட்டிகள் நிலவுகின்றது. யார் பிரதமராக வந்தாலும் எமக்கு விமோசனம் இல்லை என முன்னாள் மாகாண சபை உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

தற்போதைய அரசியல் நிலைவரம் தொடர்பாக கேட்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

மகிந்தவை பிரதமராகக் கொண்டு வந்ததற்கு எதிராக கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு கூட்டமைப்பு ஆதரவு அளித்தது.

இதற்கடுத்ததாக யாரைப் பிரதமராகக் கொண்டு வரவேண்டும் என்பது தொடர்பில் கூட்டமைப்பு தெரிவு செய்யவேண்டியது இல்லை. யாரைக் கொண்டு வந்தாலும் அது எமக்குப் பயன்படாத விடயமாகவே இருக்கும். தற்போதைய சூழல் அதிகாரத்தை யார் கொண்டுள்ளது என்பதைக் காட்டுவதற்கே இன்றைய நிலையுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களின் நலனிலே அக்கறை செலுத்த வேண்டுமே தவிர யார் பிரதமர் என்பதில் இல்லை.

கடந்த 26ஆம் திகதி மகிந்த பிரதமராக நியமிக்கப்பட்டது அரசியல் அமைப்பிற்கும் ஜனநாயகத்திற்கும் முரணானது எனத் தெரிவித்தே பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.

இத்தகைய சூழ்நிலையில் மகிந்த ராஜபக்ஷவின் மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவு வழங்கியது.

நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவு அளித்ததன் மூலம் ஜனநாயகத்தை நிலைநாட்டுவதற்கு தனது பங்களிப்பைச் செலுத்தியுள்ளது.

ஆனால் இவர்களுக்குள் நடக்கின்ற அதிகாரப் போட்டியிலே இன்னொரு தரப்பை ஆதரிக்கவேண்டிய நிலைமையில் தமிழர் தரப்பு இல்லை என்றே கூறிக்கொள்ள வேண்டும்.

கடந்த மூன்றரை ஆண்டுகளாக நல்லாட்சி அரசாங்கத்தினால் தமிழ் மக்கள் எதிர்பார்த்த இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு உட்பட நிலவிடுவிப்பு என அடிப்படைப் பிரச்சினைகளுக்கு முறைப்படியாக தீர்வு காணப்படவில்லை.

இனிமேல் ஏற்படப்போகும் அரசாங்கம் பலவீனமானதாகவே இருக்கும். இவ்வாறான அரசாங்கத்திடம் கோரிக்கைகள் வைப்பது பயன்தரக்கூடியதாக இருக்குமா என்றால் அது யோசிக்க வேண்டிய விடயமே.

இத்தகைய பலவீனமான அரசிற்கு நாங்கள் ஆதரவு அளிப்பதன் மூலம் எதிர்வரும் தேர்தலின் பின்னர் அரசாங்கம் வரும் சூழலில் அல்லது தமிழ் மக்களுடைய பலத்தை வைத்து மக்களின் கோரிக்கைகளின் அடிப்படையில் ஆதரவு அளிப்பது என்பது வேறு. தற்பொழுது இவரை அல்லது அவரை ஆதரவு அளிப்பது என்பது அறிவுடமை மகிந்த ராஜபக்ஷ மீது நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவு அளித்ததுடன் எங்களுடைய கடமை முடிவடைந்து விட்டது.

இன்னொருவரை பிரதமராக கொண்டு வருவதா இல்லையா என்பது தொடர்பில் அவர் மீது நம்பிக்கை அளிப்பதா இல்லையா என்பதும் எங்களுடைய விடயம் அல்ல என்பதை தெளிவாகக் கூறிக் கொள்கின்றேன் என்றார். (78)

# சபாநாயகருக்கு எதிராக சிவில் அமைப்பு பிரதிநிதிகள்

## குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு

சபாநாயகர் போலியான ஆவணங்களை தயாரித்து ஜனாதிபதியை தவறாக வழிநடத்த முயறசித்துள்ளதாக சில சிவில் அமைப்பு பிரதிநிதிகள் நேற்று குற்றபுலனாய்வு திணைக்களத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இந்த குற்றத்தின் அடிப்படையில் அவருக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த 14ஆம் திகதி பிரதமர் மகிந்த ராஜபக்ஷவிற்கு எதிராக நாடாளுமன்றத்தில் நம்பிக்கையில்லா பிரேரணை நிறைவேற்றியதாக ஜனாதிபதிக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களின் கையொப்பங்களுடனான ஆவணத்துடன் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்திருந்தார்.

இதில் பழைய தினம் ஒன்றை அழித்து, அதன்மீது புதிய தினம் ஒன்று எழுதப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டிருந்ததாக ஜனாதிபதி பதில் அனுப்பியிருந்தார்.

இந்த நிலையில் சபாநாயகர் அனுப்பி வைத்த கடிதம் தொடர்பில் சட்டநடவடிக்கை எடுக்குமாறு கோரி, சுயதொழிலாண்மையாளர்களின் தேசிய முச்சக்கரவண்டி சங்கத்தின் தலைவர் சுனில் ஜெயவர்தன மற்றும் சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கத்தின் தேசிய அமைப்பாளர் அசேல சம்பத் ஆகியோர் குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் முறைப்பாடு செய்தனர்.

இதேவேளை, சபாநாயகர் கரு ஜெயசூரியவின் செயற்பாடுகளுக்கு எதிராகவும் பொதுத் தேர்தல் ஒன்றை நடத்துமாறு வலியுறுத்தியும் நேற்று பல பிரதேசங்களில் ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

வரக்காபொலை, இரத்தினபுரி, ஜாஎல, பொரலஸ்கமுவை மற்றும் நிட்டம்புவ பகுதிகளில் ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. (78)

# ரணில் - மைத்திரி இன்று சந்திப்பு?

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் இன்றைய தினம் சந்தித்து கொள்வதற்கான வாய்ப்புக்கள் உள்ளதாக தெரிவிக்கப்படு கின்றது.

அத்துடன், கடந்த மாதம் 26ஆம் திகதி புதிய பிரதமரான முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் நியமிக்கப்பட்டதை அடுத்து, அன்றைய தினத்திற்கு பின்னர் ஜனாதிபதியும, முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் நேற்று தொலைபேசியில் நீண்ட நேரம் பேசியுள்ளதாக அறிய முடிகின்றது.

இந்நிலையில், நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் ஸ்திரத்தன்மைக்கும் நெருக்கடி நிலைக்கும் விரைவில் தீர்வு காணப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மேலும்இன்றைய தினம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, நாடாளுமன்றில் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சிகளுக்குமான மாநாடு ஒன்றுக்கு அழைப்பு விடுத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (78)


அறைகள் வாடகைக்கு

"படிக்கும் பிள்ளைகளுக்கு மட்டும்"
யாழ்ப்பாணம் கே.கே.எஸ் வீதியில் இந்துக் கல்லூரிக்கு அருகில் இரண்டு ஆண்கள், இரண்டு பெண்கள் தங்குவதற்கு சகல வசதியுமுள்ள அறைகள் உண்டு.

தொடர்பு: 831/34, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 222 1781 (6487)

சிற்றி சிக்கன் ஹோம் சப்பிளை

உங்களுக்கு கோழி இறைச்சி தேவையா? அழையுங்கள்... உங்கள் வீடுகளுக்கே கொண்டு வந்து தருகின்றோம்.
எம்மிடம் புறொயிலர், ஊர்ச்சேவல் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். (C-4451)

077 838 0158, 076 471 9951
021 722 3535, 021 722 3636
M.S.V பாம் டீலேர்ஸ் - கொக்குவில்

புளோரன்ஸ் நைற்றிங்கேல்
தாதியர் பயிற்சிப் பாடசாலை



தாதியராக வைத்தியசாலையில் தொழில்புரிய ஆசைப்படுகின்றீர்களா?

- ஒரு வருட பயிற்சிப் பாடநெறி
- மூன்று மாதம் தனியார் வைத்தியசாலையில் பயிற்சிகள்
- பாட முடிவில் அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்கள்

தகைமை:-
- O/L
- A/L
- வயது 18 - 35

(6485)

முகவரி:-
குஞ்சர் கடையடி,
கரணவாய் மத்தி, நெல்லியடி.
தொலைபேசி அழைப்புகளுக்கு
021 433 8919, 076 222 6438

கே.கே.எஸ்.றோட்,
மருதனார்மடம்.
021 492 8916
077 298 4849

Hotline:- 0777186438 F/b - F/N-School of Nursing

கருவிக்கு காணி தேவை

கருவி மாற்றுத்திறனாளிகளின் சமூக வள நிலையத்துக்கு 1-3 பரப்புக் காணி தேவை.

பருத்தித்துறை வீதியில் யாழ்ப்பாணத்துக்கும் கோப்பாய்க்கும் இடையில், பலாலி வீதியில் யாழ்ப்பாணத்துக்கும் உரும்பிராய்க்கும் இடையில் அல்லது கே.கே.எஸ் வீதியில் யாழ்ப்பாணத்துக்கும் இணுவிலுக்கும் இடையில் இருப்பின் விரும்பத்தக்கது.

வலுவிழந்தவர்கள் வந்து செல்லக்கூடிய இடத்தில் இருப்பது சிறப்பானது. (6480)

தொடர்புகளுக்கு:
0773246876, 0772292401, 0766667454
Email:karuvi.org@gmail.com

பிரதேச செய்தியாளர்
பதவிக்கான விண்ணப்பம்

வலம்புரி நாளிதழின் பிரதேச செய்தியாளர்களாகக் கடமையாற்ற விரும்புகின்றவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரிகள் தமது
முழுப்பெயர், பிறந்த திகதி, நிரந்தர முகவரி, தபால் முகவரி, கல்வித் தகைமை, தொழில் (இருப்பின்) தே.அ.அ.இலக்கம், மின்னஞ்சல் முகவரி (இருப்பின்), தொலைபேசி இலக்கம் என்பன உள்ளடங்கலாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை

பிரதம ஆசிரியர்,
வலம்புரி,
இல.3, 2ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்

எனும் முகவரிக்கு எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்பாக அனுப்பி வைக்கவும்



பொதுமுகாமையாளர்
வலம்புரி

# தேர்தலுக்கு செல்வதுதான் ஒரே தீர்வு

# பாராளுமன்றக் குழப்பங்களுக்கு சபாநாயகரே பொறுப்பேற்க வேண்டும்

## அமைச்சர்கள் போர்க்கொடி



(கொழும்பு)

**சபாநாயகர் தொடர்ந்தும் அரசியலமைப்பையும், பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளையும் மீறி தான் தோன்றித்தனமாகச் செயற்படுவதுடன், பாராளுமன்றத்தில் இடம்பெறும் சகல குழப்பங்களுக்கும் சபாநாயகரே பொறுப்பேற்க வேண்டும் என அமைச்சர்கள் தெரிவித்துள்ளனர்.**

பாராளுமன்ற உறுப்பினர்களின் உயிர்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் கத்தியுடன் வந்த உறுப்பினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு கோரியே ஐ.ம.சு.மு. உறுப்பினர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

எனினும், சபாநாயகர் பாராளுமன்ற சம்பிரதாயங்களை மீறி பொலிஸாரின் பாதுகாப்புடன் வந்து சபையை பிழையாக வழிநடத்தியிருப்பதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

பாராளுமன்றகுழு அறையில் நேற்று முன்தினம் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட அமைச்சர்களான தினேஷ் குணவர்த்தன, சுசில் பிரேமஜெயந்த மற்றும் இராஜாங்க அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல ஆகியோர் இந்தக் குற்றச்சாட்டுக்களை முன்வைத்த னர்.

தொடர்ந்தும் பாராளுமன்றத்தைக் குழப்பத்தில் முன்னெடுக்காது மக்கள் ஆணையைப் பெறுவதற்கு தேர்தலொன்றுக்குச் செல்வதே சிறந்த தீர்வாக அமையும் என அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

ஜனாதிபதியைச் சந்தித்த ஐக்கிய தேசிய முன்னணி தலைவர்கள்மற்றும்ஜே.வி.பி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தலைவர்களிடம் பாராளுமன்ற நிலையியற் கட்டளை மற்றும் அரசியலமைப்புக்கு உட்பட்டதாக பிரேரணையை நிறைவேற்றுமாறு கூறியிருந்தார். அப்படிக் கூறியிருந்த போதும் சபாநாயகர் மீண்டும் அரசியலமைப்பையும், நிலையியற் கட்டளைகளையும் மீறும் வகையில் செயற்பட்டுள்ளார்.

கத்தியுடன் வந்த பாராளுமன்ற உறுப்பினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு முறைப்பாடு செய்த போதும் அவர் அதனைக் கவனத்தில் கொள்ளவில்லை. இதனாலேயே உறுப்பினர்கள் சபையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர் என்றார்.

ரணில் விக்கிரமசிங்கவை பிரதமராக்குவதற்கு அவர்களிடம் பெரும்பான்மை இல்லை. தற்போதுள்ள அரசாங்கத்துக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவருவதாயின் உரிய முறையில், நிலையியற்கட்டளைகளுக்கு அமைவாகவும், அரசியலமைப்புக்கு உட்பட்டும் கொண்டுவர வேண்டும். அதனைவிடுத்து தன்னிச்சையாக செயற்பட முடியாது.

பாராளுமன்றத்துக்குப் பொலிஸாரை அழைத்து வருவதற்கு சபாநாயகருக்கு என்ன அதிகாரம் உள்ளது என்றும் அவர் கேள்வியெழுப்பினார்.

செங்கோல் உரிய இடத்தில் வைக்கப்படாது நடத்தப்பட்ட பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டதாகக் கூறப்படும் நம்பிக்கையில்லா தீர்மானம் ஏற்புடையதல்ல என்றும் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் இவ்வாறான பிழைகளைத் திருத்தி நாட்டை முன்னோக்கி நகர்த்திச்செல்லும்.

சபாநாயகர் மேலும் குழப்பங்களை அதிகரிக்காது பாராளுமன்றத்தைக் கலைத்து தேர்தலொன்றுக்குச் செல்வதற்கு இடமளிக்க வேண்டும். மக்களுக்குரிய அதிகாரத்தை வழங்க வேண்டும்.

தமக்குப் பெரும்பான்மை இருப்பதாயின், தேர்தலுக்குச் செல்லத் தயார் எனின் ஏன் ஐக்கிய தேசியக் கட்சியினர் தேவையற்ற குழப்பங்களை ஏற்படுத்தி வருகின்றனர் என்றும் தினேஷ் குணவர்த்தன கேள்வி எழுப்பினார்.

இதேவேளை, ஜனாதிபதியுடன் நடத்திய சந்திப்பை முடித்துக் கொண்டு வந்த ஐ.தே.மு. மற்றும் ஏனைய கட்சித் தலைவர்கள் பிழையான தகவல்களையே ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளனர். பாராளுமன்ற நிலையியற் கட்டளைக்கு உட்பட்டு செயற்படுமாறு ஜனாதிபதி கூறியிருந்தபோது அதன்படி இவர்கள் செயற்படவில்லை என கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

இவ்வாறான நாளொன்றில் வெளிநாட்டுத் தூதுவர்களைப் பாராளுமன்றத்துக்கு அழைத்து, பார்வையாளர் கலரியில் அமரச் செய்வதற்கு சபாநாயகருக்கு யார் அதிகாரம் கொடுத்தது. பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் கீழ் அவருக்கு அதிகாரம் உள்ளதா எனவும் அவர் கேள்வியெழுப்பினார். பாராளுமன்றத்தை கலைப்பது தொடர்பில் உச்சநீதிமன்றம் இன்னமும் தீர்ப்பை வழங்கவில்லை. இடைக்காலத் தடையுத்தரவையே வழங்கியுள்ளது என்றார்.

பாராளுமன்றத்தில் மீண்டும் நிறைவேற்றப்பட்டுள்ள பிரேரணை சட்டரீதியாக ஏற்புடையதல்ல என அமைச்சர் சுசில் பிரேமஜெயந்த தெரிவித்தார்.

ஏற்கனவே நிறைவேற்றியதாகக் கூறப்படும் பிரேரணையில் முதலாவது விடயத்தை நீக்கி இதனை நிறைவேற்றியிருப்பதாகக் கூறுகின்றனர். இவ்வாறாயின் குரல் அடிப்படையாகக்கொண்டு வாக்கெடுப்பை நடத்தியிருப்பது எவ்வாறு ஏற்புடையதாகும் எனவும் அவர் கேள்வியெழுப்பினார்.

பாராளுமன்றத்துக்கு கத்தியுடன் வந்தவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்காது, வாளுடன் வந்தாலும் தான் கவலைப்படப் போவதில்லையெனக் கூறியுள்ளார்.

சபாநாயகர் ஒருதலைப் பட்சமாகச் செயற்படுகிறார் என்பது தெளிவாகத் தெரிகிறது. தேவையற்ற பிரச்சினைகளை ஏற்படுத்தாது தேர்தலொன்றுக்குச் செல்ல இடமளிக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-4)

# விரைந்து தீர்வு காணுமாறு ஜனாதிபதிக்கு அமெ., ஆஸி, இந்தியா, ஜப்பான் அழுத்தம்

(கொழும்பு)

நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் குழப்பநிலைக்கு ஜனநாயகத்துக்கு அமைவாக ஜனாதிபதி விரைந்து தீர்வு காண வேண்டும் எனவும், அதற்கான ஒத்துழைப்பினை வழங்குவதற்கு முன்வருதல் தொடர்பில் ஐக்கிய அமெரிக்கா, அவுஸ்திரேலியா, இந்தியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளின் பிரதிநிதிகளுக்கு இடையில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இந்திய -பசுபிக் பிராந்திய நாடுகளுக்கு இடையிலான செயற்பாடுகள் மற்றும் பரஸ்பர ஒத்துழைப்பு தொடர்பிலான இந்திய-பசுபிக் பிராந்திய நாடுகளுக்கிடையிலான கலந்துரையாடல் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை சிங்கப்பூரில் நடைபெற்ற போதே இவ் விடயம் குறித்து அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. (இ-4)

# கடற்றொழிலாளர் குடும்பங்களுக்கு அவசர நிவாரணம் வழங்கக் கோரிக்கை

## வடக்கு ஆளுநருக்கு சம்மேளனத் தலைவர் கடிதம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்டுள்ள கடற்றொழிலாளர் குடும்பங்களுக்கு அவசர நிவாரணம் வழங்குமாறு வடக்கு மாகாண ஆளுநர் மற்றும் யாழ்.மாவட்ட அரச அதிபருக்கு யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்க சமாசங்களின் சம்மேளன தலைவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் அனுப்பியுள்ள கடிதத்தில், யாழ்.மாவட்டத்தில் தற்போது நிலவி வரும் சீரற்ற காலநிலை காரணமாக மீனவர்கள் ஒருவார காலமாக கடற்றொழிலுக்கு செல்லமுடியவில்லை.

கஜா சூறாவளியால் கடற்றொழிலாளர்களின் 30 ஆயிரத்து 117 குடும்பத்தவர்களது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது.

விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணம் வழங்குவது போன்று கடற்றொழிலாளர்களின் குடும்பங்களுக்கு நாளொன்றுக்கு குறைந்தது 2 ஆயிரம் ரூபா பலநோக்கு கூட்டுறவு சங்கங்கள் ஊடாக விசேட அதிகாரத்தை பயன்படுத்தி விரைவாக வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (இ-9)

# ஆயிரம் மில்லியன் டொலர் கடனை ஒரே தடவையில் செலுத்த வேண்டும்

(கொழும்பு)

எதிர்வரும் ஜனவரி மாதத்தின் முதல் இரண்டு வாரங்களுக்குள் ஆயிரம் மில்லியன் டொலர் கடனை ஒரே தடவையில் செலுத்த வேண்டும் எனவும், அந்த பணத்தை ஒரே தடவையில் செலுத்த முடியாது போனால் நாடு கடும் பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்க நேரிடும்.

மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் கடந்த காலத்தில் பெற்றுக்கொண்ட கடனுக்காக இந்த தொகை செலுத்தப்பட வேண்டும் என பொருளாதார நிபுணரும், முன்னாள் பிரதி நிதியமைச்சருமான ஹர்ச டி சில்வா தெரிவித்தார்.

இந்த தொகையை செலுத்த முடியாது போனால், கடன் வழங்கும் சகல நிறுவனங்களும் இலங்கையை கறுப்பு பட்டியலில் சேர்க்கப்பட்ட நாடாக கருதும் எனவும் அவர் தெரிவித்தார்.

ஆயிரம்மில்லியன்டொலர் கடனை செலுத்தும் வகையில் எந்த திட்டங்களும் இதுவரை முன்னெடுக்கப்படவில்லை எனவும் ஹர்ச டி சில்வா மேலும் தெரிவித்துள்ளார். (இ-4)

# கோவிலுக்குச் சென்றவர் மயங்கி விழுந்து மரணம்

(யாழ்ப்பாணம்)

கோவிலுக்குச் சென்றவர் மயங்கி விழுந்து மரணமானார். சாவகச்சேரி வடக்கு கிராம்புவிலை சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான கந்தசாமி பரராஜசிங்கம் (வயது-54) என்பவரே இவ்வாறு மரணமானவராவார்.

இவர் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கிராம்புவில் கந்தசுவாமி கோவிலுக்குச் சென்று தேங்காய் அடிக்க முற்பட்டவேளை மயக்கமுற்று கீழே விழுந்து மரணமடைந்தார். (இ-5)

# கடை உடைத்து திருடிய குற்றச்சாட்டில் நால்வர் கைது

(சாவகச்சேரி)

தென்மராட்சி-நாவற்குழிப் பகுதியில் கடந்த வியாழக்கிழமை இரவு வர்த்தக நிலையம் ஒன்றின் கூரையைப் பிரித்து பெறுமதியான பொருட்கள் மற்றும் பணம் ஆகியவற்றை திருடிய சந்தேகத்தின் பேரில் நால்வர் சாவகச்சேரி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வர்த்தக நிலைய உரிமையாளரால் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டினை அடுத்து கடந்த வெள்ளிக்கிழமை கைதடி மற்றும் நாவற்குழிப் பகுதிகளைச் சேர்ந்த நால்வர் கைது செய்யப்பட்டுள்ளதாக சாவகச்சேரி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும் கடந்த வெள்ளிக்கிழமை இரவு மதுபோதை மற்றும் சாரதி அனுமதிப் பத்திரம் இன்றி வாகனம் செலுத்திய நான்கு சாரதிகள் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்துள்ளனர். (இ-30)



அஞ்சலோ மத்யூஸின் அதிரடிகளில் ஒன்று

# தப்புமா இலங்கை?

## வெற்றியை நோக்கி இங்கிலாந்து

பல்லேகல டெஸ்டில் இலங்கை அணி தோல்வியை தவிர்க்க போராட வேண்டிய நிலையில் உள்ளது.

இலங்கை வந்துள்ள இங்கிலாந்து அணி 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது.

முதல் போட்டியில் இங்கிலாந்து அணி வென்ற நிலையில், இரண்டாவது டெஸ்ட் கண்டி பல்லேகலயில் நடக்கிறது.

முதல் இன்னிங்சில் இங்கிலாந்து 290, இலங்கை 336 ஓட்டங்கள் எடுத்தன. மூன்றாம் நாள் ஆட்ட நேர முடிவில், இங்கிலாந்து அணி 2ஆவது இன்னிங்சில் 9 விக்கெட்டுக்களை இழந்து 324 ஓட்டங்கள் எடுத்திருந்தது. போக்ஸ் (51), அண்டர்சன் (4) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

நேற்று நான்காம் நாள் ஆட்டம் நடந்தது. அண்டர்சன் 12 ஓட்டங்களில் திரும்ப, இங்கிலாந்து அணி இரண்டாவது இன்னிங்சில் 346 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. போக்ஸ் (65) ஆட்டமிழக்காமல் இருந்தார்.

பந்துவீச்சில் இலங்கை அணி சார்பில் அதிகபட்சமாக தனஞ்செய 6 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

**லீச் ஜாலம்**

301 ஓட்டங்கள் என்ற இலக்குடன் இரண்டாவது இன்னிங்சை ஆரம்பித்த இலங்கை அணியை ஜேக் லீச் 'சுழலில்' மிரட்டினார்.

இவரது பந்துவீச்சில் கௌசல் சில்வா (4), தனஞ்செய (1), குசல் மெண்டிஸ் (1) சிக்கினர். பின், இணைந்த கருணாரத்ன, மத்யூஸ் அபாரமாக விளையாடினர். இருவரும் அரைச்சதம் கடந்தனர். நான்காவது விக்கெட்டுக்காக 77 ஓட்டங்கள் சேர்த்தபோது, கருணாரத்ன (57) ஆட்டமிழந்தார். மொயீன் பந்தில் ரோஷன் சில்வா (37) ஆட்டமிழந்தார். மத்யூஸ் 88 ஓட்டங்கள் எடுத்தார். டில்ருவன் பெரேரா (2) நிலைக்கவில்லை. மழை மற்றும் போதிய வெளிச்சமின்மை காரணமாக, ஆட்டம் முன்னரே முடிவுக்கு வந்தது.

இலங்கை அணி இரண்டாவது இன்னிங்சில் 7 விக்கெட்டுக்களை இழந்து 226 ஓட்டங்கள் எடுத்திருந்தது. டிக்வெல (27) ஆட்டமிழக்காமல் இருந்தார்.

இன்றைய கடைசி நாள் ஆட்டத்தில் இலங்கை வெற்றிக்கு 75 ஓட்டங்கள் தேவை. இங்கிலாந்து அணி 3 விக்கெட்டை கைப்பற்றினால் வாகை சூடலாம் என்பதால் விறுவிறுப்பான ஆட்டத்தை எதிர்பார்க்கலாம்.



அரைச்சதம் அடித்த பாகிஸ்தானின் பாபர் அசம்

## நியூசிலாந்து போராட்டம்

நியூசிலாந்துக்கு எதிரான முதல் டெஸ்டில் பாபர் அசம் அரைசதம் கடந்து கைகொடுக்க முதல் இன்னிங்சில் பாகிஸ்தான் அணி 227 ஓட்டங்கள் எடுத்தது.

பாகிஸ்தான், நியூசிலாந்து அணிகள் மோதும் முதல் டெஸ்ட் அபுதாபியில் நடக்கிறது.

முதல் இன்னிங்சில் நியூசிலாந்து அணி 153 ஓட்டங்களுக்கு சுருண்டது. முதல் நாள் ஆட்டநேர முடிவில் முதல் இன்னிங்சில் பாகிஸ்தான் அணி 2 விக்கெட்டுக்களை இழந்து 59 ஓட்டங்கள் எடுத்திருந்தது. அசார் அலி (10), ஹரிஸ் சொகைல் (22) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

**பாபர் நம்பிக்கை**

இரண்டாம் நாள் ஆட்டத்தில் முதல் இன்னிங்சை தொடர்ந்த பாகிஸ்தான் அணியின் அசார் அலி (22), ஹரிஸ் சோகைல் (38) நிலைக்கவில்லை. அசாத் ஷபிக் (43) அரைச்சத வாய்ப்பை இழந்தார். அணித் தலைவர் சர்பராஸ் அகமட் (2), பிலால் ஆசிப் (11), யாசிர் ஷா (9), ஹசன் அலி (4) சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர். நிதானமாக ஆடிய பாபர் அசம் (62) அரைச்சதம் கடந்தார். முதல் இன்னிங்சில் பாகிஸ்தான் அணி 227 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

பந்துவீச்சில் நியூசிலாந்து சார்பில் போல்ட் 4 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பின், 2ஆவது இன்னிங்சை ஆரம்பித்த நியூசிலாந்து அணிக்கு ரொம் லெதம் (0) ஏமாற்றினார். இரண்டாம் நாள் முடிவில், 2ஆவது இன்னிங்சில் நியூசிலாந்து அணி ஒரு விக்கெட்டை இழந்து 56 ஓட்டங்கள் எடுத்து, 18 ஓட்டங்களால் பின்தங்கி இருந்தது. ரவால் (26), அணித் தலைவர் வில்லியம்சன் (27) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

பந்துவீச்சில் பாகிஸ்தான் சார்பில் ஹசன் அலி ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினார்.

**150 விக்கெட்டுக்கள்**

அபுதாபி டெஸ்டில் நியூசிலாந்தின் வோக்னர் 'வேகத்தில்' பாகிஸ்தானின் யாசிர் ஷா வெளியேறினார். இது, வோக்னரின் 150வது டெஸ்ட் விக்கெட். இதன்மூலம் டெஸ்ட் அரங்கில் 150 அல்லது அதற்கு மேல் விக்கெட் கைப்பற்றிய 8 வது நியூசிலாந்து பந்துவீச்சாளரானார். ஏற்கெனவே நியூசிலாந்தின் ரிச்சர்ட் ஹாட்லி (431 விக்கெட்), டானியல் வெட்டோரி (361), கிறிஸ் மார்ட்டின் (233), ரிம் சௌதி (220), டிரண்ட் போல்ட் (219), கிறிஸ் கெய்ன்ஸ் (218), டானி மோரிசன் (160) ஆகியோர் இம்மைல்கல்லை எட்டியிருந்தனர்.

## கிண்ணம் வென்றது தெ.ஆ.



ஆர்ப்பரிக்கும் தெ.ஆபிரிக்காவின் கிறிஸ் மோரிஸ்

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான 'ரி20' போட்டியில் அசத்திய தென்னாபிரிக்க அணி 21 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

அவுஸ்திரேலியாவின் குயின்ஸ்லாந்து நகரில், தென்னாபிரிக்கா - அவுஸ்திரேலியா அணிகள் மோதிய ஒரே ஒரு சர்வதேச 'ரி20' போட்டி நடந்தது.

நாணயச் சுழற்சி யில் வென்ற அவுஸ்திரேலிய அணித் தலைவர் ஆரோன் பின்ச், களத்தடுப்பை தேர்வு செய்தார். மழையால் தலா 10 ஓவர் கொண்ட போட்டியாக நடத்தப்பட்டது.

**டு பிளசி நம்பிக்கை**

முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணிக்கு ரீசா ஹென்ரிக்ஸ் (19), குயின்ரன் டி கொக் (22) ஜோடி நல்ல ஆரம்பம் கொடுத்தது. அணித் தலைவர் டு பிளசி 15 பந்துகளில் 27 ஓட்டங்கள் எடுத்து ஓரளவு கைகொடுத்தார். ஹெயின்ரிச் கிளாசன் (12), டேவிட் மில்லர் (11) நிலைக்கவில்லை. கிறிஸ் மோரிஸ் (0) ஏமாற்றினார்.

தென்னாபிரிக்க அணி 10 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 109 ஓட்டங்கள் எடுத்தது. பெகார்டின் (3), பெலுக்வாயோ (2) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

பந்துவீச்சில் அவுஸ்திரேலியா சார்பில் நேதன் குல்டர்-நைல், அன்ரூ ரை ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களை கைப்பற்றினர்.

**பின்ச் ஏமாற்றம்**

சவாலான இலக்கை விரட்டிய அவுஸ்திரேலிய அணிக்கு அணித் தலைவர் ஆரோன் பின்ச் (7) ஏமாற்றினார். கிறிஸ் மோரிஸ் பந்தில் ஷார்ட் (0), கிறிஸ் லின் (14) ஆட்டமிழந்தார். பெலுக்வாயோ 'வேகத்தில்' ஸ்டாய்னிஸ் (5), மெக்டெர்மாட் (4) வெளியேறினர். அலெக்ஸ் கேரி (8) நிலைக்கவில்லை.

அவுஸ்திரேலிய அணி 10 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 87 ஓட்டங்கள் மட்டும் எடுத்து தோல்வியடைந்தது. குல்டர்-நைல் (2) ஆட்டமிழக்காமல் இருந்தார். பந்துவீச்சில் தென்னாபிரிக்கா சார்பில் நிகிடி, மோரிஸ், பெலுக்வாயோ தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

இதன்மூலம் ஒரே ஒரு போட்டி கொண்ட 'ரி20' தொடரை தென்னாபிரிக்கா 1-0 எனக் கைப்பற்றி கிண்ணம் வென்றது.

# பெடரர் தோல்வி

ஏ.டி.பி. பைனல்ஸ் டென்னிஸ் தொடரின் ஒற்றையர் பிரிவு அரையிறுதியில் சுவிட்சர்லாந்தின் பெடரர் அதிர்ச்சி தோல்வியடைந்தார்.

லண்டனில், உலகின் 'ரொப் 8' வீரர்கள் பங்கேற்கும் ஏ.டி.பி., பைனல்ஸ் டென்னிஸ் தொடர் நடக்கிறது. இதன் ஒற்றையர் பிரிவு அரையிறுதியில் சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரர், ஜேர்மனியின் அலெக்சாண்டர் ஸ்வெரேவ் மோதினர். முதல் செட்டை 5-7 என இழந்த பெடரர், 'டை பிரேக்கர்' வரை சென்ற 2வது செட்டை 6-7 எனக் கோட்டைவிட்டார்.

ஒரு மணி நேரம், 36 நிமிடம் நீடித்த போட்டியின் முடிவில் பெடரர் 5-7, 6-7 என்ற நேர் செட் கணக்கில் தோல்வியடைந்து வெளியேறினார். இதன்மூலம் இவர், தனது 100வது ஏ.டி.பி., ஒற்றையர் பிரிவு பட்டம் வெல்லும் வாய்ப்பை தவறவிட்டார்.



தோல்வியின் விரக்தியில் பெடரர்

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம் 1980 புரட்டாதி, அனுசம் 1, கிரகபாவம் மூன்று சுற்றும் 24, செவ்வாய் குற்றமற்ற அபுதாபியில் B.Sc Engineer (Q.S) ஆக கடமையாற்றும் மணமகனிற்கு படித்த அழகிய மணப்பெண் தேவை.

தொடர்புகளுக்கு:- 021 222 5175 (6432)

## தேவை

மிக நல்ல முறையில் சட்டறிங் அடிக்க தெரிந்தவர்கள் தேவை.

தொடர்புகளுக்கு

076 171 1231 (C-4440)

## அலுவலக கட்டடம் வாடகைக்கு

யாழ்.நகரத்தில் பருத்தித்துறை வீதியில் புகையிரத நிலையத்திற்கு அண்மித்ததாக கட்டடம் வாடகைக்கு உண்டு. 2 மாடிக் கட்டடம் 5 அறைகள் 2Hall உள்ளது. அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள், அலுவலகங்கள், கல்வி நிறுவனங்கள், களஞ்சிய அறைக்கு பொருத்தமானது.

தொடர்புக்கு:- 076 704 0744 (6470)

## "சொர்க்கம் திருமண சேவை"

அமெரிக்காவில் வசிக்கும் 30 வயதுடைய செவ்வாய் குற்றம் உள்ள பட்டதாரி மணமகனுக்கு தகுந்த அழகான மணமகளைத் தேடுகிறோம். கனடாவில் வசிக்கும் 34 வயதுடைய குருகுலத்தைச் சேர்ந்த மணமகனுக்கு தகுந்த மணமகளைத் தேடுகிறோம். பிரான்ஸ் இல் வசிக்கும் 33 வயதுடைய மணமகனுக்கு தகுந்த மணமகளைத் தேடுகிறோம்.

தொடர்புகளுக்கு

TP.&Viber :- 0014166661855, 0016475043336

# சட்டவிரோத இலங்கை அரசிடமிருந்து பயனர்களைப் பாதுகாக்க வேண்டும்

## முகநூல் நிறுவனத்திடம் ஐ.தே.க.அவசர கோரிக்கை

(கொழும்பு)

முகநூல் நிறுவனத்திற்கு ஐக்கிய தேசியக் கட்சி அவசர கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளது.

சட்டவிரோத இலங்கை அரசாங்கத்திடமிருந்து பயனர்களை பாதுகாத்து தருமாறு ஐக்கிய தேசியக் கட்சி அதிகாரபூர்வமாக, முகநூல் நிறுவனத்திடம் கோரியுள்ளது. முகநூல் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி மார்க் ஸக்கர்பேர்க்கிற்கு இந்த கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் கபீர் ஹாசீம் இந்தக் கடிதத்தை அனுப்பி வைத்துள்ளார். இலங்கையின் சட்டவிரோத அரசாங்கத்துடன் முகநூல் நிறுவனம் தொடர்புகளைப் பேணக் கூடாது என அவர் கோரியுள்ளார்.

மைத்திரிபால சிறிசேன தலைமையிலலான இலங்கை அரசாங்கம், சில முகநூல் பயனர்கள் பற்றிய விபரங்களை இரகசியமாக கோரக்கூடும் எனவும், அவ்வாறான சந்தர்ப்பங்களில் பயனர்களின் தனிப்பட்ட உரிமையை உறுதி செய்ய வேண்டியது முகநூல் நிறுவனத்தின் கடமையாகும் எனவும் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசாங்கத்தின் அரசியல் அமைப்பிற்கு முரணான செயற்பாடுகளிலிருந்து இலங்கை முகநூல் பயனர்களை பாதுகாத்தல் என்ற தலைப்பில் இந்த கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் அமைப்பு உள்ளிட்ட பல்வேறு சர்வதேச தரப்புக்களும் அரசியல் அமைப்பிற்கு மதிப்பளிக்குமாறு இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்தி வரும் நிலையில் அரசாங்கம் அதனை உதாசீனம் செய்து வருவதாக தெரிவித்துள்ளார்.

சட்டவிரோத அரசாங்கம் மரபு ரீதியான ஊடகங்களை கட்டுப்படுத்தி வருவதாகக் குறிப்பிட்டுள்ளார். சிவில் சமூகத்துடன் ஊடாடக்கூடிய பிரதான கருவிகளில் ஒன்றாக தற்பொழுது இந்த சமூக ஊடகங்கள் அமையப் பெற்றுள்ளதாகவும், இந்த நிலையில் பயனர்கள் சுதந்திரமாக தங்களது கருத்துக்களை பதிவிடவும் பகிரவும் சந்தர்ப்பம் அளிக்கப்பட வேண்டுமென தெரிவித்துள்ளார். இலங்கையின் பிரதான அரசியல் கட்சி என்ற வகையில் நாட்டு மக்களின் நலனைக் கருத்திற் கொண்டு இந்தக் கோரிக்கையை முன்வைப்பதாக கபீர் ஹாசீம் தெரிவித்துள்ளார்.

தமது கட்சி ஜனநாயகத்திற்காக தொடர்ச்சியாக குரல் கொடுத்து வரும் ஓர் கட்சி என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சட்டவிரோதமான முறையில் இந்த அரசாங்கம் பயனர்கள் பற்றிய விபரங்களை கோரினால் அதனை நிராகரிக்குமாறும், பயனர்களின் அந்தரங்கத்தை உறுதி செய்யுமாறும் அக்கடிதத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (இ-4)

உ
சற்குருபாதம் துணை

## பொதுக்கூட்ட அழைப்பு

**இடம்:- கணேஷானந்த மகாதேவ சுவாமிகள் மண்டபம்.**
**காலம்:- 20.11.2018 செவ்வாய்க்கிழமை மாலை 4.30 மணி**

நிகழ்ச்சி நிரல்

- தலைமையுரை
- செயலாளர் அறிக்கை
- பொருளாளர் அறிக்கை
- அறங்காவலர்/நிர்வாக சபை உறுப்பினர்கள் தெரிவு
- ஆச்சிரம நிதி வளங்கள் பற்றிய ஆய்வு
- பண்ணிசை மண்டப பூர்த்தி பற்றிய ஆய்வு
- நன்றியுரை

சகல அங்கத்தவர்களும் மெய்யன்பர்களும் பங்குபற்றி சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்பேசிவம்
குருநாதன் பணியில் (C-4433)

மகாதேவ ஆச்சிரமம்
ஜெயந்தி நகர்
கிளிநொச்சி

உப தலைவர்:- ஆ.சிவநாதன்
செயலாளர்:- ச.ஸ்ரீமுருகன்

Regd No:- HA/04/KL 02 of 25.11.1980
Tel.No:- 021 324 3443, 077 459 4283, 077 431 9281

## மணமக்கள் தேவை

ஆண்:- 01.08.1986 பிரான்ஸ் PR
ஆண்:- 04.15.1978 பிரான்ஸ் PR
ஆண்:- 06.01.1979. M.Sc, B.Sc மாஸ்டர்
பெண்:- 02.07.1985 லண்டன் PR
ஆண்:- 30.03.1986 கனடா PR
ஆண்:- 18.04.1984 கனடா PR (6476)

தொடர்புகளுக்கு:- 077 133 1566




Pearson | University of East London | University of Wolverhampton

SCHOLARSHIP 50% FOR 150 MERITORIOUS STUDENTS

பின்வரும் கற்கைநெறிகளுக்கு BCAS Campus இன் 50% புலமைப்பரிசில் திட்டம்.
150 மாணவர்கள் கட்டமைக்கப்பட்ட பரீட்சையின் மூலம் தெரிவு செய்யப்படுவர்.

- HND — BUSINESS MANAGEMENT MARKETING | HRM — Leading to BA (Hons) from the UK Universities
- HND — QUANTITY SURVEYING — Leading to BSc (Hons) from the UK Universities
- HND — COMPUTING — Leading to BSc (Hons) from the UK Universities
- HND — BIOMEDICAL SCIENCE BIOTECHNOLOGY — Leading to BSc (Hons) from the UK Universities
- HND — CIVIL ENGINEERING — Leading to BEng / BSc (Hons) from the UK Universities
- LLB — LAW — Leading to LLB (Hons) from the UK Universities

UGC Recognized TVEC

BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES

For Registration SMS Your Name & NIC No. 076 395 9910 077 960 3753

காலம்: 26 NOVEMBER 2018 10.30 AM - 12.00 PM
இடம்: AUDITORIUM BCAS Jaffna Campus

BCAS Jaffna Campus,
#. 16, Point Pedro Road, Jaffna.

20 YEARS ISO 9001:2008 CERTIFIED

021 221 9910 | info@bcas.lk | www.bcas.lk | BCAS Ranked "Platinum Partner" No.1 once again

# சிறுவர் பாதுகாப்பு நடமாடும் சேவை





(யாழ்ப்பாணம்)

புன்னாலைக்கட்டுவன் ஈவினை கிழக்கு ஜே/209 கிராம உத்தியோகத்தர் பகுதியை உள்ளடக்கியதான சிறுவர் பாதுகாப்பு நடமாடும் சேவை கடந்த 15 ஆம் திகதி ஈவினை கலையரசி சனசமூக நிலையத்தில் இடம் பெற்றது.

இந் நடமாடும் சேவையில் சிறுவர் பாதுகாப்பு, பிறப்பு பதிவற்ற பிள்ளைகளுக்கான பதிவுகள், பாடசாலையில் இருந்து இடைவிலகிய மாணவர்கள், திருமண பதிவற்ற குடும்பங்கள் போன்ற விடயங்களை உள்ளடக்கி மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

இந்த செயற்றிட்டத்தை உடுவில் பிரதேச செயலகம், சி.சி.எச்.நிறுவனம் மற்றும் பொலிஸார் இணைந்து மேற்கொண்டிருந்தனர். குறித்த செயற்றிட்டம் யாழ்.மாவட்டத்தில் மூன்று மாதங்களாக இடம் பெற்று வருகின்றன. (இ-9)

# சோமவார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலயத்தில் சோமவார உற்சவம் நாளை 19 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 3 மணியளவில் நடைபெறும்.

இம் மாதத்தில் (கார்த்திகை) வரும் நான்கு திங்கட்கிழமைகளிலும் சோமவார உற்சவம் பூஜைகள் இடம் பெறும். (இ-5)






வலி.மேற்கு பிரதேச சபை உறுப்பினர் சி.ஸ்ரீஜீவாவின் கோரிக்கைக்கு இணங்க வட மாகாண சபை முன்னாள் உறுப்பினர் சபா குகதாஸின் நிதியொதுக்கீட்டில் நான்கு விவசாயிகளுக்கு தெளிகருவி, மண்வெட்டி என்பன வலி. மேற்கு பிரதேசசபை மண்டபத்தில் வைத்து வழங்கப்பட்டது.

# பண்பாட்டுப் பெருவிழா

நல்லூர் பிரதேச செயலகப் பேரவையும் கலாசார அதிகார சபையும் நல்லூர் பிரதேச செயலகமும் இணைந்து நடத்தும் நல்லூர் பிரதேச பண்பாட்டுப்பெருவிழா நாளை மறுதினம் 20 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நல்லூர் நடராஜா பரமேஸ்வரி திருமண மண்ட பத்தில் நடைபெறும்.(இ)

# சமயதீட்ஷை வழங்கல்

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலயத்தில் எதிர்வரும் 22 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8 மணியளவில் சமய தீட்ஷை வழங்கல் நடைபெறும். மேலதிக தகவல்களைப் பெற ஆலய நிர்வாகத்துடன் தொடர்பு கொள்ளலாம். (இ-5)


# நவமங்கை நிவாசத்திற்கு வாகனம் அன்பளிப்பு



(யாழ்ப்பாணம்)

கோப்பாய் மத்தியில் அமைந்துள்ள "நவமங்கை நிவாசம்" காப்பகத்திற்கு நயினாதீவு அன்னை சிவகாமி அறக்கட்டளையின் நிதி உதவியுடன் அதன் ஸ்தாபகர் சி.மகாதேவனால் வாகனம் ஒன்று அன்பளிப்பாக வழங்கப்பட்டது.(இ-5)

# கஜா புயலால் தென்மராட்சியில் 20 குடும்பங்கள் இடம்பெயர்வு





(சாவகச்சேரி)

கஜா புயலினால் தென்மராட்சி மக்களின் குறிப்பாக கடற்கரையோர மற்றும் விவசாய மக்களின் இயல்புநிலை பாதிக்கப்பட்டுள்ளது.

முருங்கை,வாழைத்தோட்டங்கள் மற்றும் நெற்பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ளன. அத்துடன் ஒரு சில இடங்களில் வீட்டுக் கூரைகளின் மேல் மரங்கள் சரிந்து விழுந்து பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

கஜா புயல் காரணமாக சாவகச்சேரி நகரை அண்டிய உதயசூரியன் மற்றும் மகிழங்கேணி கடற்கரையோர மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அவர்களின் வீட்டின் தகரக் கூரைகள் தூக்கி வீசப்பட்ட நிலையில் சுமார் இருபது குடும்பங்கள் அருகில் உள்ள சனசமூக நிலையத்தில் தஞ்சமடைந்துள்ளன. அவர்களுக்கான உணவு வசதிகளை நகரசபையினர் மற்றும் பிரதேச செயலகத்தினர் மேற்கொண்டு வருகின்றனர். (இ-30)

# "சின்மய நாதம்" வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.சின்மயா மிஷனில் காலாண்டுச் சஞ்சிகையான "சின்மய நாதம்" ஐப்பசி/ மார்கழி இதழ் வெளியீட்டு விழா இன்று மாலை 4 மணிக்கு இல 09, செட்டித்தெரு ஒழுங்கையில் அமைந்துள்ள சின்மயாமிஷன் பிரார்த்தனை மண்டபத்தில் இறை வணக்கத்துடன் ஆரம்பமாகும்.

அதனைத் தொடர்ந்து வரவேற்புரை இடம்பெறும். தலைமையுரையை திருமதி. துர்க்கா ஜெகதீபன் நிகழ்த்துவார்.

யாழ்.சின்மயா மிஷன் சுவாமி சிதாகாசானந்தா ஆசியுரை வழங்குவார். வெளியீட்டு உரையை யாழ்.மத்திய கல்லூரி ஆசிரியர் ஆறுமுகம் நவநீதகிருஷ்ணன் வழங்குவார்.

முதற்பிரதியை சுவாமிஜிடம் இருந்து பிரபல வர்த்தகர் கனகசபை அருள்நேசன் (சிவகணேசன் புடவையகம்) பெற்றுக்கொள்வார். (இ-7)

# கஜா புயலால் பாதிக்கப்பட்ட வாழைச் செய்கையாளர்களை பதிவு செய்ய நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் கஜா புயல் காரணமாக வாழைச் செய்கையாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வலி. கிழக்கு கோப்பாய் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பகுதியில் அதிகளவிலான பாதிப்புக்கள் ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக யாழ். மாவட்ட கமக்கார அமைப்பின் தலைவர் கே. தியாகலிங்கத்திடம் தொடர்பு கொண்டு கேட்டபோது பாதிப்புக்கள் ஏற்பட்ட விவசாயிகள் தத்தமது பிரிவுகளில் உள்ள விவசாய சம்மேளனத்தில் பாதிப்புக்கள் தொடர்பான பதிவுகளை மேற்கொள்ளுமாறும் இது தொடர்பாக யாழ். மாவட்ட உதவி விவசாய ஆணையாளருடன் கலந்துரையாடி மேலதிக நடவடிக்கை தொடர்பாக அறிவிப்பதாக தெரிவித்தார். (இ-5)

# இராசி பலன்

**மேடம்:** வழிபாட்டால் குதூகலம் காணவேண்டிய நாள், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, பயணத்தால் பலனுண்டு, பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**இடபம்:** செல்வாக்கு மேலோங்கும் நாள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, இனிய செய்திகள் வந்து சேரலாம், வாகன சுகமுண்டு, மனதில் இனம் புரியாத சந்தோசம் குடி கொள்ளும்.

**மிதுனம்:** குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், பேச்சைக் குறைத்து செயலில் தீவிரம் காட்டுவீர்கள், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், புதிய முயற்சிகள் கைகூடும்.

**கடகம்:** பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில அனுகூலமுண்டு, மறதியால் தவறிய காரியங்களை இன்று செய்து முடிப்பீர்கள், கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது.

**சிம்மம்:** வழிபாட்டால் மகத்துவம் காணவேண்டிய நாள், ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், நட்பொன்று பகையாகலாம், வாகனப் பழுதுச் செலவுகள் கூடும் நாள்.

**கன்னி:** சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், குதூகலம் தரும் பயணங்கள் இடம் பெறலாம், புதிய பொருட்களின் சேர்க்கையுண்டு, விருந்துகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**துலாம்:** தலைமைப் பதவிகள் உங்களை நாடி வரலாம், நன்மைகள் நடைபெறும் நாள், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், கௌரவமான நாள்.

**விருச்சிகம்:** மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், தொலைபேசி வழியில் வரும் செய்திகள் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும், பயணங்களால் பலனுண்டு.

**தனுசு:** பெற்றோர் மீது பிரியம் கூடும், எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள், மனதில் இனம் புரியாத சந்தோசம் குடிகொள்ளும், போசன சுகமுண்டு.

**மகரம்:** பிற இனத்தவரால் பெருமைகள் வந்து சேரலாம், சேமிப்பில் அக்கறை காட்டுவீர்கள், கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும், வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வீர்கள்.

**கும்பம்:** ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் இருந்த கவலைகள் தீரும், நண்பர்களால் வளர்ச்சி கூடும் நாள், பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும்.

**மீனம்:** திட்டமிட்ட காரியமொன்றில் திருப்பங்கள் ஏற்படலாம், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், குடும்ப இரகசியங்களை மற்றவர்களிடம் சொல்லாதிருப்பது நல்லது.

கிரகநிலை

| | | | |
|---|---|---|---|
| | | | |
| செவ், சந் | | | ராகு |
| கேது | | | |
| சனி | சூரி, குரு | புத. சுக் | |

சந்திராஷ்டமம்
மகம், பூரம்
காலை 8.57 மணிக்கு
மீன-சந்

**18.11.2018**

கார்த்திகை 02, ஞாயிற்றுக்கிழமை
சூரிய உதயம் காலை 6.08 மணிக்கு
தசமி முற்பகல் 11.46 மணிவரை
பூரட்டாதி பிற்பகல் 3.29 மணிவரை
சுபநேரம் 9.08-10.38 மணிவரை
இராகுகாலம் 4.38-6.08 மணிவரை
சித்தாமிர்தம்

வளவன்

# யா/ கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலையின் அதிபர்
# உயர்திரு. பேரம்பலம் தனபாலசிங்கம்
## அவர்கள் சிறந்த அதிபருக்கான "குரு பிரதீபா பிரபா" விருதையும் சிறந்த சமூக சேவைக்காக "அகில இலங்கை சமாதான நீதவான்" பதவியையும் பெற்றமையைப் பாராட்டி கௌரவிப்பு விழா



### ஆளுமைமிக்க அதிபர்

யாழ்.கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலையின் அதிபர் உயர்திரு. பேரம்பலம் தனபாலசிங்கம் அவர்களின் பாராட்டு விழாவிற்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். யாழ்ப்பாண மாவட்டத்தின் ஆரம்பப் பாடசாலைகளில் முன்னிலையில் இருக்கும் ஒரு பாடசாலையாக கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலையை வளர்த்தெடுத்த பெருமைக்குரியவர் அவராவார். பாடசாலையின் பௌதீகவள அபிவிருத்தியிலும் ஆளணி அபிவிருத்தியிலும் பெரும்பங்காற்றியது மட்டுமன்றி பரீட்சைப் பெறுபேற்றிலும் சாதனை படைக்கவைத்த பெருமை இவரையே சாரும். பாடசாலைச் சமூகத்துடன் மிக நெருக்கமான உறவைக் கொண்டிருக்கும் காரணத்தால் பாடசாலையை வேகமாக வளர்த்துச் செல்லும் ஆளுமை அவரிடம் இருப்பதை எவரும் மறுக்க முடியாது. இதன் காரணமாக பெருமளவான பெற்றோர்கள் தமது பிள்ளைகளை இப்பாடசாலையில் இணைத்துக் கொள்ள போட்டியிடுவதனைக் காணமுடிகின்றது.

உயர்திரு. தனபாலசிங்கம் அவர்கள் அதிபர் என்ற வகையில் இப்பாடசாலைக்கு நல்ல தலைமைத்து வத்தை வழங்கியதன் காரணமாகவே சிறந்த அதிபருக்கான " பிரதீபா பிரபா" என்ற விருதை அரசிடமிருந்து பெற்றுக் கொண்டமை வெளிப்படுத்துகின்றது. ஆசிரியர்களது ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்வதில் தனது ஆளுமையை வெளிக்காட்டுவது போன்றே பெற்றோர்கள் , பழைய மாணவர்கள் நலன் விரும்பிகள் என்ற வகையில் பாடசாலைச் சமூகத்தையும் அரவணைத்துச் செல்லும் ஆளுமையை அவரிடம் கண்டு வியந்திருக்கின்றேன். பாடசாலை மாணவர்களை கல்வியில் மட்டுமன்றி இணைச் செயற்பாடுகளிலும் ஒழுக்கத்திலும் மேலோங்கி நிற்பதற்கு வித்திட்ட வரும் இவரே என்பதனால் இவருக்கு அரசினால் வழங்கப்பட்டபட்டம் பெருமை பெறுகின்றது என்பதனை உறுதிபடக்கூற முடியும்.

கல்வியுலகில் சிறந்த அதிபர் என்ற பட்டத்தைப் பெற்றுக் கொண்டமை போன்றே சமூக சேவையிலும் அவர் சாதனை படைத்தமையை உறுதிப்படுத்தி " சமாதான நீதவான்" என்ற பதவி அரசினால் வழங்கப்பட்டமை பெருமைக்குரியதாகும். சமூகத்தவருக்கு அவர் ஆற்றிய சேவைக்கான பட்டமாகவும் பதவியாகவும் இது அமைந்திருக்கின்றது. இப்பதவியின் மூலமாக அவர் மேலும் சமூகத்துக்கு சேவையாற்ற முடியும் என நம்புகின்றேன். பல வழிகளிலும் பாராட்டப்பட வேண்டிய பன்முக ஆளுமை கொண்ட அதிபர் திரு. தனபாலசிங்கம் அவர்கள் நல்ல உடலாரோக்கியத்துடன் பல்லாண்டுகாலம் வாழவேண்டுமென வாழ்த்துவதுடன் எனது பாராட்டினையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**இ.இளங்கோவன்,**
**கௌரவ ஆளுநரின் செயலாளர்,**
**ஆளுநர் அலுவலகம், யாழ்ப்பாணம்.**



### சிறந்த அதிபர்

யாழ். கொக்குவில் இந்து ஆர ம்பப் பாடசாலை அதிபர் உயர் திரு பேரம்பலம் தனபாலசிங்கம் அவர்களின் கௌரவிப்பு விழாவிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வு அடைகின்றேன். அவர் இப் பாடசாலையின் கல்வி மற்றும் பௌதீகவளவளர்ச்சியிலும் மற்றும் சமூகத்தின் வளர்ச்சியிலும் மிகவும் பற்றுறுதியுடன் செயற்படும் ஒரு சிறந்த முன்னுதாரணமான அதிபர்.

இவர் தனது விடாமுயற்சியிலும் அயராத உழைப்பினாலும் யாழ். கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலையினை தொடர்ச்சியாக சிறந்த முறையில் கல்வி, விளையாட்டு, கலை பண்பாடு போன்ற சகல துறைக ளிலும் வளர்ச்சி பெறச் செய்ததன் காரணமாக சிறந்த அதிபருக்கானகுரு பிரதீபா பிரபா விருதினையும்சிறந்த சமூகசேவை மூலமாகஅகில இலங்கை சமாதான நீதவான் பதவியினையும் பெற்றுக் கொண்டுள்ளார் எனவேஅவரது சேவைதொடர்ந்துஎமதுமக்களுக்கும் பாடசாலைக்கும் தேவை என்பதுடன் அவர் இன்னும் பல பதவிகளையும்பட்டங்களையும்பெற்றுபல்லாண்டுகாலம்வாழ வாழ்த்துகின்றேன்.

**செ.ஜெகபாலன்,**
**தலைவர், மக்கள் நலன் பேணும் அமைப்பு.**



அதிபர் உயர்திரு பேரம்பலம் தனபாலசிங்கம் அவர்கள் கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலையின் கல்வி, பௌதீக வளம் இரண்டையும் இரு கண்களாக கருதி இரண்டிலும் பாடசா லையை உயர வைத்தவர். பாடசாலையின் இயற்கை வனப்பை மெருகூட்டி பாடசாலையின் கல்வி நிலையை உயர் மட்டத்தில் பேணி வருகின்றார். பாடவிதானத்தில் தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் வருடா வருடம் சித்தி வீதத்தை உயர வைத்தவர். சமூக பணியிலும் தன்னை அர்ப்பணித்து செயற்படுவார்.

இவர் யாழ். வலயத்தில் முன் மாதிரியான அதிபராகச் செயற்பட்டதன் காரணத்தினால் அதி மேதகு ஜனாதிபதி யின்- 2018 பிரதீபா பிரபா விருது பெற்றார். சமூக சேவைக்காக அகில இலங்கை சமாதான நீதவான் பதவி யையும் பெற்றார். இவரின் சேவைகள் மென்மேலும் தொடர இறையருள் வேண்டி வாழ்த்துகின்றேன்.

**ச.வாமதேவன், செயலாளர், விழாக்குழு.**



**இடம்:- பிரதான மண்டபம்**
**யா/ கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை**
**காலம்:- 18.11.2018 ஞாயிற்றுக்கிழமை**
**நேரம்:- காலை 9.00 மணி**
**தலைவர் பேராசிரியர் க.தேவராஜா**

**விழாக்குழு**



### ஆசிச் செய்தி

ஒரு மனிதன் தனது உயர்ந்த பண்புகள் மற்றும் சேவையால் சமூகத்தால் பாராட்டப்படுகின்றான். அந்த வகையில் யா/ கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலையின் அதிபர் திரு. பேரம்பலம் தனபாலசிங்கம் அவர்கள் தனது தன்னலமற்ற சேவையாலும் அன்புடனும் பண்புடனும் தனது கடமைகளைச் செவ்வனே நிறைவேற்றும் பண்பாலும் ஆன்மீக செயற்பாடுகளில் ஈடுபடுவதுடன் மாணவர்களையும் அவற்றில் ஈடுபடுத்தி வருவதாலும் கௌரவப்பட்டம், பதவிகளை பெற்றுள்ளார்.

இவர்சிறந்தஅதிபருக்கான "குருபிரதீபாபிரபா" விருதினையும்சிறந்த சமூக சேவைக்காக அகில இலங்கை சமாதான நீதவான் பதவியையும் பெற்றுள்ளமையைப் பாராட்டி பாடசாலை சமூகத்தாலும் பொது அமைப்புக்களாலும் இன்று கௌரவிப்புவிழா நடத்தப்படுவது சிறப்புக்குரியது.

விழா நாயகன் நீடூழி காலம் வாழ்ந்து சிறந்த சேவையாற்றவும் விழா சிறப்பாக நடைபெறவும் அது குறித்து வெளிவரும் மலர் சிறப்பாக அமையவும் ஆசிவேண்டி எல்லாம் வல்ல நல்லைக் கந்தப் பெருமானையும் பூஜ்ய குருதேவரையும் பிரார்த்திக்கின்றோம்.

**இறைபணியில்**
**சுவாமி சிதாகாசானந்தா,**
**சின்மயாமிஷன், யாழ்ப்பாணம்.**



### வாழ்க வளமுடன்

யாழ்.கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலையின் வரலாற்று அதிபர்களில் எவருடனும் ஒப்பிட முடியாத வரலாற்று சாதனை படைத்த அதிபராக உயர்திரு பேரம்பலம் தனபாலசிங்கம் விளங்குவது யாழ்ப்பாண கல்வி வலயத்திற்கு உயர்பெருமை சேர்க்கும் விடயமாகும். அவரிடம் உயர் நிர்வாகத் திறன், சமூகமயமாக்கல்திறன், நேர்மை, பேச்சுவன்மை, ஆசிரியர்களை பாடசாலை கலாசாரத்துக்கு ஏற்ப மாற்றும் திறன், மாணவர்களோடு மாணவர்களாக பழகும்திறன், அதிகாரிகள் மற்றும் அரசியல்வாதிகளை மதிக்கும் திறன் மற்றும் இவையாவற்றுடன் தகுதி ரீதியாக தன்னை அறிவு ரீதியாக வளர்க்கும் திறன் இவையாவும் இவரிடம் 100 வீதத்திற்கு மேல் உள்ளது என்பதை தரவு ரீதியாக என்னால் நிரூபிக்கமுடியும் என்ற வகையிலேயே அவருக்கு கிடைத்த சிறப்பு பட்டங்களுக்கான கௌரவிப்பு நாளில் மனதார வாழ்த்துகின்றேன். அதிபர் அவர்களை இப்பாடசாலைக்கு அதிபராக்கும் போது எனது சிபார்சினை அன்று வழங்கியது மிகப்பெரும் சரி என்பதனை இன்று எண்ணி மகிழ்கின்றேன். வாழ்த்து கின்றேன்.

**திரு.சி.மாணிக்கராசா,**
**பொது நிர்வாக பிரதிக்கல்விப்பணிப்பாளர்,**
**வலயக்கல்வி அலுவலகம்,**
**யாழ்ப்பாணம்.**

**விளம்பர அனுசரணை**
**முருகன் புடைவையகம்**
**இல. 06, பெரியகடை வீதி,**
**யாழ்ப்பாணம்.**



### வாழ்த்துச் செய்தி

பெருமைக்குரிய அதிபர் உயர்திரு. பேரம்பலம் தனபாலசிங்கம் அவர்கள் கொக்குவில் இந்து ஆரம்பப்பாடசாலையின் அதிபராக இருப்பது எம் எல்லோருக்குமே பெருமைக்குரிய விடயமாகும். கொக்குவில் இந்து ஆரம்பப் பாட சாலை எதிர்நோக்கிய எல்லாச் சவால்களையும் வெற்றி கொண்டு அதனை யாழ்.மாவட்ட முன்னணி ஆரம்பப் பாடசாலைகளில் ஒன்றாக மாற்றிய பெருமை அவரையே சாரும். அப்பாடசாலையின் பௌதீகவள அபிவிருத்தியிலும் மனிதவள அபிவிருத்தியிலும் அவர் காட்டிய அக்கறையே பாடசாலையின் முக்கிய அபிவிருத்திச் சுட்டியான பெறுபேறுகளின் அதிகரிப்புக்கும் அவரே வித்திட்டவர் எனக் கூறினால் அதில் மிகையொன்றும் இல்லை. இன்று யாழ். மாவட்ட த்தின் ஒரு மாதிரிப் பாடசாலையாக தெரிவு செய்யப்படும் அளவுக்கு இப்பாடசாலையின் அபிவிருத்திக்கு காரணமாக அமைந்தவர் உயர் திரு.தனபாலசிங்கம் எனக் கூறினால் அதில் இரு கருத்துக்களுக்கு இடமில்லை.

உயர்திரு. தனபாலசிங்கம் அவர்களின் ஆளுமை இப்பாடசாலைச் சமுகத்தை ஒன்றிணைத்தமையேயாகும். பெற்றோர், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் என பாடசாலையுடன் தொடர் புடையவர்களை ஒத்த கருத்துடையவர்களாக மாற்றிய பெருமை இவரையே சாரும். என்றுமே நேர் கணிய சிந்தனை கொண்டவராக அதிபர் காணப்படுவதனால் எல்லோருடனும் அன்பாகப் பழகும் அவருடைய இயல்பு மக்கள் மயப்படுத்தப்பட்ட அதிபராக அவரை மாற்றியுள்ளது. அவருடைய தலைமைத்துவம் பாடசாலையின் வளர்ச்சி நோக்கியதாக இருக்கும் காரணத்தால் கல்வித்திணைக்களத்தின் உயர் அதிகாரிகள் முதல் பாடசாலையில் பணியாற்றும் சிற்றூழியர் வரை அவரது நிர்வாகத்துக்கு பூரண ஒத்துழைப்பு வழங்குவர்களாக இருப்பதனை அவதானிக்க முடியும்.

உயர்திரு. தனபாலசிங்கம் அவர்கள் பதவியேற்ற தன் பின்னர் பாடசாலையின் சூழலில் ஏற்பட்ட மாற்றத்தை எம்மால் மகிழ்ச்சியுடன் நோக்க முடியும். அவர் பாடசாலையின் அபிவிருத்திக்கென எத்தகைய உதவியைக் கேட்டாலும் எவரும் மறுக்காமல் அதனை வழங்குவதற்கு ஆயத்தமாக இருப்பதே அவர் வெற்றிக்கு காரணமாகும். இதுவே அவருக்கு "பிரதீபா பிரபா" என்ற சிறந்த அதிபருக்கான விருதைப் பெற்றுக் கொடுத்துள்ளது என்பதில் ஐய மில்லை. அதுபோன்றே அவரது சமூகசேவைக்குக் கிடைத்த அங்கீகாரமாக "சமாதான நீதிவான்" பட்டம் அமைந்துள்ளது. இவற்றின் அடிப்படையில் சமூகம் போற்றும் ஒரு அதிபராக இருந்து தனது எதிர்கால வாழ்வில் எல்லா வளங்களும் கைவரப் பெற்ற ஒரு பெருமகனாக வாழவேண்டும் என வாழ்த்துவதுடன் இறைவனின் கருணையால் அவரும் அவரது குடு ம்பமும் பெயருடனும் புகழுடனும் வாழப் பிரார்த்திக்கின்றேன். "வாழ்க வளமுடன்" என வாழ்த்தும்.

**பேராசிரியர் க. தேவராஜா**
**தலைவர்,**
**சுற்றுலாப்பணியகம், வடமாகாணம்.**



### வாழ்த்துச் செய்தி

யா/கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலையின் அதிபர் திரு. பே.தனபாலசிங்கம் அவர்கள் நல் அதிபர் விருது பெற்றமை மிகவும் மகிழ்ச்சியானதாகும்.

காலத்தின் தேவையறிந்து பாடசாலையின் வளங் களை ஒருங்கிணைத்து எமது மாணவர்களை மாவட்டம், மாகாணம் மற்றும் தேசிய மட்டங்களில் பிரகாசிக்க செய்து பாடசாலையினதும் எமது இளம் சந்ததியினதும் நல் வழிகாட்டியாக நிகழ்கின்றமை பாராட்டுக்குரியன. இவர் மென்மேலும் பல விருதுகளைப் பெற்று தனது சேவையினை எமது பாடசாலையினதும் இளம் சமுதாயத்தினதும் வளர்ச்சிக்கு வழங்க வேண்டும் என்று வாழ்த்துகின்றேன்.


**ந.ஜெகன், செயலாளர்,**
**பாடசாலை அபிவிருத்திக்குழு.**
**யாழ்.கொ.இ.ஆ.பாடசாலை.**

(சு-4444)

## இலங்கை வரலாற்றில் முதன் முறையாக

# 4 கோடியே 30 இலட்சம் ரூபாய் பெறுமதியான 7 கிலோ 212 கிராம் தங்க ஆபரணங்கள் பறிமுதல்

## சிங்கப்பூர் பிரஜை சிக்கினார்



(கொழும்பு)

சட்டவிரோதமான முறையில் இலங்கைக்குள் ஒருதொகை தங்க ஆபரணங்களைக் கடத்திவர முற்பட்ட சிங்கப்பூர் பிரஜையை கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து போதைப்பொருள் தடுப்புப் பிரிவினர் கைது செய்துள்ளதாக சுங்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

சிங்கப்பூரைச் சேர்ந்த 45 வயது வியாபாரியே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளதாக சுங்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

நேற்றுக் காலை சிங்கப்பூலிருந்து கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த குறித்த நபரின் நடவடிக்கையில் சந்தேகமடைந்த விமான நிலைய சுங்க அதிகாரிகள் அவரின் பயணப் பொதியைச் சோதனையிட்ட போது மறைத்து வைத்திருந்த ஒரு தொகை தங்க ஆபரணங்களைக் கைப்பற்றியுள்ளனர்.

கைச்சங்கிலி 229, கழுத்து மாலை 175, வைபவங்களுக்கு அணியும் மாலை 88, கை வளையல்கள் 16 உட்பட பதக்கம் 6 ஆகிய தங்க ஆபரணங்களை பயண பொதியிலும் சந்தேக நபர் அணிதிருந்த காற்சட்டை பையிலும் மறைத்துக் கொண்டு வந்த நிலையில் போதைப் பொருள் தடுப்புப் பிரிவினரால் கைப்பற்றபட்டதோடு இலங்கை வரலாற்றிலே அதிகமான தொகை தங்க ஆபரணங்கள் கைப்பற்றப்பட்டது எனவும் தெரியவருகிறது.

சுமார் 4 கோடியே 30 இலட்சம் ரூபா பெறுமதியான 7 கிலோ 212 கிராம் நிறைகொண்ட தங்க ஆபரணங்களை குறித்த நபரிடமிருந்து சுங்க அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்டவரை மேலதிக விசாரணைகளுக்குட்படுத்தியுள்ளதாக விமான நிலைய சுங்க அதிகாரிகள் தெரிவித்தனர். (இ-4)

## பைபிளால் கடுமையாக தாக்கப்பட்டார் மங்கள

(கொழும்பு)

நாடாளுமன்றத்தில் உறுப்பினர் மங்கள சமரவீரவை இலக்கு வைத்து தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

மகிந்த ராஜபக்ஷ தரப்பினரால் நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் சபாநாயகரைத் தொடர்ந்து அதிக எதிர்ப்பு மங்கள சமரவீரவை இலக்கு வைத்தே மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

சபாநாயகர் தனது தீர்மானத்தை அறிவித்த பின்னர் நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவான உறுப்பினர்கள் மீது அச்சுறுத்தல் மற்றும் தாக்குதல் நடத்த நடவடிக்கை மேற் கொண்டுள்ளனர்.

இங்கு மங்கள சமரவீரவை ஆபாச வார்த்தைகளில் திட்டி மகிந்த அணியினர், அவர் மீது புத்தகங்களினால் தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.

ஒரு சந்தர்ப்பத்தில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் பெரிய புத்தகம் ஒன்று மங்களவின் தலையில் விழுந்துள்ளது. உடனடியாக அந்த புத்தகத்தை எடுத்த மங்கள, இந்த புத்தகத்தால் தாக்கும் அளவிற்கு உங்கள் நிலைமை மோசமடைந்துள்ளதாக மங்கள சமரவீர, தினேஷ் குணவர்த்தனவிடம் தெரிவித்துள்ளார்.

என்னாலும் இந்தப் புத்தகத்தால் திருப்பி அடிக்க முடியும். எனினும் நான் புத்தகத்தை மதிக்கிறேன். எனினும் இப்படி நடந்து கொள்ள வேண்டாம் என அவர் தெரிவித்துள்ளார்.

பின்னர் அந்தப் புத்தகத்தை எடுத்து பாதுகாப்பாக அவர் வைப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டார். எனினும் இறுதியிலேயே அந்த புத்தகம் பைபிள் எனத் தெரியவந்துள்ளது. (இ-4)

## முழு உலகமுமே எமது பாராளுமன்ற செயற்பாடுகளை அவதானித்துள்ளது

### ஹர்ச டி சில்வா கவலை



(கொழும்பு)

பாராளுமன்றில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவத்தை முழு உலகமும் அவதானித்துள்ளதென ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற அமளிதுமளியின் பின்னர் ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் அதன் பங்காளிக் கட்சிகளுக்கிடையிலான சந்திப்பென்று பாராளுமன்றக் கட்டடத் தொகுதியில் இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றி ஹர்ச டி சில்வா குழப்ப நிலையைத் தொடர்ந்து பாராளுமன்றத்தை முன்னோக்கிக் கொண்டு செல்வது கடினம்.

இதேவேளை, பாராளுமன்றில் இடம்பெற்ற சம்பவத்தை முழு உலகமும் அவதானித்துள்ளது.

அத்துடன் பாராளுமன்றில் பெரும்பான்மை யார் பக்கம் உள்ளது என்பது தற்போது புலனாவதாகவும் கட்சித் தலைவர்களை ஜனாதிபதி சந்திப்பார் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-4)

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள் 2018.11 18

- ❖ 1903-பனாமா கால்வாய்க்கு தனிப்பட்ட உரிமையை ஐக்கிய அமெரிக்காவுக்கு வழங்கும் உடன்பாடு பனாமாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் கையெழுத்திடப்பட்டது.
- ❖ 1978-கயானாவில் ஜிம் ஜோன்ஸ் என்பவரின் மக்கள் கோயிலில் இடம்பெற்ற கொலை மற்றும் தற்கொலை நிகழ்வுகளில் 270 குழந்தைகள் உட்பட 918 பேர் இறந்தனர்.
- ❖ 1991-தமிழீழ காவல்துறையின் முதலாவது அணி பயிற்சி முடிந்து வெளியேறியது.
- ❖ 2002-சென்னை புறநகர் பேருந்து நிலையம் கோயம்பேட்டில் திறக்கப்பட்டது.
- ❖ 2006-ஈழப்போர்: மன்னார்க் கடற்பரப்பில் இடம்பெற்ற மோதலில் இலங்கைக் கடற்படையினர் 10 பேர் கொல்லப்பட்டு 3 விடுதலைப் புலிகள் காயமடைந்தனர்.

**பிறப்புகள்**

- ❖ 1888-திருமலை கிருஷ்ணமாச்சாரி, இந்திய யோகா ஆசிரியர் (இ. 1989)
- ❖ 1910-பதுகேஷ்வர் தத், இந்திய விடுதலைப் போராட்ட செயற்பாட்டாளர் (இ. 1965)
- ❖ 1929-பி.எஸ்.சரோஜா, தமிழகத் திரைப்பட நடிகை
- ❖ 1945-மகிந்த ராசபக்ச, இலங்கையின் 6 ஆவது அரசுத்தலைவர்
- ❖ 1965-பிரேம்குமார் குணரத்தினம், இல்ங்கை இடதுசாரி அரசியல் செயற்பாட்டாளர்
- ❖ 1967-ஷோபாசக்தி, இலங்கை-பிரான்சிய தமிழ்ப் படைப்பாளி, நடிகர், போராளி
- ❖ 1982-நேகா பாசின், இந்தியப் பாடகி, பாடலாசிரியர்
- ❖ 1984-நயன்தாரா, தென்னிந்தியத் திரைப்பட நடிகை

**இறப்புகள்**

- ❖ 1908-வி.பாஷ்யம் ஐய்யங்கார், இந்திய வழக்கறிஞர், நீதியாளர் (பி. 1844)
- ❖ 1936-வ.உ.சிதம்பரம்பிள்ளை, இந்திய விடுதலைப் போராட்ட வீரர் (பி. 1872)
- ❖ 1962-நீல்சு போர், நோபல் பரிசு பெற்ற தென்மார்க்கு இயற்பியலாளர் (பி. 1885)
- ❖ 1982-தி.ஜானகிராமன், தமிழக எழுத்தாளர் (பி. 1921)
- ❖ 2013-செம்பனார்கோயில் எஸ்.ஆர்.டி.வைத்தியநாதன், தமிழக நாதசுவரக்கலைஞர் (பி. 1929)
- ❖ 2014-சி.ருத்ரைய்யா, இந்திய இயக்குநர், தயாரிப்பாளர் (பி. 1947)
- ❖ 201-கா.மீனாட்சிசுந்தரம், தமிழறிஞர் (பி. 1925)
- ❖ 2017-திருமலை பத்மநாதன், ஈழத்து இசையமைப்பாளர்

**சிறப்பு நாள்**

- ❖ விடுதலை நாள் (லாத்வியா, உருசியாவிடம் இருந்து 1918)
- ❖ விடுதலை நாள் (மொரோக்கோ, பிரான்சு, மற்றும் எசுப்பானியாவிடம் இருந்து 1956)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | மருதனார் மடம் | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 150 | 200 | 200 | 240 |
| உருளைக்கிழங்கு | 140 | 110 | 130 | 120 |
| பச்சைமிளகாய் | 160 | 180 | 160 | 250 |
| தக்காளி | 200 | 280 | 300 | 320 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 50 | 30 | 40 |
| கோவா | 170 | 180 | 200 | 200 |
| கரட் | 200 | 280 | 250 | 400 |
| பூசணி | 60 | 60 | 40 | 80 |
| புடோல் | 120 | 140 | 120 | 120 |
| வாழைக்காய் | 60 | 60 | 60 | 100 |
| சின்ன வெங்காயம் | 120 | 160 | 120 | 120 |
| பெரிய வெங்காயம் | 130 | 120 | 110 | 120 |
| பாகற்காய் | 350 | 300 | 250 | 300 |
| வெண்டிக்காய் | 120 | 160 | 110 | 160 |
| கருணைக் கிழங்கு | 60 | 60 | 60 | 80 |
| பயற்றங்காய் | 300 | 240 | 200 | 240 |
| லீக்ஸ் | 140 | 280 | 200 | 240 |
| பீற்றூட் | 120 | 140 | 70 | 200 |
| கறிமிளகாய் | 160 | 280 | 250 | 300 |
| முருங்கைக்காய் | 400 | 400 | 200 | 300 |
| போஞ்சி | 300 | 320 | 250 | 320 |
| கத்தரிதம்புள்ள | 150 | 200 | 190 | 200 |
| கீரை-1பிடி | 50 | 50 | 30 | 60 |
| தேசிக்காய் | 400 | 400 | 450 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 60 | 40 | 25-40 |
| இராசவள்ளி | 160 | 300 | — | 240 |
| வெங்காயப்பூ | — | — | 140 | — |
| முள்ளங்கி | 100 | — | 30 | 160 |
| பொன்னாங்காணி | 40 | 50 | 20 | 50 |
| வல்லாரை | 50 | 20 | 15 | 25 |
| ஈரப்பலா | 100 | 50 | 120 | 120 |

# எம்.பிக்களிடம் எவ்வாறு ஒழுக்கத்தை எதிர்பார்ப்பது

## ரோஹித எம்.பி.கேட்கிறார்



(கொழும்பு)

நாட்டில் சபாநாயகர் என்பவர் மிகவும் கௌரவத்துக்குரியவராவார்.

ஆனால் கரு ஜெயசூரிய போலியான ஆவணங்களை வைத்து ஜனாதிபதிக்கு கடிதமொன்றினை அனுப்பியுள்ளார்.

பாராளுமன்றத்தில் பிரதானமானவரான சபாநாயகரே இவ்வாறு செயற்படும் போது ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களிடம் எவ்வாறு ஒழுக்கத்தினை எதிர்பார்க்க முடியும்.

சபாநாயகரின் இந்த செயற்பாட்டுக்கு எதிராக நாம் சட்ட ரீதியான நடவடிக்கை எடுப்பதற்கும் தயாராகவே உள்ளோம் என பொதுஜன பெரமுனவின் செயற்பாட்டாளர் பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்த்தன தெரிவித்தார்.

பத்தரமுல்ல - நெலும் மாவத்தையில் அமைந்துள்ள பொது ஜன பெரமுன காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இதனைத் தெரிவித்தார். (இ-4)

# மீளவும் பாடசாலையை இயங்க வைக்குமாறு கிராம மக்கள் கோரிக்கை



(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி கல்வி வலயத்திற்குட்பட்ட மாசேரி வரணி கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள யாழ். ஸ்தான அமெரிக்க மிஷன் தமிழ்க் கலவக் பாடசாலையானது நாட்டில் இடம்பெற்ற யுத்த சூழ்நிலை காரணமாக மக்கள் இடம்பெயர்ந்து பிற பிரதேசங்களுக்குச் சென்றமையால் 2000 ஆம் ஆண்டு மூடப்பட்டது.

பின்னர் மக்கள் மீளவும் குடியமர்ந்து தமது அன்றாட நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்ற போதிலும் இதுவரைக்கும் இப்பாடசாலை மீளவும் இயக்கப்பட வில்லை.

இதனால் இக்கிராமத்து பிள்ளைகள் அயல் பிரதேச பாடசாலைகளுக்கும் நகரப் பாடசாலைகளுக்கும் சென்று கல்வி கற்று வருகின்றனர்.

மேலும் இப்பாடசாலையின் ஓடுகள், மரங்கள் போன்றனவும் இனந்தெரியாதோரால் கழற்றி செல்லப்பட்டுள்ளதாக கிராம மக்கள் தெரிவிப்பதோடு இப்பாடசாலை அமைந்துள்ள காணியினை தனியார் ஒருவர் அபகரிப்பதற்கான நடவடிக்கையை மேற்கொண்ட போது கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் தலையிட்டு பிரதேச செயலாளருக்கு தெரியப்படுத்தி அந்த நடவடிக்கை தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது.

எனவே ஒரு கிராமத்தின் கல்வி வளர்ச்சிக்கு பாடசாலை மிகவும் முக்கியமானதாகும். இதனைக் கருத்தில் கொண்டு மீளவும் இப்பாடசாலையை இயங்க வைப்பதற்கான நடவடிக்கையினை வடமாகாண கல்வியமைச்சு மேற்கொள்ள வேண்டுமென கிராம மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (இ-105)

# பாராளுமன்றத்தில் வன்முறை அரச சொத்துகளுக்குச் சேதம்

(கொழும்பு)

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவத்தினால் அரச சொத்துக்கு பாரிய சேதம் ஏற்பட்டுள்ளது.

எதிரணியினருக்கு எதிராக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி உறுப்பினர்கள் மோசமாக செயற்பட்டமையினால் பாரிய சேதம் ஏற்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்திலுள்ள மைக்ரோபோன், வாக்கெடுப்பு மின் கட்டமைப்பு, உறுப்பினர்களின் ஆசனங்கள் உட்பட பல சொத்துக்களுக்கு பாரிய பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

அந்த சேத விபரத்தை மதிப்பிட்டு பழுது பார்க்கும் நடவடிக்கை தற்போது முன்னெடுக்கப்பட்டு வருவதாக நாடாளுமன்ற தகவல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அரச சொத்துகளுக்கு மேலதிகமாக நாடாளுமன்ற ஊழியர் சபை மற்றும் பாதுகாப்பு பிரிவு ஊழியர்கள் பலர் கடந்த வியாழக்கிழமை காயமடைந்துள்ளனர்.

சபாநாயகர் ஆசனத்திற்கு அருகில் கூடி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி உறுப்பினர்களின் கைக்ரோபோன், மின் உபகரணங்களை உடைக்கும் காட்சி மற்றும் சபைக்கு நுழைந்த பொலிஸாரை தாக்கிய காட்சிகள் கடந்த வியாழக்கிழமை வெளியாகியிருந்தன.

பொதுவாக நாடாளுமன்றம் ஒருநாள் கூடுவதற்கான முழுமையான செலவு 20 மில்லியன் ரூபாய் என குறிப்பிடப்படுகின்றது.

கடந்த வியாழக்கிழமை வன்முறை சம்பவம் காரணமாக 20 மில்லியன் ரூபாவுடன் மேலும் பல மில்லியன் ரூபா பணம் செலவாகும் என தெரிய வருகிறது.

இதற்கான அனைத்து செலவினங்களும் மக்கள் மீதே சுமத்தப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-4)

# பிரதிநிதி என்ற கண்ணியத்தை களங்கப்படுத்தியவர்களை நிராகரியுங்கள் -மார்ச் 12 அமைப்பு

(கொழும்பு)

எம்மை அடைமானம் வைத்து எமது பெயரில் ஜனநாயகத்தையும் மக்கள் பிரதிநிதியின் கண்ணியத்தையும் களங்கப்படுத்திய மக்கள் பிரதிநிதிகளை வீரர்களாக உயர்த்திப்பிடிக்காமல் கட்சி நிற பேதமின்றி அவர்களை நிராகரிப்பது பிரஜைகளின் பொறுப்பு என்பதை வலியுறுத்துவதாக மார்ச் 12 அமைப்பு தெரிவித்துள்ளது.

அரசியல் கட்சிகள் தத்தமது தேவைக்கு அமைய அரசியலமைப்பையும் சட்டத்தையும் தமது விருப்பத்தின் படி பொருள் விளக்கம் அளிப்பதை தவிர்த்துக்கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்துள்ளது.

தமது தனிப்பட்ட நலனுக்காக அடிக்கடி தாவுகின்ற ஜனநாயக வழியில் பிரச்சினைகளை தீர்க்கமுடியாத ஒழுக்கக்கேடான அரசியல் வாதிகளை நாட்டின் அதி உயர் பீடத்திற்கு தெரிவுசெய்துள்ளதையிட்டு நாம் வெட்கப்படவேண்டும் எனவும் அவ்வமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது. (இ-4)

# பதவியைத் துறக்க தயாராக இருந்தேன்

## மகிந்த தெரிவிப்பு



(கொழும்பு)

பாராளுமன்றில் சட்ட ரீதியாக நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டுவரப்பட்டிருக்குமாயின் பதவியை துறக்க தயாராக இருந்ததாக நேற்று முன்தினம் இடம்பெற்ற சமய நிகழ்வொன்றில் கலந்து கொண்ட பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர்கள் அவர்களது எதிர்ப்புக்களை வெளிப்படுத்துவது பிரச்சினையல்ல என்றும் ஆனால் பாராளுமன்றிற்கு கத்தி போன்ற கூரிய ஆயுதங்களை எடுத்து வருவதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆனாலும் சபாநாயகர் அதற்கு எதிராக எந்தவொரு சட்ட நடவடிக்கையோ ஒழுக்காற்று நடவடிக்கையோ எடுக்கவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

சட்டவிரோதமாக பாராளுமன்றில் தொடர்ந்து செயற்படுவார்களாயின் எமது தரப்பினரும் அதற்கு ஏற்ற வகையில் பதில் வழங்குவார்கள் எனவும் மகிந்த தெரிவித்துள்ளார். (இ-4)

# கூட்டமைப்புடன் மீண்டும் இணைய வேண்டிய அவசியம் எனக்கு இல்லை -வியாழேந்திரன்

(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தனுடன் பேச வேண்டிய அவசியமோ, கூட்டமைப்புடன் மீண்டும் இணைய வேண்டிய அவசியமோ எனக்கு இல்லை என பிரதியமைச்சர் எஸ். வியாழேந்தின் தெரிவித்துள்ளார்.

அத்துடன், மக்களாலே தான் நான் நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டேன், மக்கள் கேட்டுக் கொண்டதனால் தான் பிரதியமைச்சர் பதவியையும் பெற்றுக் கொண்டேன் என அவர் தெரிவித்தார்.

பிரதியமைச்சர் வியாழேந்திரன் நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே இந்த விடயத்தை கூறியுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நான் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த போது என்ன செய்தேன் என்பது எனக்கு வாக்களித்த என் உறவுகளுக்கு நன்றாக தெரியும். அந்த மக்களின் தேவை என்ன என்பதையும் அதற்கு என்ன செய்ய வேண்டும் என்பதையும் நான் நன்கு அறிந்து தான் செய்கின்றேன்.

வெறும் வெற்று பேச்சுகளையும், பின்கதவு முயற்சிகளையும் விட்டு விட்டு எம் மக்களுக்கு எம்மால் என்ன செய்ய முடியும் என்பதைப் பற்றி நாம் சிந்திக்க வேண்டும். அதன் படியே நான் சிந்தித்துச் செயற்பட்டேன். தொடர்ந்தும் செயற்படவுள்ளேன்.

எனக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்போடு சேர்ந்து மீண்டும் வாக்குக் கேட்க விருப்பமும் இல்லை. அதற்கான எண்ணமும் இல்லை.

காரணம் கூட்டமைப்போடு இருந்து மக்களின் தேவைகளை முழுமையாக நிறைவேற்ற முடியாத குற்ற உணர்வு எனக்கு இருக்கின்றது.



கூட்டமைப்பை சொல்லி மக்கள் முன்சென்று வாக்குக் கேட்க மனச்சாட்சி எனக்கு இடம்கொடுக்கவில்லை. இந்த நிலையில் நான் எவ்வாறு கூட்டமைப்போடு இணைய விரும்புவேன்.

ஊடகங்கள் சில நான் கூட்டமைப்போடு மீண்டும் இணைய முற்படுவதாகவும், அதற்கான பேச்சுவார்த்தைகளை சம்பந்தனுடன் முன்னெடுத்ததாகவும் செய்திகள் வெளியிட்டன.

இது முற்றிலும் பொய்யான செய்தியாகும். சம்பந்தனுடன் பேச வேண்டிய அவசியமோ, கூட்டமைப்புடன் மீண்டும் இணைய வேண்டிய அவசியமோ எனக்கு இல்லை.

ஊடக தர்மத்திற்கு உட்பட்டு நடந்துகொள்ளும் ஊடகவியலாளர்கள் இருபக்க நியாயத்தை அறிந்து செய்திகளை வெளியிட வேண்டும் எனப் பணிவாகக் கேட்டுக் கொள்கின்றேன் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-4)

# பாராளுமன்றில் வீசப்பட்டது மிளகாய்த் தூள் இல்லை குளிர்பானம் என்கிறார் எஸ்.பி



(கொழும்பு)

நேற்று முன்தினம் இடம்பெற்ற நாடாளுமன்ற அமர்வில் ஆளும் கட்சி உறுப்பினர்களால் வீசப்பட்டதிரவம் தொடர்பில் பல செய்திகள் வெளிவருகின்றன.

முதலில் இது குளிர்பானம் என நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்திருந்தார்.

ஆனால் நேற்று முன்தினம் மிளகாய் கரைசலே வீசப்பட்டது என அனைவரும் தெரிவித்திருந்தனர்.

இதில் முன்னாள் அமைச்சர் காமினி ஜெயவிக்ரம பெரேரா கடுமையாக பாதிக்கப்பட்டு இருந்தார்.

இந்த நிலையில், குறித்த திரவம் மிளகாய் கரைசல் இல்லை, குளிர்பானம் மற்றும் எலுமிச்சையின் கலவை என எஸ்.பி. திசாநாயக்க கூறியிருந்தார்.

ஆனால் அது மிளகாய் கரைசல் தான் என பாதிக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும் பொலிஸ் தலைமையகம் இதை உறுதிப்படுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (இ-7)

# பாராளுமன்றத்திற்குள் பெரும் மிலேச்சத்தனம்

## விஜித ஹேரத் காட்டம்

(கொழும்பு)

பாராளுமன்றத்தின் செயற்பாடுகள் மிகவும் அடாவடித்தனம் நிறைந்ததாக காணப்பட்டன. நாடு மட்டுமன்றி உலகமே இலங்கைப் பாராளுமன்றத்தை திரும்பிப் பார்க்கும் வகையில் பாராளுமன்ற உறுப்பினர்கள் கீழ்த்தரமாக செயற்பட்டார்களென ஜே.வி.பி எம்.பி .விஜித ஹேரத் தெரிவித்தார்.

மிளகாய்த்தூளை எடுத்து வந்து என் மீது வீசினார்கள். அரசியலமைப்பு புத்தகத்தை என்மீது வீசி அடித்தார்கள். அப்புத்தகம் பட்டதில் என் உதட்டில் இரத்த காயம் ஏற்பட்டுள்ளது. இவை மிகவும்மிலேச்சத்தனமான செயற்பாடு எனத் தெரிவித்தார்.

இதேவேளை ஜே.வி.பி எம்.பி அநுரகுமார திஸாநாயக்க தெரிவிக்கையில்,

பாராளுமன்றத்தில் சுதந்திரக் கட்சியினர் அடியாட்களைப் போன்று செயற்பட்டனர். இவர்களின் செயற்பாடுகள் யாவும் பாதாள குழுக்களைச் சேர்ந்தவர்களைப் போன்றே காணப்பட்டது.

சுதந்திரக் கட்சியை சேர்ந்தவர்கள் மட்டுமே தமது ஆசனத்திலிருந்து எழுந்து நின்று கூச்சலிட்டு குழப்பத்தை உண்டு பண்ணினார்கள். ஏனைய கட்சியை சேர்ந்த எவரும் தமது ஆசனங்களை விட்டு எழுந்திருக்கவில்லை. இதனை மக்களும் அவதானித்திருப்பார்கள்.

பாராளுமன்றத்தைக் கூட்டினால் மரணம் இடம்பெறலாமென ஏற்கனவே ஜனாதிபதி கூறியிருந்தார். ஜனாதிபதியின் ஊகம் சரியென்பது போலவே பாராளுமன்றத்தில் அனைத்து சம்பவங்களும் இடம்பெற்றன என்றார். பொதுஜன பெரமுன எம்.பி. குமார வெல்கம தெரிவிக்கையில்,

நாம் ஆளும் கட்சியிலும் இருந்திருக்கின்றோம் எதிர் கட்சியிலும் இருந்திருக்கின்றோம். 113 ஆசனங்கள் எமக்கு இல்லையென்று தெரிந்த பின்பும் எதற்காக அதைக் கேட்டு போராட வேண்டும். இல்லையென்று தெரிந்த பின்பும் பலவந்தமாக அதனை பெற்றுக்கொள்ள போராடுவதில் எவ்வித அர்த்தமும் இல்லை.

அனைத்து தூதுவர்களும் பாராளுமன்றத்துக்கு வருகை தந்துள்ளார்கள். இவ்வாறானதொரு சந்தர்ப்பத்தில் பாராளுமன்றத்துக்குள் இடம்பெற்ற அடாவடித்தனமான செயற்பாடுகள் மிகவும் கவலைக்குரியவை.

சபாநாயகரால் எதையும் செய்யக்கூடிய சூழ்நிலை இருக்கவில்லை. ஆனால் அவர் செய்வாரென்று நாம் எதிர்பார்க்கின்றோம்.

இந்த அடாவடித்தனமான செயற்பாடுகள் யாவும் அவரவர்களின் தனிப்பட்ட தீர்மானங்களுக்கமையவே முன்னெடுக்கப்பட்டன. பிரதமர் மகிந்த ராஜபக்ஷ உயர் அந்தஸ்துடைய ஓர் அரசியல் தலைவர். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவர் இதனை அனுமதித்திருப்பாரென்று நான் நம்பவில்லை. அது அவருடைய நற்பெயருக்கும் ஏற்புடையதல்ல.

தற்போதைய சூழ்நிலையில் தேர்தலொன்றை சந்திப்பதே பொருத்தமான தீர்வாகும். நாம் எந்தவொரு தேர்தலுக்கும் முகம் கொடுக்க தயாராக இருக்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# சாவகச்சேரி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியாக கோணார

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாக கே.எம்.கே.கோணார நியமிக்கப்பட்டுள்ளார். இவர் நெல்லியடிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாக கடமையாற்றி சாவகச்சேரி பொலிஸ் நிலையத்திற்கு இடமாற்றம் பெற்று வந்துள்ளார்.



சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் பொறுப்பதிகாரியாக கடமையாற்றிய விக்கிரமசிங்க அண்மையில் பிரதமரின் பாதுகாப்புப் பிரிவு அதிகாரியாக நியமனம் பெற்றுச் சென்றமை குறிப்பிடத்தக்கது. (இ-30)

# பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

பலாலி இந்து மயான பொதுக்கூட்டம் இன்று 18 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு பலாலி விவசாய உற்பத்தி சங்க அலுவலகத்தில் நடைபெறும்.

இந்து மயானம் தொடர்பான எதிர்கால செயற்பாடுகள் குறித்து கலந்துரையாடப்படவுள்ளதால் சம்பந்தப்பட்டவர்கள் கலந்து கொள்ளுமாறு பலாலி இந்து மயான செயற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (இ-9)

# போராளிகளின் வாழ்வாதாரத்தை உயர்த்த கடுமையாக உழைப்பேன்

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)



புனர்வாழ்வளிக்கப்பட்டு சமூகத்துடன் இணைக்கப்பட்ட விடுதலைப்புலி உறுப்பினர்கள் பலர் தமது வாழ்வாதாரத்தை முன்னெடுப்பதற்கு மிகவும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றீர்கள் என்பதை நான் அறிவேன் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

உங்களில் பலர் என்னுடன் தொடர்பு கொண்டு நீங்கள் எதிர்கொண்டுள்ள நிலைமைகளை பகிர்ந்து கொண்டுள்ளீர்கள் என்பதையும் நான் கவனத்தில் கொண்டுள்ளேன்.

எனவே சமூகத்துடன் இணைக்கப்பட்டு, பொது வாழ்வில் இருக்கும் உங்களுக்கு சுய தொழில் செய்யவும், வருமானம் ஈட்டக்கூடிய முயற்சிகளை மேற்கொள்ளவும் எனது அமைச்சின் கீழ் வருகின்ற புனர்வாழ்வு அதிகார சபையின் ஊடாக இலகுகடன் வசதிகளை வழங்கவும், அத்துடன் மேலதிக உதவித் தொகைகளைப் பெற்றுத்தரவும் நடவடிக்கை எடுத்து வருகின்றேன்.

எனவே இதுவரை அவ்வாறான உதவிகள் கிடைக்காதவர்கள் உங்கள் கோரிக்கையை நீங்கள் வாழும் பிரதேச செயலாளர்கள் ஊடாக எனக்கு முகவரி இட்டு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

எனவே புனர்வாழ்வளிக்கப்பட்ட விடுதலைப்புலிகள் அமைப்பைச் சேர்ந்த உறுப்பினர்கள் காலம் தாழ்த்தாது உங்கள் கோரிக்கைகளை உங்கள் பிரதேச செயலாளர் ஊடாக எனக்கு கிடைக்கச் செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றேன் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-4)

# பொன்னாலைக் கடற்கரையோரத்தில் திட்டமிடல் இன்றி புல் வெட்டப்பட்டது

## தடுத்து நிறுத்திய பிரதேச மக்கள்



(யாழ்ப்பாணம்)

பொன்னாலை மேற்கு கடற்கரையோரத்தில் இயற்கைச் சமநிலையைக் குழப்பும் வகையில் புல் வெட்டப்பட்டபோது பொன்னாலை கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் அதைத் தடுத்து நிறுத்தியுள்ளனர்.

மூளாயிலுள்ள குளம் ஒன்றைப் புனரமைப்பதற்காக வலி.மேற்கு பிரதேச செயலகத்தின் அனுமதியுடன் மேற்படி புல் கற்றைகள் வெட்டப்பட்ட நிலையிலேயே அது தடுத்து நிறுத்தப்பட்டது.

பொன்னாலை பெரியவர் ஆலயத்திற்கு சமீபமாக, கடற்கரையோரத்தில் புல் கற்றைகள் வெட்டப்பட்டதை கிராமமட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் அவதானித்தனர்.

இதற்கிடையே வெட்டப்பட்ட புல் கற்றைகள் உழவியந்திரத்தில் சில தடவைகள் ஏற்றிச் செல்லப்பட்டிருந்தன.

தெற்கே கடற்கரைக்கும் வடக்கே பெரியர் ஆலயத்திற்கும் மிகச் சமீபமாக உள்ள நிலப்பரப்பில் புல் கற்றைகள் வெட்டப்பட்டன.

இப்பகுதி மாடுகளின் மேய்ச்சல் தரையாகும் மேலும், இந்த இடத்தில் புல் கற்றைகளுடன் சேர்த்து மணலும் வெட்டிச் செல்லப்படுவதால் மிக விரைவாகவே கடல் காவுகொள்ளும் அபாயம் காணப்படுகின்றது.

வலி.மேற்கு பிரதேச செயலகம், இப்பகுதியில் ஐந்து உழவியந்திரங்களில் புல் கற்றைகளை வெட்டி ஏற்றுவதற்கு ஆறு நாட்கள் அனுமதி வழங்கியிருக்கின்றது. அதற்கான ஆவணக் கடிதத்தையும் புல் கற்றைகளை வெட்டியவர்கள் தம்வசம் வைத்திருந்தனர்.

குறித்த இடத்தில் புல் கற்றைகளை வெட்ட வேண்டாம் எனத் தடுத்து நிறுத்திய கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் இது தொடர்பாக கிராம உத்தியோகத்தர் மற்றும் பிரதேச செயலாளர் ஆகியோருக்கும் அறிவித்தனர்.


இதன்போது, தாங்கள் இடத்தை பார்வையிட்டு உரிய வகையிலேயே அனுமதி வழங்கினார்கள் என பிரதேச செயலாளரால் தங்களுக்கு பதிலளிக்கப்பட்டது என அவர்கள் தெரிவித்தனர்.

வலி.மேற்கு பிரதேச செயலகத்தின் அனுமதியுடன் இந்த இடங்களில் தொடர்ச்சியாக புல் கற்றைகள் வெட்டப்பட்டு வரும் நிலையில், இனிமேல் இவ்வாறான இடங்களில் புல் கற்றைகளை வெட்டுவதற்கு அனுமதிகள் வழங்க வேண்டாம் என பிரதேச செயலாளரைக் கேட்டுக்கொண்டனர் எனவும் கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் கூறினர்.

மேலும், ஒரு நாளிலேயே ஐந்து உழவியந்திரச் சுமை புல் கற்றைகளை வெட்டக்கூடிய நிலையில், அதற்கு ஆறு நாட்களுக்கு அனுமதி வழங்கப்பட்டமை தொடர்பாகவும் மேற்படி பிரதிநிதிகள் விசனம் வெளியிட்டனர். (இ-9)

# வெள்ளப்பாதிப்புக்கள் குறித்து ஆராய்வு

(யாழ்ப்பாணம்)



கஜா புயல் மற்றும் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட நித்தியவெளி பகுதி மக்களை ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியினர் நேரில்சென்று பார்வையிட்டதுடன் அவர்களின் பிரச்சினைகள் தொடர்பிலும் கேட்டறிந்து கொண்டனர்.



ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ்.மாவட்ட நிர்வாகச் செயலாளரும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின்வடமாகாண இணைப்பாளருமான கா.வேலும்மயிலும் குகேந்திரன், யாழ் மாநகர சபை உறுப்பினர் றெமீடியஸ் மற்றும் நீகன் ஆகியோரே இவ்வாறு குறித்த பகுதிக்கு விஜயம்செய்து நிலைமைகளை அவதானித்தனர்.

கஜா புயல் யாழ். குடாநாட்டின் சில பகுதிகளில் பாரிய தாக்கத்தை ஏற் படுத்தியிருந்ததுடன் அதிக மழை வீழ்ச்சியும் பதிவாகி யிருந்தது. இதனால் மக்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகியிருந்தனர். இந்நிலையிலேயே ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் முக்கியஸ்தர்கள் குறித்த பகுதிக்கு விஜயம் செய்து நிலைமைகளை அவதானித்திருந்தனர்.

பாதிக்கப்பட்ட மக்கள் தமது அடிப்படைத் தேவைகளான மலசலகூடம் சுகாதாரப் பிரச்சினை, காணிபிரச்சினை, வீட்டுத்திட்டம், வீதி புனரமைப்பு உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்திருந்தனர்.

மக்களது கோரிக்கைகளை கருத்திற்கொண்ட முக்கியஸ்தர்கள் மீள்குடியேற்றம், புனர்வாழ்வு, புனரமைப்பு வடக்குஅபிவிருத்தி மற்றும் இந்து விவகார அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்திற்கு கொண்டு சென்று உரிய தீர்வுகளை பெற்றுத் தருவதாக அமைச்சரின் இணைப்பாளர் காவேலும் மயிலும் குகேந்திரன் தெரிவித்தார். (இ-4)

# அரச பயங்கரவாதத்தால் தமிழ் மக்கள் மீண்டும் ஆயுதப் போராட்டத்துக்கு தள்ளப்படும் வாய்ப்பு

## மனோகணேசன் எச்சரிக்கை

(கொழும்பு)

அரச பயங்கரவாதம் தற்போது நாட்டில் தலையெடுத்துள்ளமையால் தமிழ் மக்கள் மீண்டும் ஆயுதப் போராட்டத்துக்கு தள்ளப்படும் வாய்ப்பு ஏற்படலாமென நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.



இலங்கை அரசியலில் ஏற்பட்டுள்ள குழப்பநிலை தொடர்பில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கருத்து தெரிவிக்கும்போதே மனோ கணேசன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டின் நல்லிணக்கத்தையும் ஜனநாயகத்தையும் பாதிக்கும் வகையிலேயே நாடாளுமன்ற நகர்வுகள் காணப்படுகின்றன.

இவ்வாறு தொடர்ச்சியாக ஜனநாயகத்துக்கு முரணான செயற்பாடுகள் இடம்பெறுமானால் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் இருக்கின்ற தமிழ் மக்கள் ஆயுதப் போராட்டத்தை மேற்கொள்வதற்குத் தள்ளப்படுவார்கள்.

இவ்வாறு நாட்டிற்கு அபகீர்த்தியை ஏற்படுத்திய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ ஆகியோர் இதற்கான முழுப்பொறுப்பையும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இதேவேளை ஜனாதிபதி மைத்திரி நாட்டு மக்களிடத்தில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தி நாட்டைச் சிறந்த அபிவிருத்தியை நோக்கி இட்டுச் செல்வாரென எண்ணிய அனைத்தும் தலைகீழாக தற்போது காணப்படுகின்றது என மனோ கணேசன் கவலை வெளியிட்டுள்ளார். (இ-4)

## ஜூன் மாதத்துக்கு முன்னர் பொதுத்தேர்தல் பிரேரணையை நிறைவேற்ற ரணில் முயற்சி

(கொழும்பு)

எதிர்வரும் ஜூன் மாதத்துக்கு முன்னர் பொதுத் தேர்தலை நடத்துவதற்கான பிரேரணையொன்றை நிறைவேற்றுவதற்கு சகல கட்சிகளுடனும் கலந்துரையாடவுள்ளதாக முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பிலுள்ள வெளிநாட்டு ஊடகவியலாளர்களுடன் நேற்று முன்தினம் இடம்பெற்ற சந்திப்பின் போது அவர் இந்தத் தகவலை வெளிப்படுத்தியுள்ளார்.

நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் நடைபெற்ற நிகழ்வை முன்னிட்டு அதிர்ச்சியும், கவலையும் அடைகின்றேன். எமக்கு இந்த அராஜக நிலைமையைத் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்ல முடியாது. எம்மிடம் பெரும்பான்மை ஆதரவு உள்ளது. எமக்கு அதனை நிரூபிக்க முடியும். இந்த நாட்டில் சட்ட ரீதியாக அமைக்கப்பட்ட அரசாங்கம் நாமே. எமக்கு அந்த அரசாங்கத்தைக் கொண்டு செல்ல முடியும். சபாநாயகர் ஜனாதிபதிக்கு அனுப்பிய கடிதத்துக்கான பதிலை நாம் எதிர்பார்த்துள்ளோம்.


தேவைப்படின் ஜனாதிபதியை நேரில் சந்தித்துப் பேச தயாராகவுள்ளோம். எந்த நேரத்திலும் ஜனாதிபதியை சந்திக்க எமது கூட்டணியின் கட்சித் தலைவர்கள் தயாராகவுள்ளனர். எமக்கு எந்தப் பிரச்சினையையும் பேசித் தீர்த்துக் கொள்ள முடியும். உறுதியான அரசாங்கமொன்றைக் கொண்டு நடத்தத் தேவையான உறுப்பினர்கள் தங்களிடம் இருப்பதாகவும் ரணில் தெரிவித்தார்.

இதனை ஜனாதிபதி ஏற்றுக் கொள்ளும் வரையில் நாட்டில் இந்த அராஜக நிலைமை தோன்றும். எமக்கு அராஜக நிலைமை அவசியமில்லை. ஏனைய அரசியல் கட்சிகளுடன் கலந்துரையாடி எதிர்வரும் ஜூன் மாதத்திற்கு முன்னர் பொதுத் தேர்தலை நடத்த நாம் தயாராகவுள்ளோம்.

இது தொடர்பான பிரேரணையை நிறைவேற்றுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் குறித்து நாம் கவனம் செலுத்தியுள்ளோம் எனவும் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். (இ-4)

## பட்ஜெட்டை நிறைவேற்றிய பின் தேர்தலுக்குச் செல்ல நாம் தயார்

### ஐ.தே.கவின் நிலைப்பாட்டை வெளிப்படுத்திய அஜித்பெரேரா



(கொழும்பு)

அடுத்த ஆண்டு நாட்டின் பொருளாதார வீழ்ச்சியைத் தடுப்பதற்கு பொருத்தமான பாதீட்டை நிறைவேற்றியதன் பின்னர் தேர்தலுக்குச் செல்லத் தாம் தயாராகவுள்ளதாக ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா தெரிவித்துள்ளார்.

அலரிமாளிகையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகச் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அஜித் பெரேரா இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நாட்டின் அரசியலமைப்புக்கு அமைய ஜனாதிபதித் தேர்தல் அல்லது பொதுத் தேர்தலுக்குச் செல்ல நாம் தயாராகவுள்ளோம்.

மேலும் மக்கள் எமக்கு 5 ஆண்டுகள் நாட்டை ஆட்சி செய்வதற்கே அதிகாரத்தினை வழங்கியுள்ளனர்.

ஆகையால் அக்காலம் நிறைவுபெறும் வரையில் ஆட்சி செய்ய விரும்புகின்றோம்.

இவ்விடயத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இணங்குவாராயின். எதிர்வரும் ஜனவரி 8 ஆம் திகதிக்கு பின்னர் ஜனாதிபதி தேர்தலுக்குச் செல்ல நாம் தயாராகவுள்ளோம்.

இதேவேளை நாட்டின் பொருளாதார வீழ்ச்சியைத் தடுப்பதற்கான பாதீட்டை நிறைவேற்றிய பின்னர் பொதுத் தேர்தலுக்குச் செல்லவே எமக்கு விருப்பம்" என அஜித் பி பெரேரா தெரிவித்துள்ளார். (இ-4)


## தொண்டர்கள் தேவை

தற்கொலைகளைத் தடுப்போம்!

உங்கள் நேரத்தில் ஒரு துளியை,
முன்பின் தெரியாத இன்னொருவருக்காகச்
செலவிட நீங்கள் தயாரா?

மற்றவர்களின் துயரக் கதைகளை நாம்
அக்கறையாகவும், அன்பாகவும் கேட்கிறோம். மனதில்
பாரத்தைச் சுமக்கும் எவருக்கும் ஆறுதலையும்
நம்பிக்கையையும் தருகிறோம். நாம் ஊதியம்
எதையும் பெறுவதில்லை. இப் புனித சேவையில்
எம்முடன் இணையுங்கள். வாரத்தில் நான்கு
மணித்தியாலங்கள் மட்டுமே.
அடுத்த பயிற்சி நெறி மிக விரைவில்.


உடனே அழையுங்கள்.

கை கொடுக்கும் நண்பர்கள்

175, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் (KKS வீதி அண்மையில்)

077 900 8776 (மு.ப. 9.00 - பி.ப. 1.00)


## மரண அறிவித்தல்



### நவரத்தினம் புண்ணியமூர்த்தி

முகமாலை, எழுதுமட்டுவாழைப் பிறப்பிடமாகவும், வைரவர் கோயில் ஒழுங்கை, நெல்லியடி கிழக்கு, வதிரியை வசிப்பிடமாகவும் கொண்ட நவரத்தினம் புண்ணியமூர்த்தி 15.11.2018 வியாழக்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நவரத்தினம்-பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான தம்பையா- தெய்வானை தம்பதியரின் அன்பு மருமகனும் பொன்னம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற செல்லம்மா மற்றும் செல்லதீதுரை (ஓய்வு நிலை பாடசாலை அதிபர்), கனகசபை, பாலகிருஷ்ணன், பாலலட்சுமி, பாலச்சந்திரன், சிவபாலன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் கனகசபை தங்கம்மா, செல்லம்மா, சுப்பிரமணியம், சிவராசா (பிரதேச சபை உறுப்பினர்-வடமராட்சி தெற்கு,மேற்கு), கனகம்மா ஆகியோரின் அன்பு மைத்துனரும், கந்தசாமி (ஓய்வு நிலை ஆசிரியர்-ஹாட்லிக் கல்லூரி), தருமராசா, காலஞ்சென்ற சுப்பிரமணியம் ஆகியோரின் சகலனும் கவிதா, உமா, பாமா, கேசவன் ஆகியோரின் அன்புத் தந்தையும் சத்தீஸ்வரன், பார்த்தீபன், தமிழ் அழகன், தர்மினி ஆகியோரின் அன்பு மாமனும் டிலக்சன், வினோசன், ஜெய்சன், கருஷ்ணி, சபீக்கா, ஸ்ரீநிகேசன், நிகேசினி, ஆர்ஜன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 18.11.2018 இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று ஈமைக்கிரியைகளுக்காக வதிரி ஆலங்கட்டை இந்து மயானத்திற்கு பூதவுடல் எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

வைரவர் கோயில் ஒழுங்கை,
நெல்லியடி கிழக்கு, வதிரி.

தகவல்
குடும்பத்தினர்.
021 226 3019

(c 4446)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில்
06. 11. 1952

இறைவன் அடியில்
30. 11. 2017

அமரர்
தம்பன்
ஐயாத்துரை

ஓடி உருண்டது உமைப்பிரிந்து ஓராண்டு
வாடி-வதங்குகின்றோம் உமைப்பிரிந்து எண்ணி நிதம்
ஓராண்டென்ன ஓராயிரம் ஆண்டுகள் சென்றாலும்
எம் நெஞ்சமதில் உங்கள் நினைவுகள் நிலைத்திருக்கும்.

(தி-4430)

காந்திவீதி,
துன்னாலை மேற்கு, கரவெட்டி

மகன்: ஐ.ரஜனிகாந்தன் (C.T.B)
குடும்பத்தினர்.

# ஆட்காட்டிவெளி மாவீரர் துயிலுமில்லம் சிரமதானப்பணி மூலம் துப்புரவு





(மன்னார்)

மாவீரர் நினைவேந்தல் நிகழ்வுக்கான ஆரம்ப கட்ட செயற்பாடுகள் வடக்கு கிழக்கு மாகாணங்களில் மும்முரமாக இடம் பெற்று வருகின்றது

அந்த வகையில், மன்னார் மாவட்டத்தில் உள்ள துயிலுமில்ல அபிவி ருத்தி செயற்பாட்டு குழுவின் ஏற்பாட்டில், ஈச்சளவாக்கை கிராம மாவீரர் குடும்பங்களை சேர்ந்த அநேக பெண்கள் உட்பட் பொது மக்கள் நேற்றுக்காலை முதல் ஆட்காட்டிவெளி துயிலுமில்லத்தில் சிரமதானப்பணியில் ஈடுபட்டிருந்தனர்.

அத்துடன் துயிலுமில்ல நிகழ்வுகளுக்காக கிராம மக்களால் சேகரிக்கப்பட்ட ஒரு தொகை நிதியும் மன்னார் மாவட்ட துயிலுமில்ல அபிவிருத்தி செயற்பாட்டு குழுவிடம் ஈச்சளவாக்கை கிராமத்தைச் சேர்ந்த மக்களால் கையளிக்கப்பட்டுள்ளது. (2-285)

# அளம்பில் மாவீரர் துயிலுமில்லத்தில் நேற்றும் துப்புரவுப்பணி முன்னெடுப்பு



முல்லைத்தீவு - அளம்பில் மாவீரர் துயிலுமில்லத் துப்புரவுப் பணிகள் நேற்றும் இடம்பெற்றுள்ளன.

ஏற்கனவே கடந்த 10 ஆம் திகதி துபபுரவுப் பணிகள் இடம்பெற்றிருந்தன. இதன் தொடர்ச்சியாகவே நேற்றையதினம் துப்புரவுப்பணிகள் இடம்பெற்றன.

மேலும் துப்பரவுப்பணியில் கலந்துகொண்ட பொது மக்கள், துயிலுமில்லத்தில் நிலைகொண்டிருக்கும் இராணுவம் வெளியேற வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தனர்.

இந்த துப்புரவுப்பணிகளை அந்தப்பகுதி மக்கள் பலர் ஒன்றுகூடி மேற்கொண்டனர். அவர்களுடன் முன்னாள் வடக்கு மாகாணசபை உறுப்பினர் து.ரவிகரன், கரைதுறைப்பற்று பிரதேசசபை உறுப்பினர் சி.லோகேஸ்வரன், தமிழ்தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செ.கஜேந்திரன் ஆகியோர் கலந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (2-281)




# ஆட்டோ-கார் விபத்து; சிறுவன் படுகாயம்



(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாங்குளம் பொலிஸ் பிரிவிலுள்ள முறிகண்டி பகுதியில் நேற்று இடம்பெற்ற விபத்தில் 11 வயது சிறுவன் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கிளிநொச்சி அக்கராயன்குளம் பகுதியிலிருந்து ஏ-9 வீதி ஊடாக பயணிக்க முற்பட்ட ஆட்டோவும் ஏ-9 வீதியில் யாழ்ப்பாணத்திலிருந்து மட்டக்களப்பு நோக்கி பயணித்த காரும் நேருக்கு நேர் மோதியுள்ளது. ஆட்டோவில் பொருத்தப்பட்டிருந்த பிறேக் போதாமையால் வேகக் கட்டுப்பாட்டை இழந்து ஆட்டோ காருடன் மோதியதில் குறித்த விபத்து இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதன்போது ஆட்டோ குடைசாய்ந்ததில் 11 வயது சிறுவன் சிக்குண்டு படுகாயமடைந்துள்ளார். காயமடைந்த சிறுவன் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். ஆட்டோவில் பயணித்தவர்கள் ஒரே குடும்பத்தை சேர்ந்தவர்கள் எனவும் காயமடைந்தவரின் தந்தையே ஆட்டோவை செலுத்தியுள்ளதாகவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் மாங்குளம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (2-312-315)

# கிளிநொச்சி நகரில் ஆயுத முனையில் திருட்டு

(கண்டாவளை)

கிளிநொச்சி நகரில் ஆயுத முனையில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற திருட்டு சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். இனந்தெரியாத நபர்கள் வீட்டை சேதப்படுத்தியும், தம்மை தாக்கியும் நகை மற்றும் ஆவணங்கள் சிலவற்றை திருடிச் சென்றுள்ளதாக பொலிஸ் நிலையத்தில் வீட்டின் உரிமையாளரினால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதன்போது தாலிக்கொடி, சங்கிலி மற்றும் ஆவணங்கள் திருடப்பட்டுள்ளதாகவும், திருட வந்தவர்கள் தம்மை அடையாளம் தெரியாதவாறு முகத்தினை மூடி மறைந்திருந்ததாகவும் குறித்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைத்துப்பாக்கியையும் அவர்கள் வைத்திருந்ததாகவும் அதேவேளை, குறித்த பகுதியில் போலி துப்பாக்கி ஒன்றும் கைவிடப்பட்டுள்ளது.

சம்பவத்தில் தம்மை குறித்த நபர்கள் தாக்கியதாகவும் தெரிவித்து மூவர் கிளிநொச்சி வைத்தியசாலையில்அனுமதிக்கப்பட்டுசிகிச்சை பெற்று வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. (2-281)

# குழாய்க்கிணறு அமைக்கப்பட்டு மக்கள் பாவனைக்கு கையளிப்பு

(குருமன்காடு)

வவுனியா நகர்ப்பகுதியில் புதிய குழாய்க்கிணறு ஒன்று உபநகர பிதா சு.குமாரசாமியினால் அமைக்கப்பட்டு மக்களிடம் நேற்று கையளிக்கப்பட்டது.

வவுனியா நகர கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் குழாய்க்கிணறு ஒன்றினை அமைத்து தருமாறு அப்பகுதி கிராம அலுவலர் மற்றும் கிராம மக்கள் உபநகரபிதாவிடம் கோரிக்கை முன்வைத்தமைக்கு அமைவாக மீள்குடியேற்ற, புனர்வாழ்வு மற்றும் வடக்கின் அபிவிருத்தி பிரதி அமைச்சர் காதர் மஸ்தானினால் ஒதுக்கப்பட்ட நிதியின் மூலம் உபநகரபிதாவினால் நகர கிராம அலுவலர் அலுவலகத்தில்குழாய்க்கிணறு ஒன்று அமைக்கப்பட்டு மக்களிடம் கையளிக்கப்பட்டது. (2-250)

# ஐயப்பன்விரதம் அனுஷ்டிக்கும் அடியவர்களுக்கு மாலை அணிவிப்பு

(பனிக்கன்குளம்)

சபரிமலை சுவாமி ஐயப்பனுடைய விரதம் நேற்றைய தினம் நாடு முழுவதிலும் உள்ள ஐயப்ப அடியவர்களினால் கடைப்பிடிக்கப்பட்டுவருகின்றது.

அந்த வகையில் நேற்றையதினம் விரத ஆரம்ப நாளில் வவுனியா தாண்டிக்குளம் ஐயனார் ஆலயத்தில் கிருஸ்ணா குருசாமியால் ஐயப்ப விரதம் அனுஷ்டிக்கவுள்ள அடியவர்களுக்கு மாலை அணிவிக்கப்பட்டது.

சபரிமலை சுவாமி ஐயப்பனுடைய விரத வழிபாடுகள் நேற்றைய தினத்திலிருந்து ஆரம்பமாகி பல சிறப்பு பூஜைகளும் இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-281)

# மாற்றுத்திறனாளிகளின் குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கி வைப்பு



(பனிக்கன்குளம்)

கடந்தாண்டு முன்னாள் வடக்குமாகாண்சபை உறுப்பினர் து.ரவிகரனின் நிதியொதுக்கீட்டிலிருந்து, முல்லைத்தீவு மாவட்ட சமூக சேவைத் திணைக்களத்தினூடாக மாற்றுத் திறனாளிகளின் பொருண்மிய மேம்பாட்டிற்கு நிதியுதவிகள் வழங்கப்பட்டன.

மேலும் சோளம், செவ்விளநீர், நிலக்கடலை உள்ளிட்ட உள்ளூர் உற்பத்திப் பொருட்களைக் கொள்வனவு செய்து, வியாபாரத்தின் மூலம் மேம்பாடடை அடைய வேண்டும் என்ற நோக்கத்துடனேயே இவ்வுதவிகள் வழங்கப்பட்டிருந்தன.

இந் நிலையில் குறித்த இருபது பயனாளிகளுக்கும் 15 ஆயிரம் ரூபாய் வீதம் உதவுதொகை வழங்கும் நிகழ்வு இடம்பெற்றுள்ளது.

இந் நிகழ்வானது முல்லைத்தீவு மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர் நடராசா - தசரதனின் தலைமையில் அண்மையில் முல்லைத்தீவு மாவட்ட சமூக சேவைத் திணைக்களத்தில் நடைபெற்றது.

மேலும் நிகழ்வில் கலந்துகொண்டு தனது ஒதுக்கீட்டினூடான இந் நிதியியை ரவிகரன் மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்கிவைத்தார்.

அதேவேளை இருபது பயனாளிகளினதும் உற்பத்திப் பொருட்களைக் களஞ்சியப்படுத்துவதற்காக, வடக்குமாகாணசபையின் இவ்வருட ஒதுக்கீட்டின் மூலம் (ஒன்பது இலட்சத்து ஐம்பதாயிரம்) ரூபா நிதி ஒதுக்கப்பட்டு, நகர்த்தக்கூடிய வகையிலான களஞ்சிய அறைகள் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (2-281)

# க.பொ.த.(சா/த) பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கு செயலமர்வு

## இன்றும் நடைபெறும்



(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயத்தில் பரீட்சைக்குத் தோற்றும் கல்விப் பொதுத்தராதர மாணவர்களுக்கான செயலமர்வு நேற்று நடைபெற்றுள்ளது.

பாதுகாப்புப் படைகளின் முல்லைத்தீவு படைத்தலைமையகத்தின் ஏற்பாட்டிலும் பிரிகேடியர் ஜெனாத் ஜயவீரவின் ஒழுங்குபடுத்தலில் ஏற்பாடு செய்யப்பட்ட இவ்வாண்டு பரீட்சைக்குத் தோற்றும் கல்விப் பொதுத்தராதர மாணவர்களுக்கான இருநாள் செயலமர்வின் முதல்நாள் நேற்று 9 மணிக்கு ஆரம்பமாகியது.

இதில் ஏழு பாடசாலைகளைச் சேர்ந்த சுமார் 200 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொாண்டதுடன் தேசிய கல்வி நிர்வாகம் மகரகமவைச் சேர்ந்த ஆர்.இராஜேந்திரம் வவுனியா வலயக் கல்வி வலயத்தைச் சேர்ந்த எம். சபேசன், முல்லைத்தீவு கல்வி வலயத்தைச் சேர்ந்த எம். திருக்குமார் ஆகியோர் வளவாளர்களாக கலந்து கொண்டிருந்தனர்.

தொடர்ந்தும் இன்றைய தினமும் இச் செயலமர்வு நடைபெறவுள்ளது. (2-315)

# சுருட்டு உற்பத்தியாளர், விற்பனையாளருக்கு நீதிமன்றத்தினால் அபராதம் விதிக்கப்பட்டது

(பனிக்கன்குளம்)

வவுனியா ஈச்சங்குளம் பகுதியிலுள்ள வர்த்தக நிலையத்தில் உடல் நலம் பற்றிய விழிப்புணர்வு எச்சரிக்கை இன்றியும் உற்பத்தித் திகதி குறிப்பிடாமலும் சுருட்டு தயாரித்த உற்பத்தியாளருக்கும் அதனை விற்பனை செய்த வர்த்தக நிலைய உரிமையாளருக்கும் எதிராக நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இதன்போது நேற்று நீதிமன்றம் இருவருக்கு 6 ஆயிரம் வீதம் 12 ஆயிரம் ரூபாய் தண்டப்பணம் செலுத்துமாறும் உத்தரவிட்டுள்ளது.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

வவுனியா ஈச்சங்குளம் பகுதியிலுள்ள வியாபார நிலையத்தில் ஓமந்தை பொது சுகாதாரப்பரிசோதகர்கள் அண்மையில் மேற்கொண்ட பரிசோதனை நடவடிக்கையின்போது உடல் நலம் குறித்த விழிப்புணர்வு எச்சரிக்கை, தார், நிகேட்டின் உள்ளீட்டைக் குறிக்கும் சிட்டுத்துண்டுகள் இன்றியும் உற்பத்தித்திகதி குறிப்பிடாமலும் பொதி செய்யப்பட்டு விற்பனைக்கு களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டிருந்த 31 புகையிலை சுருட்டு பண்டல்கள் கைப்பற்றப்பட்டன.

இதையடுத்து விற்பனைக்கு களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டிருந்த வர்த்தக நிலையத்தின் உரிமையாளர் மேற்படி புகையிலைச் சுருட்டை உற்பத்தி செய்து விநியோகம் செய்த உற்பத்தியாளர் ஆகிய இருவருக்கு எதிராக ஓமந்தை பொது சுகாதாரப்பரிசோதகர் க.சிவரஞ்சனினால் வவுனியா நீதவான் நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டது.

இந்நிலையில் நேற்றையதினம் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது மேற்படி இருவரும் தமது குற்றத்தை ஒப்புக்கொண்டமைக்கு அமைவாக இருவருக்கும் தலா 6 ஆயிரம் ரூபாய் வீதம் 12 ஆயிரம் ரூபாய் தண்டப்பணம் செலுத்துமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கைப்பற்றப்பட்ட புகையிலைச்சுருட்டை அழித்து விடுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (2-281)

தண்ணீரில் இறங்காது நீச்சலை
கற்றுக் கொள்ள முடியாது.
~ யாரோ

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# பிள்ளைகளுக்கு நீச்சலை கற்றுக் கொடுங்கள்

எல்லோரும் அறிந்த கதை இது. இருந்தும் தேவை கருதி அந்தக் கதையை மீள ஞாபகப்படுத்துகின்றோம்.

பண்டிதர் ஒருவர் படகொன்றில் பயணிக்க நேர்ந்தது. பழந்தமிழ் பேசுகின்ற பாங்கு தமிழ்ப் பண்டிதர்களுக்கு இருந்தமையால் பண்டிதர் என்பது தமிழ்மொழியின் வித்துவத்தை வெளிப்படுத்துகின்ற சொற்பதமாகவும் கணிப்புப் பெற்றிருந்தது.

படகில் பயணித்த பண்டிதர் படகோட்டியிடம் கதை கொடுத்தார். அப்பனே! உனக்கு எழுதத் தெரியுமா என்பது பண்டிதரின் முதற்கேள்வி. அந்தக் கேள்விக்கான பதில் இல்லை என்பதாகப் படகோட்டி கூறினான்.

படகு இன்னும் சில தூரம் கடந்து சென்றது. மீண்டும் பண்டிதர் படகோட்டியைப் பார்த்து, மகனே! உனக்கு வாசிக்கத் தெரியுமா? என்று கேட்டார். இல்லை ஐயா என்றான் படகோட்டி.

அப்படியானால் வாழ்க்கையில் நீ ஐம்பது வீதத்தை இழந்துவிட்டாய் என்றார் பண்டிதர்.

இப்போது படகு ஆற்றின் ஆழமான பகுதிக்குள் பிரவேசிக்கிறது. தண்ணீரின் ஓட்டவேகத்தில் படகு தள்ளாடுகிறது.

படகோட்டி பண்டிதரைப் பார்த்து ஐயா! உங்களுக்கு நீந்தத் தெரியுமா என்று கேட்டான்.

மகனே! எனக்கு நீந்தத் தெரியாது என்றார் பண்டிதர். அப்படியானால் நீங்கள் உங்கள் வாழ்க்கையையே இழந்துவிட்டீர்கள் என்றான் படகோட்டி.

படகோட்டி கூறியதன் பொருளை உணர்வதற்கு முன்னதாகவே படகு நீரில் மூழ்க பண்டிதரும் நீரில் மூழ்கிப் போனார். படகோட்டி நீந்திக் கரை சேர்ந்தான்.

இது ஒரு இயற்றல் கதை என்று எடுத்துக் கொண்டாலும் இதற்குள் இருக்கக்கூடிய அர்த்தம் ஆழமானது.

தவிர, நாளாந்தம் நாம் கேள்வியுறுகின்ற அகால மரணங்களில் நீரில் மூழ்கி இறத்தல் என்பது கணிசமாக இருப்பதைக் காண முடிகின்றது.

நீரில் மூழ்கி மரணித்தல் என்பது நூறு வீதம் தவிர்க்கவும் தடுக்கவும் கூடியது.

இருந்தும் சிறுவர்கள், இளைஞர்கள், முதியவர்கள், பெண்கள் என நீரில் மூழ்கி இறப்பவர்களின் எண்ணிக்கை தமிழ் இனத்தில் கணிசமாக உள்ளது.

இதற்கு அடிப்படைக் காரணம் எங்களில் பெரும்பாலானவர்களுக்கு நீந்தத் தெரியாமல் இருப்பதுதான்.

உலகநாடுகளில் குழந்தைகளுக்கான முதல் பயிற்சி நீச்சலாகவே இருக்கிறது.

ஆனால் நாங்கள் நீந்தக் கற்றக் கொடுப்பதை ஒரு தவறான விடயமாகக் கருதி அதிலிருந்து எங்கள் பிள்ளைகளை விலக்கி வைத்து விடுகின்றோம்.

உண்மையில் சிறுபிள்ளைப் பராயத்திலேயே நீச்சலைக் கற்றுக் கொடுக்க வேண்டும். இந்தப் பணி பெற்றோர்களினதும் பாடசாலைச் சமூகத்தினதும் தலையாய கடமையாகும்.

இதுபற்றி இவ்விடத்தில் பல தடவைகள் சுட்டிக்காட்டியபோதிலும் அதுபற்றிய விழிப்புணர்வு இன்னமும் எங்கள் மத்தியில் ஏற்படவில்லை.

இதனால் அருமந்த உயிர்களைப் பறிகொடுக்கும் பரிதாபத்தில் நாம் இருக்கிறோம் என்பதுதான் உண்மை.

# வீர மறவர்களை விளக்கேற்றி நினைவுகூர
## துயிலுமில்லங்கள் முழுமையாக விடுவிக்கப்படவேண்டும்
### முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் ரவிகரன் தெரிவிப்பு

(பனிக்கன்குளம்)

மக்கள் தங்கள் உறவுகளை விளக்கேற்றி நினைவுகூருவதற்கான சந்தர்ப்பத்தை முழுமையாக ஏற்படுத்தக் கூடிய வகையில் மாவீரர் துயிலுமில்லங்கள் முழுமையாக விடுவிக்கப்பட வேண்டுமென முன்னாள் வட மாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

மாவீரர் தினத்தை முன்னிட்டு தாயகப் பிரதேச மெங்கும் காணப்படும் துயிலுமில்லங்கள் துப்புரவு செய்யப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் முல்லைத்தீவு - அளம்பில் மாவீரர் துயிலுமில்லத்தில் துப்புரவுப் பணிகள் இடம்பெற்றன.

இதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே ரவிகரன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

மாவீரர் நாளை அனுஷ்டிப்பதற்கு மக்கள் ஒன்று கூடி சிரமதான பணிகளைச் செய்து கொண்டிருக்கின்றார்கள்.

அளம்பில் துயிலுமில்லம் இருக்கின்ற இடம் அடைக்கப்பட்டு, காவலரண்களும் அமைக்கப்பட்டு இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருக்கின்றது.

மேலும் மாவீரர்கள் என்றும் போற்றப்படுபவர்கள். எங் களுடைய மக்களுக்கு ஒரு நியாயமான தீர்வு கிடைத்திருக்குமாகவிருந்தால் நிச்சயமாக இந்த போராட்டமே நடைபெற்றிருக்காது.

அத்துடன் அந்தப் பிள்ளைகளை விதைத்த இடத்தில் அவர்களுடைய உறவுகள் வந்து நினைவுகூருவதற்கு சந்தர்ப்பமில்லாத காலமும இருந்தது. இப்போது படிப படியாக நினைவுகூருவதற்கு சந்தர்ப்பங்கள் கிடைத்தாலும் அளம்பில் துயிலுமில்லம் விடுவிக்கப்படவில்லை. துயிலுமில்லத்திற்குள் இருக்கின்ற இராணுவத்தினர் வெளியேற வேண்டும்.

குறிப்பாக முல்லைத்தீவு மாவட்டத்தைப் பொறுத்தவரை தேராவில், இரணைப்பாலை, முள்ளியவளை, அளம்பில், முல்லைத்தீவு நகர்ப் பகுதி, வன்னிவிளாங்குளம் உள்ளிட்ட மாவீரர் துயிலுமில்லங்களில் மாவீரர் நாள் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றன.

இருப்பினும் சில இடங்கள் மூடி மறைக்கப்பட்டு, அல்லது மக்கள் நினைவுகூரச் செல்வதைத் தடுத்து இராணுவத்தினர் அழுத்தங்களை வழங்குகின்றனர். குறிப்பாக ஆலங்குளம் பகுதி இன்றுவரை விடுவிக்கப்படவில்லை.

எனவே மாவீரர் துயிலுமில்லங்கள் முழுமையாக விடுவிக்கப்பட்டு மக்கள் தமது உறவுகளை நினைவுகூர சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்பதே மக்களதும், எமது கருத்தாகவும் உள்ளது என்றார். (2-281)

### வெற்றிடங்களுக்கு ஆசிரியர்களை இணைக்க

# போட்டிப் பரீட்சை இன்றி நேரடியாக நேர்முகப்பரீட்சை

(யாழ்ப்பாணம்)

வட மாகாணத்திலுள்ள பாடசாலைகளில் வெற்றிடமாகவுள்ள கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம்,தகவல்தொழில்நுட்பம் ஆகிய பாடங்களுக்கான ஆசிரியர்களுக்கான பட்டதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. 440 வெற்றிடங்கள் உள்ள நிலையில் குறைந்த எண்ணிக்கையான விண்ணப்பங்களே கிடைத்துள்ளன.

எனவே இவ் விண்ணப்பதாரர்களுக்கு போட்டிப் பரீட்சையின்றி நேரடியரக நேர்முகப்பரீட்சை மூலம் அவர்களுடைய ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு தகுதியானவர்களுக்கு நியமனம் வழங்கப்படும் எனவும் இதற்கான நேர்முகப்பரீட்சை அடுத்த வாரம் நடைபெறும் என்றும் அதற்கான கடிதங்கள் அனுப்பி வைக்கப்படவுள்ளன எனவும் வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் அறிவித்துள்ளார். (இ-5)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை திங்கட்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை யாழ் பிரதேசத்தில புலோப்பளை, அல்லிப்பளை ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில் நானாட்டான், மாவிலங்கேணி, அளவக்கை, செம்மண்தீவு, எருவிட்டான், செம்மண்தீவு நீர்ப்பாசன சபை ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

### வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை 2018

"மரங்களின் பிரதான தொழிற்பாடுகள் புரிந்து கொள்ளப்பட்டு அவை உயிர்வாழ் அங்கிகளாக எம்மால் உணரப்பட்டால் அவை எமக்கு ஆதாயமும் அகமகிழ்வும் தரக்கூடிய என்றும் முடிவில்லாத வளமாக விளங்கும்"

*-நீ.தீ.மிரோவ் (அமெரிக்க எழுத்தாளர்)*

# வலம்புரியின் செய்திக்கு மறுப்புத் தெரிவிப்பு

கடந்த 15ஆம் திகதி வலம்புரியின் 21ஆம் பக்கத்தில் வெளிவந்த 4 வயது குழந்தைக்குப் பாலியல் துன்புறுத்தல் என்ற செய்தி தவறானது என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி செய்தியில் உண்மையில்லை என்பதை யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரி உறுதி செய்துள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (78)

# கௌரவிப்பு விழா

யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலையின் அதிபர் பேரம்பலம் தனபாலசிங்கம் அவர்களுக்கு சிறந்த அதிபருக்கான குரு பிரதீபா பிரபா விருதையும் சிறந்த சமூக சேவைககான அகில இலங்கை சமாதான நீதவான் பதவியையும் பெற்றமையைப் பாராட்டி பொது அமைப்புக்களாலும் பாடசாலை சமூகத்தாலும் கௌரவிப்பு விழாவானது முன்னெடுக்கப்படுகின்றது.

மேற்படி விழாவானது இன்று காலை 9 மணியளவில் யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலையின் பிரதான மண்டபத்தில் பேராசிரியர் க.தேவராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.(78)

### வீட்டில் மகிழ்ச்சியோடு இருக்க...


- சந்தோசமாய் வாழப் பழகுங்கள் விட்டுக் கொடுக்கும் பெருந்தன்மையுடன் இருங்கள்.
- சந்தேகம் என்கிற எண்ணத்தையே வேரோடு அழியுங்கள்.
- குழந்தைகளோடும் மனைவியோடும் சந்தோசமாய் மன நிறைவோடு பேசி மகிழுங்கள்.
- வீட்டிற்கு வந்த விருந்தாளிகளிடம் எப்போதும் தன் குறைகளை ஒரு போதும் பேசாதீர்கள்.
- உறவுகளைப் பற்றி விமர்சனம் செய்யாதீர்கள். அடுத்தவர்களோடு ஒப்பிட்டு பேசாதீர்கள்.
- எதிரிகளாய் இருந்தாலும் பிறரிடம் அவ தூறாய் பேசாதீர்கள்.
- நல்லதை பற்றியே பேசுங்கள். நல்லதைப் பற்றியே சிந்தியுங்கள்.
- கவலைகளை சுமந்து பொண்டு திரியாதீர்கள் உங்கள் கவலைகளைக் குடும்பத்தினரிடமே கலந்து பேசி ஆலோசனையைப் பகிர்ந்து கொள்ளுங்கள். எல்லாம் "இறைவன் விட்ட வழி "என்று வாழ்க்கையை இனிமையாய் நடத்துங்கள்.

# இயேசுநாதரின் திருவாக்கியங்கள்



- ❖ வேலை செய்வதாகக் காட்டிக் கொள்பவராயிராமல் கடவுளின் பணியாளராய் அவரின் திருவுள்ளத்தை உளமாற நிறைவேற்றுங்கள்.
- ❖ தூங்கிக் கொண்டே இருப்பதை நாடாதே. கண் விழித்திரு. உனக்கு வயிறார உணவு கிடைக்கும்.
- ❖ நீங்கள் நன்மை செய்வதில் ஞானம் உடையவர்களாகவும், தீமை என்றால் என்ன என்றே தெரியாத கபடமற்றவர்களாயும் இருக்க வேண்டும்.
- ❖ சோம்பேறிகள் உண்ண விரும்புகிறார்கள். ஆனால் ஊக்கமுள்ளவர்களோ உண்டு கொழுக்கிறார்கள்.
- ❖ களவு செய்யாமலும், பொய் சொல்லாமலும், ஒருவரை ஒருவர் வஞ்சியாமலும், கடவுளின் பெயருக்கு இழுக்கு ஏற்படுத்தாமலும் இருங்கள்.
- ❖ தீயசொல்லில் இருந்து உான் நாவைக் காத்திடு. வஞ்சக மொழியை உன் வாயை விட்டு விலக்கிடு.
- ❖ நம்பிக்கை துரோகிகளின் வஞ்சகம் அவர்களைப் பாழ்படுத்தும்.
- ❖ உங்களிடம் இருக்கின்ற துணிவைக் கைவிடாதீர்கள். இதற்கு மிகுந்த கைமாறு உண்டு.
- ❖ உடன்பிறப்புகள் போன்று ஒருவருக்கொருவர் உள்ளம் கனிந்த அன்பு காட்டுங்கள்

# இரண்டு ஆண்டுகளில் ஓய்வு பெறுவேன் தென்னாபிரிக்க அணித் தலைவர் அறிவிப்பு



தென்னாபிரிக்க கிரிக்கெட் அணித்தலைவர் பாப் டூ பிளிசிஸ், இன்னும் இரண்டு ஆண்டுகளில் இருபது-20 போட்டிகளில் இருந்து ஓய்வு பெற போவதாக அறிவித்துள்ளது ரசிகர்களுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

அவுஸ்திரேலியாவில் சுற்றுப் பயணம் செய்து விளையாடி வரும் தென்னாபிரிக்க அணி, மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை 2-1 என்ற கணக்கில் கைப்பற்றியது. பாப் டூ பிளிசிஸ் தென்னாபிரிக்க கிரிக்கெட் அணியின் தலைவராக சிறப்பாக செயற்பட்டு வருகிறார்.

கடைசி ஒருநாள் போட்டியில் பாப் டூ பிளிசிஸ் 125 ஓட்டங்கள் விளாசினார். இதனைத் தொடர்ந்து, தென்னாபிரிக்கா-அவுஸ்திரேலியா இடையிலான ஒரே ஒரு இருபது-20 போட்டி குவின்ஸ்லாந்தில் இன்று நடைபெற உள்ளது.

இந்நிலையில், 2020ஆம் ஆண்டு நடைபெற உள்ள இருபது-20 உலகக் கிண்ண தொடருடன், இரு பது-20 போட்டிகளில் இருந்து ஓய்வு பெற போவதாக டூ பிளிசிஸ் அறிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் கூறுகையில்,

'வரும் 2020ஆம் ஆண்டு நடைபெற உள்ள இரு பது-20 உலகக் கிண்ண தொடரை எதிர்நோக்கி காத்திருக்கிறேன். அது தான் எனது கடைசி தொடராக இருக்கும் என்று நான் நினைக்கிறேன்' என தெரிவித்துள்ளார்.

டூ பிளிசிஸ், இதுவரை 41 இருபது-20 போட்டிகளில் 1,237 ஓட்டங்கள் எடுத்துள்ளார்.

இதில் ஒரு சதம் மற்றும் 7 அரைசதங்கள் அடங்கும். (க)

# தமிழ் மக்களுக்காக பிரார்த்திக்கிறேன்-சேவாக்



கஜா புயலால் பாதிக்கப்பட்ட தமிழக மக்களுக்கு ஆதரவாக இந்திய அணியின் முன்னாள் கிரிக்கெட் வீரர் விரேந்தர் சேவாக் டுவிட்டர் பக்கத்தில் கருத்து தெரிவித்துள்ளார்.

வங்கக்கடலில் உருவான குறைந்த காற்றழுத்த தாழ்வுநிலையானது, தாழ்வுமண்டலமாக மாறி மேலும் வலுப்பெற்றது.

அதற்கு கஜா என பெயரிடப்பட்டது. நேற்று நள்ளிரவு முதலே தமிழகத்தில் நாகை, வேதாரண்யம் வழியே கரையை கடக்க ஆரம்பித்த கஜா பல பகுதிகளிலும் சேதத்தை ஏற்படுத்த ஆரம்பித்தது.

இதில் பொதுமக்கள் பலரின் வீடுகளும், கால்நடைகளும் பரிதாபமாக பலியாகின. சாலை முழுவதும் மின்கம்பங்களும், மரங்களும் சாய்ந்து விழுந்து கிடப்பதால் பொதுமக்களின் அன்றாட வாழ்க்கை வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளது. புயலில் சிக்கி இதுவரை 21 பேர் இறந்திருக்கலாம் என என தகவல் வெளியாகியுள்ளது.

இந்த நிலையில் இந்திய அணியின் முன்னாள் கிரிக்கெட் வீரர் விரேந்தர் சேவாக் தன்னுடைய ட்விட்டர் பக்கத்தில், கஜா புயலில் இருந்து தமிழக மக்கள் பாதுகாப்பாக இருக்கவும், விரைவில் மீண்டு வரவும் நான் பிரார்த்தனை செய்கிறேன். தயவு செய்து உங்களை பாதுகாப்பாக வைத்துக் கொள்வதற்கான அனைத்து வேலைகளையும் செய்யுங்கள் என அவர் குறிப்பிட்டுள்ளார். (க)

# மனம் வெறுத்ததனாலேயே நாடு திரும்பினேன்- பிராவோ



சம்பளம் தொடர்பாக வீரர்களுக்கும் கிரிக்கெட் சங்கத்துக்கும் நேர்ந்த பிரச்சினையால் 2014 இந்தியச் சுற்றுப்பயணத்தைப் பாதியில் நிறுத்திக்கொண்டது மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் சங்கம்.

இந்நிலையில் இச்சம்பவம் குறித்து சமீபத்தில் சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெற்ற மே.இ. அணியின் கப்டனாக இருந்த டுவைன் பிராவோ, 2014-இல் நடைபெற்ற சம்பவங்கள் குறித்து டிரினிடாட் வானொலி ஒன்றுக்குப் பேட்டியளித்துள்ளார். இதில் இவர் கூறியதாவது,

"எங்களுடைய ஊதியத்திலிருந்து 75% குறைக்க கிரிக்கெட் சங்கம் முடிவெடுத்ததால் அதை எதிர்க்க முடிவு செய்தோம். முதல் ஒருநாள் ஆட்டத்திலிருந்தே வெளியேற முடிவு செய்தோம். ஆனால் பேச்சுவார்த்தை நடத்தி நடத்தி நான்கு ஒருநாள் ஆட்டங்கள் வரை விளையாடினோம். நான்காவது ஒருநாள் ஆட்டத்தின் டாஸ் நிகழ்வின்போது என்னுடன் அனைத்து வீரர்களும் வந்தார்கள்.

முதல் ஒருநாள் ஆட்டத்தில் நாங்கள் விளையாட மாட்டோம் எனச் சொல்லியிருந்த போது, அப்போது பிசிசிஐ தலைவராக இருந்த என். சீனிவாசன் எனக்கு மெசேஜ் அனுப்பினார். தயவுசெய்து ஆடுகளத்தில் களமிறங்குங்கள் என்று.

நான் அவர் சொன்னதைக் கேட்டேன். காலை 6 மணிக்கு எழுந்து நாம் இன்று விளையாடவுள்ளோம் என வீரர்களிடம் சொன்னேன். ஆனால் எல்லோரும் அன்று விளையாடுவதற்கு எதிர்ப்பு தெரிவித்தார்கள். எனினும் பிசிசிஐயின் தலைவர்களின் பேச்சைக் கேட்டதால் அப்போது நாங்கள் பாதுகாப்பாக உணர்ந்தோம்" என்று தெரிவித்துள்ளார். (க)

# அவுஸ்திரேலிய சுற்றுப் பயண அணியே உலகக் கோப்பைக்காக விளையாடும்

## ரவி சாஸ்திரி தெரிவிப்பு

அவுஸ்திரேலியா அணிக்கு எதிரான ஒருநாள் தொடரில் விளையாடும் இந்திய அணியே கிட்டத்தட்ட, வரவிருக்கும் உலகக்கோப்பை தொடரில் விளையாடும் என்று இந்திய அணியின் பயிற்சியாளர் ரவிசாஸ்திரி கூறியுள்ளார்.



கோலி தலைமையிலான இந்திய அணி அவுஸ்திரேலியாவிற்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு மூன்று வகை கிரிக்கெட்டில் விளையாடவுள்ளது.

இதில் இரு அணிகளுக்கிடையேயான முதல் தொடராக இருபது-20 போட்டி வரும் 21 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

இந்நிலையில் இந்திய அணியின் பயிற்சியாளரான ரவி சாஸ்திரி, ஒரு தனி துடுப்பாட்ட வீரர் என்றில்லாமல் அனைவரும் ஒருங்கிணைந்து எப்படி நன்றாக துடுப்பெடுத்தாட வேண்டும் என்பதில் கவனம் செலுத்த வேண்டும்.

வேகப்பந்து வீச்சு நன்றாக உள்ளது. நீண்ட நாட்களாக அவர்கள் 20 விக்கெட்டுக்களை வீழ்த்தி திறமையை பெற்றிருக்கிறார்கள். நாம் இங்கிலாந்து சென்ற போது, லார்ட்ஸ் டெஸ்டை தவிர்த்து, மற்ற டெஸ்டில் வெற்றியை நெருங்கி வந்து அறுவடை செய்ய முடியாமல் போனது.

தொடர் முழுவதும் சிறப்பாக துடுப்பாட்டத்தை கொடுத்தோம். ஆனால், ஒரு அணியான நாம் துடுப்பெடுத்தாடவில்லை என்றால் கீழே விழுந்து தோல்வியடைந்து விடுவோம்.

மேலும் அவுஸ்திரேலியா அணிக்கு எதிரான ஒருநாள் தொடரில் விளையாடும் வீரர்களே கிட்டத்தட்ட அடுத்து நடைபெறவிருக்கும் உலககோப்பை தொடரில் விளையாடலாம் என்றும் கூறியுள்ளார்.

அவுஸ்திரேலியா அணிக்கு எதிரான இருபது-20 தொடரில் டோனிக்கு ஓய்வு கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால் அவர் ஒருநாள் தொடரில் நிச்சயம் விளையாடுவார் என்று கூறப்படுவதால், நிச்சயம் டோனி அடுத்த உலகக் கோப்பைக்கு விளையாடுவார் என்று அவரது ரசிகர்கள் மிகுந்த மகிழ்ச்சியில் உள்ளனர். ஏனெனில் டோனி உலகக் கோப்பை விளையாடுவது குறித்து பல வதந்திகள் கிளம்பி வரும் நிலையில், அதற்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் ரவி சாஸ்திரி பேசியுள்ளார் என்றே கூறலாம். (க)

# விராட் ஹோலி,சர்மாவை முந்திய மகளிர் அணித் தலைவி

சர்வதேச இருபது-20 போட்டிகளில் இந்திய மகளிர் அணி கப்டன் மிதாலி ராஜ் அதிக ஓட்டங்கள் குவித்து, விராட் ஹோலி மற்றும் ரோஹித் ஷர்மா ஆகியோரை முந்தியுள்ளார்.

மேற்கிந்திய தீவுகளில் மகளிர் இருபது-20 உலகக்கிண்ண போட்டி தொடர் நடைபெற்று வருகிறது. இந்திய கிரிக்கெட் அணி தனது முதல் ஆட்டத்தில் நியூசிலாந்து அணியை 34 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தியது.

பின்னர் 2ஆவது போட்டியில் பாகிஸ்தான் அணியை 7 விக்கெட் வித்தியாசத்தில் இந்தியா வீழ்த்தியது. இந்தப் போட்டியில் இந்திய தலைவி மிதாலி ராஜ் 56 ஓட்டங்கள் குவித்தார்.

அதன் பின்னர், அயர்லாந்துக்கு எதிரான நேற்றைய போட்டியில் மிதாலி ராஜ் 51 ஓட்டங்கள் எடுத்தார்.



இந்த போட்டியிலும் இந்திய அணி அபார வெற்றி பெற்றது. இந்நிலையில், கடைசியாக மிதாலி ராஜ் அடித்த அரைசதத்தின் மூலம் இருபது-20 போட்டியில் 2,283 ஓட்டங்கள் குவித்துள்ளார்.

இதன்மூலம் இருபது-20 போட்டியில் அதிக ஓட்டங்கள் குவித்த இந்திய வீரர்கள் பட்டியலில் முதலிடம் பிடித்துள்ளார் மிதாலி ராஜ்.

அத்துடன் இந்திய வீரர்களான விராட் ஹோலி, ரோஹித் ஷர்மா, டோனி ஆகியோரையும் முந்தியுள்ளார். இதுவரை 85 போட்டிகளில் விளையாடியுள்ள மிதாலி ராஜ் 17 அரைசதங்களுடன் 2283 ஓட்டங்கள் குவித்துள்ளார். இவரது அதிகபட்சம் 97 ஆகும்.

ரோஹித் ஷர்மா 2207 ஓட்டங்களும், விராட் ஹோலி 2102 ஓட்டங்களும் எடுத்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

## நரேந்திர மோடி...

இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கும், இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவிற்கும் இடையில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

மாலைதீவின் புதிய ஜனாதிபதியாக தெரிவாகியுள்ள இப்ராஹிம் மொஹமட் சோலிஹ் நேற்று சனிக்கிழமை உத்தியோகப்பூர்வமாக பதவியேற்றுள்ளார்.

இந்த நிகழ்வில் பங்கேற்குமாறு பல சர்வதேச நாடுகளின் தலைவர்களிற்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. இந்தநிலையிலேயே குறித்த பதவியேற்பு நிகழ்வில் பங்கேற்றிருந்த நரேந்திர மோடியும், சந்திரிகாவும் சந்தித்து பேசியுள்ளதாக கூறப்படுகின்றது.

எனினும், இதன்போது பேசப்பட்ட விடயங்கள் தொடர்பிலான தகவல்கள் எவையும் இதுவரையில் வெளியிடப்படவில்லை.

இலங்கை அரசியல் ஸ்திரமற்ற நிலை தோன்றியுள்ள நிலையில் இடம்பெற்றுள்ள குறித்த சந்திப்பு மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகின்றது. (ம)

## முல்லை செம்ம...

உறுப்பினர் சாந்தி ஸ்ரீகந்தராஜா தமது கடுமையான கண்டனத்தை தெரிவித்துள்ளார்.

குறித்த ஆலய வளாகத்தில் விகாரை அமைக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டிருந்த நிலையில் பிரதேசசபை, பொதுமக்கள், பிரதிநிதிகள் மற்றும் ஆலய நிர்வாகம் என்பன கடுமையாக எதிர்த்தனர். இதனைத் தொடர்ந்து அடுத்து இதன் கட்டுமானப் பணிகள் இடைநிறுத்தப்பட்டிருந்தன.

தற்போது குறித்த ஆலய வளாகத்தில் கட்டுமானப்பணிகள் முன்னெடுக்கப்பட்டு நீராவியடிப் பிள்ளையார் பழைய செம்மலை எனக் குறிப்பிடப்பட்டிருந்த பழமையான பெயர் நீக்கப்பட்டு தற்போது கணதேவி தேவாலயம் என பெயர் மாற்றப்பட்டுள்ளது அத்துடன் இங்கு புதிதாக புத்தர் சிலை ஒன்றை திறந்து வைப்பதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இது தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் சாந்தி ஸ்ரீகந்தராஜா கூறியதாவது இந்த பிள்ளையார் ஆலயம் மிகவும் தொன்மையானது. இந்த ஆலயத்தை இல்லாதொழித்து பௌத்த விகாரை அமைக்கும் செயற்பாடானது தமிழர்களின் வழிபாட்டு உரிமையை தடுக்கும் செயலாகும்

அத்துடன் எமது இனத்தை இல்லாதொழிக்கின்ற ஒரு செயற்பாடாகவே அமைந்துள்ளது என தனது கடுமையான கண்டனத்தை வெளிப்படுத்தியுள்ளார். (78-281)

## ரணிலின் அரசை மேற்குலக நாடுகளே உருவாக்கியது!

### கோத்தபாய சாடல்

(கொழும்பு)

தேர்தலிற்காக இன்னமும் ஒன்றரை வருடங்கள் காத்திருந்திருந்தால் மகிந்த ராஜபக்ஷவினால் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் பிரதமராகயிருக்கமுடியும் என கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஆனால் நாடு அத்தனை வருடகாலம் பொறுமையாகயிருந்திருக்குமா எனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

இன்னமும் ஒன்றரை வருடம் பொறுமையாகயிருந்திருந்தால் மகிந்த ராஜபக்ஷவினால் பிரதமராகியிருக்க முடியும் என மக்கள் தெரிவிக்கின்றனர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ராஜபக்ஷவினால் அவ்வாறு பொறுமையாகயிருக்க முடியும் என்பது எனக்கு தெரியும் ஆனால் நாடு ஒன்றரை வருடங்கள் பொறுமையாக காத்திருந்திருக்க கூடிய நிலையில் காணப்பட்டதா என்பதே எனது கேள்வி என அவர் தெரிவித்துள்ளார்

ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தை மேற்குலமே உருவாக்கியது என கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பிரதமருக்கும் அமைச்சரவைக்கும் எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை நிறைவேற்றப்பட்டதாக பாராளுமன்றத்தில் அறிவிக்கப்பட்டதும் பாராளுமன்ற பார்வையாளர் வரிசையில் அமர்ந்திருந்த மேற்குலக இராஜதந்திரிகள் மகிழ்ச்சியுடன் கைதட்டினர் எனவும் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (78)

## மகிந்த ராஜபக்ஷ வெளியேற வேண்டும்

### குமார வெல்கம தெரிவிப்பு

(கொழும்பு)

பாராளுமன்றத்தில் 113பேர் பெரும்பான்மை ஆதரவில்லாமல் மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கம் ஆட்சி நடத்துவது தொடர்பில் கேள்வி எழுந்துள்ளதாக களுத்துறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பிர் குமார வெல்கம தெரிவித்துள்ளார். நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் இருந்து வெளியேறும்போது இந்தக் கேள்வியை அவர் தொடுத்துள்ளார்.

ஆதரவில்லாவிட்டால் மகிந்தவின் அரசாங்கம் விலகிச்செல்லவேண்டும் என்றும் வெல்கம குறிப்பிட்டுள்ளார். (78)

# சபாநாயகர் கரு ஜெயசூரிய பதவி விலக வேண்டும்

## அமைச்சர் தினேஸ் குணவர்த்தன



சபாநாயகரின் தற்போதைய செயற்பாடுகள் தொடர்பில் விரைவில் ஒன்றுகூடி தீர்மானம் ஒன்றை எடுக்கவுள்ளதாக ஆளும்கட்சி தெரிவித்துள்ளது.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற குழப்ப நிலை தொடர்பில் கருத்து வெளியிடும் போதே அமைச்சர் தினேஸ் குணவர்தன மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அரசியல் அமைப்பின் பிரகாரம் செயற்படாவிடில் சபாநாயகர் பதவி விலக வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பாராளுமன்றில் நேற்று முன்தினம் இடம்பெற்ற எந்த செயற்பாடும் சட்டரீதியாக இடம்பெறவில்லை. இந்த செயற்பாடுகளை தொடர்ந்தும் சபாநாயகர் தாமாகவே பதவி விலக வேண்டும் என அவர் இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார். இதேவேளை, ஆளும் கட்சியினருக்கும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவிற்கும் இடையில் நேற்றுக் காலை முக்கிய கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (78)

## பெரும்பான்மையை நிரூபிப்பதற்கு

# போலி பிரதமர் மகிந்தவுக்கு திங்கள் வரை காலக்கெடு!

## மங்கள சமரவீர தெரிவிப்பு



எதிர்கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களை தமதுதரப்பிற்கு இழுப்பதற்கான பேரம்பேசும் நடவடிக்கைகளை மகிந்த தரப்பினர் ஆரம்பித்துள்ளதாக ஐக்கிய தேசிய கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரான மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்

தனது டுவிட்டரில் அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

பாராளுமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபிப்பதற்கு போலி பிரதமருக்கு ஜனாதிபதி நாளை திங்கட்கிழமை வரை காலக்கெடு வழங்கியுள்ளதாக மங்கள சமரவீர இதனைத் தெரிவித்துள்ளார்.

இதனை தொடர்ந்து இலஞ்சவிளையாட்டு மீண்டும் ஆரம்பமாகியுள்ளது. இலஞ்சம் வழங்குவது தொடர்பான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள குழுவினரிற்கு யோசித ராஜபக்ஷ தலைமை தாங்குவதாகவும் மங்கள சமரவீர குறிப்பிட்டுள்ளார்.

ஒரு பாராளுமன்ற உறுப்பினருக்கு 3 மில்லியன் டொலர்கள் வழங்குவதற்கு முன்வந்துள்ளதாகவும் அவர் கூட்டிக்காட்டியுள்ளார். (78)

## பாராளுமன்ற அமர்வுகளின் போது

# ஒழுக்கமற்ற முறையில் நடந்த உறுப்பினர்களுக்கு சட்ட நடவடிக்கை

(கொழும்பு)

பாராளுமன்றத்தின் ஒழுக்கம் மற்றும் நடத்தைகளுக்கு விரோதமான முறையில் மோசமாக நடந்து கொண்டமை காரணமாக பாராளுமன்ற உறுப்பினர்களில் மோசமாக நடந்துக்கொண்ட உறுப்பினர்கள் சிலரை பாராளுமன்றத்தின் சிறப்புரிமை குழுவிற்கு அனுப்புவது குறித்து சபாநாயகர் கவனம் செலுத்தியுள்ளார்.

திலும் அமுனுகம, பிரசன்ன ரணவீர, ரஞ்சித் சொய்சா, ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, விமல் வீரவன்ச, அருந்திக்க பெர்னாண்டோ மற்றும் பாலித தேவப்பெரும ஆகிய பாராளுமன்ற உறுப்பினர்களையே பாராளுமன்றத்தின் சிறப்புரிமை குழுவிற்கு அனுப்புவது குறித்து சபாநாயகர் கவனம் செலுத்தியுள்ளார்.

இந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் கடந்த 15ஆம் மற்றும் 16ஆம் திகதிகளில் பாராளுமன்றத்திற்குள் குழப்பத்தை ஏற்படுத்தும் வகையில் நடந்துக்கொண்டமை தொடர்பான காட்சிகள் அடங்கிய காணொளிகள் மற்றும் புகைப்படங்களை சிறப்புரிமை குழுவுக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சபாநாயகரின் ஒலிவாங்கியை சேதப்படுத்தியதிலும் அமுனுகம, சபாநாயகரின் ஆசனத்தில் தண்ணீர் ஊற்றி, மிளகாய்த்தூள் கலந்த தண்ணீரை கொண்டு தாக்கிய பிரசன்ன ரணவீர, சபாநாயகரின் ஆசனத்தில் அமர்ந்த அருந்திக்க பெர்னாண்டோ, பாராளுமன்றத்தின் உணவகத்தில் இருந்து கத்தியை எடுத்து வந்து சபையில் குழப்பம் ஏற்படுத்தும் வகையில் நடந்துக்கொண்ட பாலித தேவப்பெரும, சபாநாயகர் மீது குப்பை வாளியை வீசி தாக்கிய ரஞ்சித் சொய்சா, நாற்காலி மற்றும் புத்தகங்களால் சபாநாயகரின் பாதுகாப்பு அதிகாரிகளை தாக்கிய ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, விமல் வீரவன்ச ஆகியோர் சம்பந்தமாக தெளிவான சாட்சியங்கள் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (78)

# ஆளும் கட்சியைப்போல் சுமந்திரன் செயற்படுகிறார்

## கெஹெலிய ரம்புக்வெல குற்றச்சாட்டு

தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ சுமந்திரன் போன்றவர்களே நேற்று முன்தினம் பாராளுமன்றதில் இடம்பெற்ற சம்பவங்களுக்கு காரணம் என அரசாங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

கண்டியில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே இராஜாங்க அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல இவ்வாறு குற்றம் சுமத்தியுள்ளார். இதன்போது அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

கரு ஜயசூரிய நினைத்தவாறு நிகழ்ச்சி நிரலை தயாரித்து கீழ்த்தரமாக செயற்பட முயற்சித்தால் அதற்கு எதிர்ப்பை தெரிவிப்பதில் என்ன தவறு.

கட்சி தலைவர்களின் கூட்டத்தில் சபாநாயகர் ஏகாதிபத்தியவாதியாக செயற்பட்டார். சபையை ஒழுங்காக நடத்துவதனை அவர் எட்டி உதைத்தால் நாம் என்ன செய்வது. கொழும்பில் உள்ள அனைத்து ரவுடிகளுக்கும் கழுத்து பட்டியணிவித்து பாராளுமன்ற கெலரியில் அமரவைத்தது யார்?

ஆகவே இன்று நாட்டில் ஏற்பட்டுள்ள அனைத்து பிரச்சினைகளுக்கும் சபாநாயகர் கரு ஜயசூரியவே காரணம். ஐரோப்பிய ஒன்றியம் எம்மை பாராளுமன்றத்தை கூட்டுமாறு கோருகின்றது.

அவர்கள் நினைத்தவாறு எம்மை ஆட்டுவிக்க முடியாது. காரணம் இது அந்த நாட்டு பாராளுமன்றம் இல்லை. அவ்வாறு மக்கள் பணம் கொடுத்து இதனை செய்விக்கின்றனர்.

சுமந்திரனே இதன் ஏற்பாட்டாளராக செயற்படுகின்றார். பாராளுமன்றில் எதிர்தரப்பில் அமர்ந்திருக்கும் சுமந்திரனே ஆளும் கட்சியை போல் செயற்படுகின்றார்.

ஆகவே நேற்று முன்தினம் பாராளுமன்ற நிலைமைக்கு கரு ஜயசூரியவே முழு காரணம். நம்பிக்கையில்லா பிரேரணையை நிராகரித்தாக ஜனாதிபதி நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார். (ம)












## முடிந்தால் பெரும்...

மகிந்த ராஜபக்ஷ நேற்று முற்பகல் முக்கிய சந்திப்பில் ஈடுபட்டார். இந்தக் கூட்டம், பிரதமரின் செயலகத்தில் இடம்பெற்றது.

நாளை திங்கட்கிழமை பாராளுமன்றத்தில் தமது அரசின் பெரும்பான்மை பலத்தை நிரூபிப்பது குறித்து, இந்தக் கூட்டத்தில் ஆராயப்பட்டது என்று கூறப்படுகிறது. (78)

## அரசியலமைப்பை...

போதே அவர் மேற்படி கூறினார்.

மேலும் அவர் கூறுகையில், இன்று ஏற்பட்டுள்ள பிரச்சினை முழுநாட்டையும் ஏதோ ஒரு விதத்தில் பாதித்துள்ளது .

ஜனாதிபதி தூரநோக்கில்லாமல் அரசியலமைப்பை மீறி மேற்கொண்ட செயற்பாடுகளால் பாராளுமன்றில் மிளகாய்த்தூள் வீசும் நிலைமை ஏற்பட்டுள்ளது. சபாநாயகரின் கதிரையை தூக்கிகொண்டு ஓடுகிறார்கள். இன்னுமொருவர் கத்தியோடு நிற்கிறார். இன்று பாராளுமன்றத்தின் நிலை இப்படியிருக்கிறது.

மகிந்த ராஜபக்ஷ மக்கள் மீது அக்கறை கொண்டவராக இருந்தால் தனக்கு பெரும்பான்மை காட்டமுடியாது என்பதை உணர்ந்து விலகிக்கொள்ளவேண்டும். அந்த எண்ணம் அவருக்கு இல்லை.

எமக்கு கிடைக்கவேண்டிய உரிமையை இந்த நாட்டினுடைய அரசியலமைப்பின் மூலம் தான் பெற்றுகொள்ளமுடியும் என்ற நம்பிக்கையில் நாம் இருக்கிறோம். அப்படியிருக்கும் போது ஏற்கெனவே நடைமுறையில் உள்ள அரசியலமைப்பையே ஜனாதிபதியும் முன்னாள் ஜனாதிபதியும் சேர்ந்து அப்பட்டமாக மீறும்போது அரசியலமைப்பினூடாக தமிழர்களிற்கு கொடுக்கப்படும் உரிமைகள் ஏன் மீறப்படாது என்ற கேள்வி எழுகிறது.

எனவே தமிழர்கள் அரசியலமைப்பை நம்பாமல் தனிநாட்டுக் கோரிக்கைக்கு போக வேண்டுமா என்ற கேள்வியை எமக்கு முன்னாலே இந்த அரசாங்கம் கொண்டுவந்து விட்டிருக்கிறது. எனவே ஒரு சிவில் யுத்தம் ஏற்படுவதற்கான சூழலை உருவாக்கியுள்ளதை அவர்கள் உணரவேண்டும் என்று கூறினார். (78-250)

## அரசியலுக்குள்...

மன்ற உறுப்பினர்களை தமது தரப்பிற்கு இழுப்பதற்கான பேரம்பேசும் நடவடிக்கைகளை மகிந்த தரப்பினர் ஆரம்பித்துள்ளதாக ஐக்கிய தேசிய கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரான மங்கள சமரவீர தெரிவித்திருந்தார். தனது டுவிட்டர் பக்கத்தில் அவர் இதனை குறிப்பிட்டிருந்தார்.

இலஞ்சம் வழங்குவது தொடர்பான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள குழு வினரிற்கு யோஷித்த ராஜபக்ஷ தலைமை தாங்குவதாகவும் மங்கள சமரவீர குறிப்பிட்டிருந்தார்.

இந்த நிலையில் இதற்கு பதிலளிக்கும் போதே யோஷித்த ராஜபக்ஷ மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இதுதொடர்பில் தமது டுவிட்டர் பக்கத்தில் கருத்து வெளியிட்டுள்ள அவர்,

நான் தற்போது இடம்பெற்று வரும் ரக்பி தொடரிலேயே எனது முழு அவதானத்தையும் செலுத்தியுள்ளேன். உண்மையாகவே இந்த பேரம் பேசும் செயல்களுக்கு எனக்கு நேரமில்லை. அதனால் என் பெயரை இந்த அரசியலுக்குள் இழுக்க வேண்டாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (78)

## மக்கள் சேவைக...

மாவட்ட செயலாளர்கள், தலைமை செயலாளர்கள் உள்ளிட்ட அரச நிறுவனங்களின் தலைவர்களுடன் இடம்பெற்ற விசேட சந்திப்பொன்றின்போதே ஜனாதிபதி இந்த பணிப்புரையை விடுத்தார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் நிலைமைகள் விரைவில் தீர்ந்துவிடும் எனக் குறிப்பிட்ட ஜனாதிபதி, அதுவரையில் அரச கட்டமைப்பின் நடவடிக்கைகளையும் மக்கள் சேவைகளையும் பலமாக முன்கொண்டு செல்வது அரச அதிகாரிகளின் பொறுப்பாகுமென்றும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

அனைத்து அரசாங்க அதிகாரிகளும் பக்கச்சார்பின்றி தமது பொறுப்புக்களை நிறைவேற்றுவார்கள் என தான் எதிர்பார்ப்பதாகக் குறிப்பிட்ட ஜனாதிபதி, இதுவரையில் எந்தவொரு அரச அதிகாரிக்கு எதிராக முறைப்பாடுகள் தெரிவிக்கப்படாமை குறித்து மகிழ்ச்சி வெளியிட்டார்.

அமைச்சுக்களின் நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றபோது ஏற்பட்டுள்ள சில பிரச்சினைகள் குறித்து அமைச்சுக்களின் செயலாளர்கள் ஜனாதிபதிக்கு விளக்கினர். அது குறித்து கவனம் செலுத்திய ஜனாதிபதி, நேற்று இந்த கலந்துரையாடலில் வழங்கப்பட்ட விசேட பணிப்புரையின்பேரில் எவ்வித தடையுமின்றி அந்த நடவடிக்கைகளை முன்கொண்டு செல்லுமாறு குறிப்பிட்டார்.

துறைமுகம், மின்சாரம், பெற்றோலியம், சுகாதார சேவை மற்றும் உணவு உள்ளிட்ட அத்தியாவசிய சேவைகள் எவ்வித பிரச்சினையுமின்றி முன்னெடுக்கப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திய ஜனாதிபதி, இவற்றுக்கு இன்று உரிய முறையில் தீர்மானங்களை மேற்கொள்ளாவிட்டால் இன்னும் சில மாதங்களில் நாடு பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்க வேண்டி இருக்குமென்றும் குறிப்பிட்டார்.

கிராம சக்தி மக்கள் இயக்கம் உள்ளிட்ட மக்கள் நலன்பேணும் நடவடிக்கைகளுக்காக நடைமுறைப்படுத்தப்படும் அரசாங்கத்தின் முக்கிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை தொடர்ந்தும் முன்னெடுப்பதற்கு விசேட கவனம் செலுத்துமாறு அரசாங்க அதிகாரிகளிடம் தெரிவித்த ஜனாதிபதி, அந்த நடவடிக்கைகளை கண்காணிக்குமாறு தான் ஆளுநர்களுக்கு பணிப்புரை விடுத்துள்ளதாகத் தெரிவித்தார்.

போதுமானளவு மழை நீர் நாட்டுக்கு கிடைக்கப்பெற்றுள்ளமையால் நான்கு வருட வரட்சி நிலைமை நீங்கியுள்ள நிலையில் இதனை பயன்படுத்தி தேசிய உணவு உற்பத்தி நிகழ்ச்சித்திட்டம் உள்ளிட்ட விவசாய நிகழ்ச்சித்திட்டங்களை வெற்றிகொள்வதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படுமாறு குறிப்பிட்ட ஜனாதிபதி, குறித்த விடயங்களுக்கு பொறுப்பான அமைச்சுக்களுடன் மாத்திரம் வரையறுத்துக்கொள்ளாது அனைத்து அரச நிறுவனங்களும் பேதங்களின்றி இதற்காக ஒன்றுபட வேண்டியதன் அவசியத்தையும் சுட்டிக்காட்டினார்.

அமைச்சுக்களின் நிதி முன்னேற்றம் மற்றும் மாவட்ட ரீதியான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றங்கள் மீளாய்வு செய்யப்பட்டதுடன், முன்வைக்கப்பட்ட சில பிரச்சினைகள் தொடர்பில் மேலும் கலந்துரையாடி அமைச்சுக்களின் செயலாளர்களுக்கு தேவையான பணிப்புரைகளை வழங்குவதாக ஜனாதிபதி குறிப்பிட்டார். (78)

## நிலக்கீ...

பாட்டில் இருந்த இப்பதுங்குகுழியே நேற்று உடைக்கப்பட்டது. தெற்கில் இருந்து வடக்கு நோக்கி வருகின்ற சுற்றுலாப் பயணிகள் இப்பதுங்கு குழியை கடந்த வருடம் வரை பார்வையிட்டு வந்தனர். அது இவ்வருடம் முதல் இடைநிறுத்தப்பட்டிருந்தது இந்நிலையில் அதனை உடைக்கும் பணி முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதன் போது ஊடகவியலாளர்களுக்கு புகைப்படம் எடுப்பதற்கு அனுமதி கோரிய போதும் அனுமதி வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் இந்தப் பகுதி இராணுவத்தினரின் வசமுள்ள நிலையில் பதுங்குகுழி அகற்றப்படுகின்றமையால் குறித்த காணி விடுவிப்பிற்கான சந்தர்ப்பம் இருப்பதாகவும் அறிய முடிகிறது. (78-312)

## எம்மக்களின் அபி...

யார் சொல்கிறார்களோ அவரை பற்றி பரிசீலிப்பதற்கு தயாராக உள்ளோம். அந்த காலத்திற்கும், நேரத்திற்குமாக காத்திருக்கின்றோம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தெரிவித்தார்.

நினைவு நிகழ்வு ஒன்றில் மாணவர்களிற்கு உதவிப் பொருட்கள் வழங்கும் வைபவம் நேற்று சனிக்கிழமை கரவெட்டி பிரதேசசபை மண்டபத்தில் சமூகசேவையாளர் மு.மகேந்திரம் தலைமையில் நடைபெற்றது. அங்கு பிரதம விருந்தினராக கலந்து கொண்ட அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை பாராளுமன்றமானது இன்று காடையர்களின் கூடாரமாக காணப்படுகிறது. இவ்வாறான நிலையில் தமிழர்களிற்கு தீர்வு கிடைக்குமா?.

இந்த மண்ணிலே நாங்கள் போராடி, எத்தனையோ உயிர்களை காவு கொடுத்து அரசியல் தீர்வு ஒன்று வரும் என்ற சிந்தனையோடு நல்லெண்ணங்களை சொல்லிவருகின்ற போதெல்லாம் இலங்கை அரசின் மகாவம்ச, பௌத்த சிந்தனைகளும் அவர்களிற்குள்ளே பெரிய பூதாகரத்தை உருவாக்கி உலகமே வெட்கித் தலைகுனிய கூடிய அளவிற்கு அவர்களின் காடைத்தனத்தை தெளிவாக காட்டி நிற்கிறது. இவர்களின் காடைத்தனம் இது முதற்தடவையல்ல.

மூன்று ஆண்டுக்கு மூன் ஓர் ஜனாதிபதி மாற்றத்தைக் கொண்டு வந்து அரசியல் முயற்சியை முன்னெடுத்த போதுதான் இந்த நிலைமையை எங்களால் பார்க்க முடிகிறது.

மகிந்த இந்த மண்ணிலே பாரிய மனித படுகொலை புரிந்த மனிதன். இவ்வாறான கொலையாளியை நாங்கள் கொண்டுவந்த ஜனாதிபதி, அவரை பிரதமராக அறிவித்துள்ளார்.

யார் ஜனாதிபதியாக, பிரதமராக வரக்கூடாது என்பதற்காக எந்த கூடாரத்தில் இருந்து மைத்திரியை நாங்கள் கொண்டு வந்தோமோ அதே கூடாரத்தில் இருந்த மகிந்தவை அவர் மீண்டும் பிரதமராக நியமித்தார்.

மகிந்தவுடன் சம்பந்தன் பேசினார். அரசியல் கைதிகள் விடுதலை, காணிவிடுவிப்பு, அரசியல் தீர்வைமுன்னகர்த்தி முடிவை ஓட்டல், காணாமல் போனோர் விடயம் சம்பந்தமாக எழுத்து மூலம் மகிந்தவை கோரினோம் அதற்கான பதிலை வார்த்தைகளால் கூட தருவதற்கு மகிந்த தயாராக இல்லை.

யார் பிரதமராக வருவதாயினும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 14 ஆசனமும் பெறுமதி வாய்ந்தவையாக இருக்கிறது. மகிந்தவை எழுத்து மூலம் கேட்டது போல ரணிலிடமும் கேட்டுள்ளோம். அவர்களும் நம்பிக்கைக்குரியவர்களா என்ற கேள்வி எங்களிடத்திலே இருக்கிறது.

பாராளுமன்றத்தில் நெருப்பு வைத்தல், கிழித்தெறிதல், குப்பைக்கூடையால் எறிதல் போன்ற கலாசாரத்தை தொடக்கியவர்கள் ஐ.தே.கட்சியினரே.

எங்களுடைய மக்களின் எண்ணங்களையும், அபிலாசைகளையும் சரியாக தரக்கூடிய நபரை நாங்கள் தெரிவுசெய்வோம்.

அரசியல் கைதிகள் விடுதலை, காணி விடுவிப்பு, தீர்வு திட்டம் தொடர்பில் உத்தரவாதம் தந்தால் பரிசீலிக்க தயாராக உள்ளோம். இரண்டு பேரும் எந்த தீர்வையும் தரப் போவதில்லை என்பது மிகத் தெளிவான விடயம் எனத் தெரிவித்தார். (78-60)

## விசேட சந்திப்புக்...

ந்ததார்.

இதேவேளை இன்றைய தினம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் சந்திப்பதற்கு ஜனாதிபதி அழைப்பு விடுத்துள்ளார்.

அத்துடன், புதிய அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் ஜனாதிபதி இன்றைய சந்திப்பில் கோருவார் என எதிர்பார்க்கப்படுகின்றது. (78)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

### மணமகள் தேவை

யாழ், இந்து உயர் வேளாளர், 32 வயது நிரம்பிய, ஆயிலியம், செவ்வாய் தோஷமற்ற, 20 கிரகபாவம் உடைய MBBS - Doctor மணமகனிற்கு மணமகள் தேவை.
தொடர்பு: 0773353044 (6488)

### காணி விற்பனைக்கு

கொக்குவில் பொற்பதி வீதி காளி கோவில் ஒழுங்கை ஆரம்பத்தில் காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 0772760493 (6231)

### உடன் விற்பனைக்கு

வங்கி முகாமையாளர் உபயோகித்த Toyata Noha - CR41 - NP HJ XX, Suzuki Chevrolet Cruze NP KK XX. Full option - Excellent Condition.
தொடர்பு: 0772991810 (6479)

### விரைவு பொதிகள் சேவை

விசேட விலை குறைப்பு



UK - 550 /=Kg
கனடா - 900 /=Kg
ஜேர்மனி - 700 /=Kg
நெதர்லாந்து - 700 /=Kg
(நிபந்தனைகளுக்குட்பட்டது)
DELIVERY IN 3-5 DAYS
0768226240
V2 TRAVELS
● மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை
(C-4381)

### வெளிநாடு - உள்நாடுகளுக்கான விரைவுப் பொதிகள் சேவை

WESTERN UNION MONEY TRANSFER 070 330 5500 WESTERN UNION MONEY TRANSFER
அண்ணா பொதிகள் சேவை
976,கே.கே.எஸ் வீதி,நாச்சிமார் கோவிலடி
021 221 5656 யாழ்ப்பாணம் 077 888 9388
பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும்,குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிடவும் எம்மை நாடுங்கள்.
3 - 6 நாட்களுக்குள் உங்கள் கைகளில்
வேலணை – அரியாலை – சங்கானை – சுன்னாகம்
கரணவாய் –மீசாலை–கிளிநொச்சி–கனகராயன்குளம்
முல்லைத்தீவு–மன்னார்–வவுனியா–திருகோணமலை
(C-4391)

### பணியாளர் தேவை

முன்னணி தனியார் கல்வி நிறுவனம் ஒன்றுக்கு கீழ்வரும் பணியாளர்கள் வேண்டப்படுகின்றனர்.
- சிற்றூழியர் (பெண்)
- வகுப்பு மேற்பார்வையாளர் (பெண்)
- கணனி பதிவாளர் (பெண்)

23.11.2018 வெள்ளிக்கிழமை மாலை 3.00 மணிக்கு நேர்முகத் தேர்வுக்கு நேரில் சமுகமளிக்கவும். New Science World
Brown Road, Navalar Road Junction, Jaffna.
T.P: 077 336 4055, 021 222 6690 (C-4416)

### SB TRAVELS AND TOURS PVT LTD

விமான ரிக்கட்களின் நேரடி முகவராக செயற்படும் SB TRAVELS AND TOURS PVT LTD தற்போது சென்னை சென்று வருவதற்கான ரிக்கட்களை **20,500/=**ல் இருந்து வழங்கி வருகின்றது. (November மட்டும்) மற்றும் **கனடா - 88,000/=** (One Way), **பிரான்ஸ் - 87,000/=** (Return) இப்பொழுதே அழைப்பை ஏற்படுத்தி தெரிந்து கொள்ளுங்கள். தொடர்பு:
**021 222 8555, 021 222 9555, 076 691 1080, 076 691 1082** (C-4420)

### விசேட விலைக்கழிவு (15 - 55% வரை)

லங்கா வோல்ரைல்ஸ், லங்கா புளோரைல்ஸ் மற்றும் பெயின்ற் வகைகள்
ஏகவிநியோகஸ்தர்
நியூகமல் செரமிக்ஸ்
37, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.
தொ.பே: 2222085, 2219305 பக்ஸ்: 2224544
(நிபந்தனைக்குட்பட்டது) (6486)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.11.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

விலை : 30.00
Registered as a Newspaper in Srilanka
வாரமலர்
# வலம்புரி
சங்குநாதம்
நாதம் 192
Viber 076 636 3378
வள்ளுவர் ஆண்டு 2049 18.11.2018 தொலைபேசி : 021 222 3378



# போர்க்களமானது பாராளுமன்றம்

உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

# ஆலடி மாநாடு

**ஆசிரியர் குறிப்பு**

ஆலடி மாநாட்டின் வாசகப் பெருமக்களுக்கு அன்பு வணக்கம். சமகால அரசியல், சமூக, பொருளாதாரப் பிரச்சினையை சம்பாசிக்கின்ற ஓர் இடமாக ஆலடி மாநாடு இருப்பதை நீங்கள் அறிவீர்கள்.

இங்கு யாரையும் புண்படுத்தும்நோக்கமோ அன்றி யாரையும் பழிவாங்கும் நினைப்போ ஆலடி மாநாட்டிற்கு இல்லை என்பதை முதற்கண் கூறிக்கொள்கின்றோம்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை வெளியாகிய ஆலடி மாநாட்டில் யாழ். போதனா வைத்தியசாலையின் இதய சத்திரசிகிச்சை பற்றிய சில சிலாகிப்பு ஆலடி மாநாட்டில் இடம்பெற்றிருந்தது.

யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலையின் இதய சத்திரசிகிச்சைப் பிரிவு இன்னமும் நவீனமயப்படுத்தப்பட வேண்டும் என்ற நோக்குடனும் அதற்குத் தனியான சத்திரசிகிச்சைப் பிரிவும் இதர வளங்களும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டும் என்ற அடிப்படையிலுமே அந்தச் சம்பாசணை இடம்பெற்றிருந்தது.

எனினும் அந்தச் சம்பாசணை யாழ். போதனா வைத்தியசாலையின் இதய சத்திரசிகிச்சை நிபுணர் உள்ளிட்ட மருத்துவக் குழுவிற்கு மனக்கஷ்டத்தை ஏற்படுத்தியதாக அறிய முடிந்தது.

இது கண்டு ஆலடி மாநாடு மிகுந்த மனவருத்தம் அடைகின்றது.

எங்கள் தாயகத்தில் இருந்து கடமையாற்றும் மருத்துவர்கள் என்றும் போற்றுதலுக்குரியவர்கள் என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை.

அதேபோன்று நவீன மருத்துவ வசதிகளை யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு வர வேண்டும் என அனைத்து முயற்சிகளையும் எடுத்து அதில் வெற்றி கண்டவர்களின் பணியும் சேவையும் அப்பளுக்கற்றது.

அந்தத் தூய்மையான சேவையை ஆலடி மாநாடு என்றும் போற்றி நிற்கும்.

எனவே ஆலடி மாநாட்டின் சம்பாசணைகள் குறித்த துறை மென்மேலும் உயர்வு பெறவேண்டும், வளர்ச்சி காணவேண்டும் என்பதற்கான உந்துசக்தியேயன்றி, அது சேவையாளர்களை மனம் நோக வைக்கின்ற சம்பாசணை அல்ல என்பதனை இவ்விடத்தில் நிறுதிட்டமாகக் கூறிக்கொள்ள விளைகின்றோம்.

அந்தவகையில், ஆலடி மாநாட்டின் சம்பாசணை யாரையேனும் புண்படுத்தியிருந்தால், அதற்காக ஆலடி மாநாடு மனம் வருந்திக் கொள்ளும் அதே வேளை ஆலடி மாநாட்டின் சம்பாசணைகளை யானையைப் பார்த்த குருடர்கள் போல் யாரும் பார்த்து விடாதீர்கள் என விநயமாக வேண்டி நிற்கின்றோம்.

-ஆசிரியர்-

வாத்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும்



ஆலடிக்கு வந்திருந்தனர். இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

**விதானையார்:** எங்கட பாராளுமன்றத்தில நடக்கிற சண்டையைப் பார்க்கும் போது மானம் கெட்ட சீவியம் எண்டு நினைக்கத் தோன்றுது.

**கங்காணி:** ஒரு பாராளுமன்றத்தில இரண்டு பிரதமர்கள் இருக்கிற வரலாறும் இலங்கையில தானே.

**மூப்பர்:** என்ன இருந்தாலும் இலங்கைத் திருநாடு இருக்கும் வரைக்கும் எங்கட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின்ர பெயர் நிலைத்திருக்கும்.

**பண்டிதர்:** மூப்பர் என்ன சொல்லுறியள். எனக்கெண்டால் ஒன்றும் விளங்கவில்லை.

**மூப்பர்:** பண்டிதர் ஐயா, ஜனாதிபதி மைத்திரியை ஒரு அமைதியான தலைவர் எண்டுதான் எல்லாரும் நினைத்தவியள்.

ஆனால் அவர் எவ்வளவு இராஜதந்திரமாக மகிந்த- ரணில் தரப்பை மோத விட்டிட்டு மிகப் பௌவ்யமாக இருக்கிறார். அப்ப அவற்ர பெயரை இந்த நாடு மறக்க முடியாது தானே.

**சாத்திரியார்:** அதெண்டால் உண்மைதான். பாராளுமன்றத்தில நடக்கிற சண்டையின்ர முடிவில மகிந்த ராஜபக்ஷ- ரணில் விக்கிரமசிங்க தரப்புக்கள் தொடர்பில எமது மக்கள் ஒரு முடிவுக்கு வருவினம்.

**விதானையார்:** சாத்திரியார் சாத்திரத்தில மட்டுமல்ல அரசியலிலும் கெட்டிக்காரன் என்பதை நிரூபித்துப் போட்டார்.

பாராளுமன்றத்தில நடக்கிற சண்டையை சனங்கள் மிகத் தெளிவாகவும் உன்னிப்பாகவும் கவனிக்கினம். இப்படிச் சண்டை நடக்கிறதால குறித்த அரசியல் தலைவர்கள் மக்களின்ர செல்வாக்கை இழக்கிற ஒரு சூழல் ஏற்பட்டிருக்குது.

ஆனாலும் சண்டைக் குசியில மக்கள் தங்களை வெறுக்கினம் என்பதைக் கூடப் புரிந்து கொள்ளமுடியாதவர்களாக அரசியல் தலைவர்கள் இருக்கினம் என்பது தான் உண்மை.

(இவ்வாறு விதானையார் கூற சாத்திரியாரின் காதில கங்காணி கார்த்திகேயன் ஏதோ இரகசியம் கூறினார். இதனை அவதானித்த வாத்தியார் வைத்திலிங்கம் இஞ்சே கங்காணியார் ஆலடி மாநாட்டில இரகசியம் என்ற பேச்சுக்கே இடமில்லை. எதையும் பரகசியமாகக் கூறவேணும். இப்படி வாத்தியார் கூறியதும் கங்காணியார் மௌனமாகினாராகியினும் சாத்திரியார் உண்மையைக் கூற முற்பட்டார்)

**சாத்திரியார்:** அது ஒண்டுமில்லை. பாராளுமன்றத்திற்குள்ள ஒருவர் கத்தியோட போனவரல்லோ. அப்போ அவர் ஆவா குழுவைச் சேர்ந்தவரோ என்று கங்காணியார் கேட்கிறார்.

(சாத்திரியார் இவ்வாறு கூறியதும் ஆலடி மாநாட்டில் பலத்த சிரிப்பொலி எழுந்தது)

**வாத்தியார்:** கங்காணியார் கேட்பதிலும் நியாயம் இருக்கத்தான் செய்யுது. கத்தியோட ஒரு பாராளுமன்ற உறுப்பினர் சபைக்குப் போவதென்பது சாதாரண விடயமல்ல. இருந்தும் ஆவாக்குழு எண்டால் வாள் தானே கொண்டு போயிருப்பினம். ஆசையால கத்தியோட போனவர் அவாகுழு போல.

**மூப்பர்:** அது சரி இலங்கைப் பாராளுமன்றத்தில நடக்கிற இந்தச் சண்டையைப் பார்த்தால் தமிழ் மக்கள் சிங்களத் தரப்புக்களோட எவ்வளவு கஷ்டப்படுகினம் என்பதை உலக நாடுகள் உணர்ந்து கொள்ளுமோ.

**பண்டிதர்:** தாராளமாக உணர்ந்து கொள்ளுவினம். ஆனால்...

**வாத்தியார்:** என்ன பண்டிதர் ஐயா ஏதோ சொல்ல வந்திட்டு ஆனால் எண்டதோட விட்டிட்டியள்.

**பண்டிதர்:** எங்கட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஐக்கிய தேசியக் கட்சியை விடத் தீவிரமாக இருக்குதல்லோ. அப்ப வெளிநாடுகள் நினைக்கும் ஐக்கிய தேசியக் கட்சி திறம் எண்டு.

**சாத்திரியார்:** ஜூலைக் கலவரத்தில பாதிக்கப்பட்ட தமிழ் மக்களைக் கேட்டால் ஐக்கிய தேசியக் கட்சி எப்படி என்பதைச் சொல்லுவினம்.

**கங்காணி:** அப்ப ஏன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ரணில் விக்கிரமசிங்கவைக் காப்பாற்றுது எண்டு உக்கிரமாக நிற்குது. மகிந்த ராஜபக்ஷவைத் தமிழ் மக்கள் எதிர்ப்பினம் என்பதால அப்படியொரு முடிவு. அதைவிட சம்பந்தர் ஐயாவுக்கு எதிர்க்கட்சித் தலைமைப் பதவி கொடுத்ததற்குக் கைமாறு. வடக்கு மாகாண சபை இருந்த போது கூட்டமைப்பிற்காக, முதலமைச்சர் விக்னேஸ்வரன் ஐயாவை ரணில் விக்கிரமசிங்க எதிர்த்தவரல்லோ. அந்த நன்றிக்கடன். இப்படியாகச் சொந்த நலன், சுயநலன் எண்டு அரசியல் இராஜதந்திரம் பறக்குது.

**விதானையார்:** அது சரி பாராளுமன்றத்தைக் கலைத்தது அரசியலமைப்புக்கு முரணானது எண்டு உயர் நீதிமன்றத்தில வழக்குத் தாக்கல் செய்ததில எங்கட சுமந்திரனாரும் முக்கியமானவர்களில் ஒருவர்.

**வாத்தியார்:** நல்லது... நல்லது இப்படி எங்கட தமிழ்மக்களின் பிரச்சினைகள் தொடர்பிலும் உயர் நீதிமன்றத்தை நாடவேணும். அப்பதான் தமிழ் மக்கள் தங்கட நலனைக் கவனிக்க தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் இருக்கினம் எண்டு நம்புவினம்.

**பண்டிதர்:** பாராளுமன்றம் கலைக்கப்பட்டதற்கு இடைக்காலத் தடையுத்தரவை நீதிமன்றம் பிறப்பித்திருந்தது. இது ஒரு இடைக்காலத் தடை உத்தரவு மட்டும்தான். டிசெம்பர் 7 ஆம் திகதி மீண்டும் நீதிமன்றம் குறித்த வழக்கை எடுக்கிற போது பாராளுமன்றத்தைக் கலைத்தது அரசியலமைப்புக்கு அமைவானது என்றும் தீர்ப்பு வழங்கப்படலாம்.

ஆக இடைக்கால தடை உத்தரவை வைத்து அதுவே நிரந்தரமான தீர்ப்பு என்று நினைத்து யாரும் துள்ளிக் குதிக்கிறது நல்லதல்ல.

இப்படி பண்டிதர் கூற அதனை ஆமோதிப்பது போல ஆலடிப் பிள்ளையார் கோயில் கண்டாமணியும் ஒலிக்க ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

**ஆதித்தன்**

# மகாவம்சம் முதல் பாராளுமன்றம் வரை



இலங்கையில் சிங்கள இனத்தின் வரலாற்றைக் கூறுகின்ற நூலாக மகாவம்சம் உள்ளது.

மகாவம்சத்தை மகாநாயக்க தேரர் எழுதியுள்ளார். மகாவம்சத்தின் கதைகள் விஞ்ஞான ரீதியில் ஏற்புடையதா? என்ற கேள்விகள் இருப்பினும் சகோதரர்களுக்கிடையில் நடந்த சண்டைகள் மகாவம்சத்தில் பதிவாகியிருப்பது இங்கு ஈண்டு கவனிக்கத்தக்கது.

அதாவது சிங்கள இனத்தின் வரலாற்றில் ஒற்றுமை என்பது தேடி எடுக்க வேண்டிய ஒரு விடயமாக இருந்தது என்பதற்கு மகாவம்சமே சான்றாகும் என்றால்;

மகாவம்சத்தில் கூறப்பட்ட அந்த ஒற்றுமையீனங்கள் சகோதரச் சண்டைகளுக்கான ஆதாரம் என்ன என்ற கேள்வி எழுந்தால், அதற்கான பதிலாக பாராளுமன்றத்தைச் சுட்டிக் காட்ட முடியும். அந்தளவுக்குப் பாராளுமன்ற அமர்வுகள் அமர்க்களமாக மாறியுள்ளதைக் காண முடியும்.

ஜனாதிபதி மைத்திரி ரணில் விக்கிரமசிங்கவைப் பிரதமர் பதவியில் இருந்து நீக்கி முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை பிரதமராக நியமித்த பின்பு பாராளுமன்றத்தில் களேபரம் ஆரம்பமாகியது எனலாம்.

அரசியலமைப்பின் பிரகாரம் பிரதமராக நியமிக்கப்பட்டவர் தனக்குக் கிடைக்கக் கூடிய பெரும்பான்மைப் பலத்தைப் பாராளுமன்றத்தில் நிரூபிப்பது கட்டாயமானதாகும்.

எனினும் அத்தகையதோர் விடயம் அரங்கேறாமலே பாராளுமன்றத்தைக் கலைப்பதான தனது அறிவிப்பை ஜனாதிபதி மைத்திரி விடுத்தார்.

பாராளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரம் 19 ஆவது திருத்தச் சட்டத்தின் பிரகாரம் ஜனாதிபதிக்கு இல்லை என்ற வாதத்தை முன்வைத்து பாராளுமன்றக் கலைப்பு விவகாரம் நீதிமன்றம் ஏறியது.

நிலைமையை அவதானித்த உயர் நீதிமன்றம் பாராளுமன்றக் கலைப்புக்கு இடைக் காலத் தடையை விதித்து டிசெம்பர் 7 ஆம் திகதி தனது தீர்ப்பை ஒத்திவைத்தது. இவையே அரசியல் புலத்தில் நடந்து முடிந்தவை.



நீதிமன்றம் இடைக்காலத் தடை விதிக்க, பாராளுமன்றம் கூடுகின்ற வாய்ப்பைப் பெற்றது. அந்த வாய்ப்பு தமிழ் மக்களுக்கு ஒரு பெரும் வரப்பிரசாதம் எனலாம்.

இதை நாம் கூறும்போது பாராளுமன்றத்தில் நடக்கின்ற அடிபாடு தமிழ்மக்களுக்கு வரப்பிரசாதம் என்று எவ்வாறு கூற முடியும் என்ற ஐய வினா பலரிடம் ஏற்படலாம்.

இங்குதான் இதுகாறும் சிங்கள ஆட்சியாளர்கள் பற்றியும் சிங்களப் பேரினவாதத்தின் வெறித்தனம் பற்றியும் தமிழர் தாயகம் என்பது தனித்துவமானது என்பதன் பொருள் பற்றியும் இப்போது சர்வதேச சமூகம் யதார்த்தபூர்வமாக உணர்ந்திருக்கும் எனலாம்.

சர்வதேச நாடுகளைச் சந்தித்து எங்களின் நிலைமைகளை எடுத்துக்கூறுவதில் இருக்கக்கூடிய சிரமங்கள் ஒருபுறம். தவிர, தமிழினத்தின் உரிமையை மறந்து ஆட்சியாளர்களுடன் இரண்டறக் கலந்து கொண்ட தமிழ் அரசியல் தலைமை மறுபுறம் என்ற கட்டத்தில், தமிழ் மக்களின் கோரிக்கைகளுக்கான நியாயத்தை சர்வதேச மட்டத்தில் நிரூபிக்க முடியாத இக்கட்டான சூழ்நிலையை தமிழினம் எதிர்கொண்டது.

இந்நிலையில் இலங்கைப் பாராளுமன்றத்தில் நடக்கின்ற அடிதடிச் சம்பவங்கள் இலங்கை ஆட்சியாளர்கள் பற்றி; சிங்களப் பேரினவா தம் பற்றி தமிழினம் கூறிய அத்தனையும் உண்மை என்பதை சர்வதேசம் உணர்ந்து கொள்ள முடியும். இதன் காரணமாகவே பாராளு மன்றத்தில் நடக்கின்றகளே பரம் தமிழினத்திற்கு வரப் பிரசாதம் எனக்கூறினோம்.

இலங்கையில் பாராளுமன்றத்தைக் கூட்டுவதற்கும் தீர்மானங்களை எடுப்பதற்கும் முடியாத அளவில் பாராளுமன்ற உறுப்பினர்கள் சண்டையில் ஈடுபட்டுள்ளனர். சபாநாயகர் தனது ஆசனத்தில் இருக்க முடியாத அளவில் நிலைமை உள்ளது.

அதிலும் பாராளுமன்றச் செயற்பாடுகள் நேரடியாக ஒலிபரப்புச் செய்யப்படும் போது பொதுமக்களும் சர்வதேச நாடுகளும் அந்நிகழ்வுகளைப் பார்க்கக் கூடியதாக உள்ளது.

இவ்வாறு நாட்டு மக்களும் உலக நாடுகளும் பார்க்கின்றன எனத் தெரிந்தும் மிளகாய்த்தூள் கொண்டும் கத்தி கொண்டும் பாராளுமன்றம் போகின்றார்கள் என்றால், மற்றவர்கள் பார்க்கவில்லை என்றால் எப்படியெல்லாம் நடந்து கொள்வார்கள் என்பதை நாம் கூறி யாரும் தெரிந்து கொள்ள வேண்டிய தேவை இருக்காதெனலாம்.

இவை ஒருபுறம் இருக்க, பாராளுமன்றத்தின் சீரான இயங்கு நிலையை ஏற்படுத்த யாரேனும் முற்படுகின்றார்களா என்றால் இல்லை என்பதே பதிலாகும்.

நிலைமையைச் சுமுகமாக்குவதில் சில விட்டுக் கொடுப்புக்களும் மாற்றங்களும் தேவையாகின்றன.

ஜனாதிபதி மைத்திரியைப் பொறுத்தவரை ரணில் விக்கிரமசிங்கமீது கடும் கோபம் கொண்டுள்ளார். ஜனாதிபதி கொண்ட கோபத்தின் உச்சத்தை அவரின் கடந்தகால உரைகளில் இருந்து அறிய முடிகின்றது.

எனவே ரணில் விக்கிரமசிங்க மீண்டும் பிரதமராகுவது சாத்தியமாகாதென்பது நிறுதிட்டமான உண்மையாயிற்று.

மகிந்த ராஜபக்ஷவை பிரதமராக்கியது தோல்வியில் முடிந்து விட்டது மட்டுமன்றி அது தனக்கும் நாட்டின் ஜனநாயகத்திற்கும் சவாலாகியது என்பதையும் ஜனாதிபதி மைத்திரி நன்கு உணர்ந்திருப்பார்.

அரசியலமைப்பினூடும் ஜனநாயகத் தன்மையோடும் ஆட்சியை நடத்துங்கள் என அமெரிக்கா, இந்தியா உள்ளிட்ட நாடுகள் ஜனாதிபதி மைத்திரிக்கு ஆலோசனை கூறுவதிலிருந்து நிலைமையை அவர் புரிந்து கொள்ள முடியும்.

தவிர, பாராளுமன்ற அமர்வுகளின் போது உறுப்பினர்கள் மிக மோசமாக நடந்து கொள்வதையும் பார்க்கும் போது, தான் தவறு செய்துவிட்டதாக ஜனாதிபதி மைத்திரி கருத இடமுண்டு.

ஆனாலும் நிலைமையை வழமைக்குக் கொண்டு வருவதென்றால், அது ரணிலைப் பிரதமராக்குவதன் மூலமல்ல. மாறாக சஜித் பிரேமதாஸவைப் பிரதமராக்குவதன் மூலமே தனக்குத் தோல்வி ஏற்படவில்லை என ஜனாதிபதி கருதுவார்.

ஆக, சஜித் பிரேமதாஸவைப் பிரதமராக்க ஒட்டுமொத்த ஐக்கிய தேசியக் கட்சியினர் பூரண சம்மதத்தை தெரிவித்தாலும் ரணில் விக்கிரமசிங்க அதனை ஒருபோதும் ஏற்கமாட்டார். அவரைப் பொறுத்தவரை மகிந்த ராஜபக்ஷ பிரதமராக இருக்கலாம். ஆனால் சஜித் பிரேமதாஸ பிரதமராக வந்தால் அது தனது ஆளுமைக்குறைவு என்றாகி விடும் என்ற நிணைப்பு அவரை ஒருபோதும் உடன்பட விடாது.

ஆகையால் இவற்றையெல்லாம் தொகுத்தும் வகுத்தும் பார்க்கும் போது பாராளுமன்றத்தின் எதிர்வரும் காலங்கள் சண்டை சச்சரவாக இருக்கும் என்பது மட்டும் சர்வ நிச்சயம்.

**திருநீலகண்டன்**




# வல்லவனுக்கு வல்லவன்



மன்னர் மகிபாலனின் அரசவையில் பாலா என்ற விகடகவி இருந்தார். விகடகவியின் புத்திக்கூர்மை மன்னருக்கு மிகவும் பிடித்துப் போனதால் அவரை தனது அரசாங்க ஆலோசகராகவும் நியமித்துக் கொண்டார்.

விகடகவி பாலா அரசாங்க ஆலோசகராக இருப்பது அரண்மனை அமைச்சர்களுக்கும் அதிகாரிகளுக்கும் பொறாமையை உண்டு பண்ணியது. விகடகவியை எப்படியாவது அரண்மனையை விட்டே ஒழித்து விட வேண்டும் என அமைச்சர்களும், அதிகாரிகளும் தங்களுக்குள் முடிவெடுத்தனர்.

அன்று மன்னர் சபையில் அறிஞர் பெருமக்கள் பலரும் வீற்றிருந்தனர். அப்போது அரசபை மன்றத்திற்கு அயல்நாட்டு அறிஞர் ஒருவர் வந்தார். அவரைக் கண்டதும் அமைச்சர்களும் அதிகாரிகளும் சந்தோசத்தால் துள்ளி எழுந்தனர். ஏனென்றால் அவர்கள் தான் தங்கள் திட்டத்தின்படி அந்த அறிஞரை வரவழைத்திருந்தனர்.

"அரசே! நான் சாஸ்திரங்களையும் பல கலைகளையும் கற்றுத் தேர்ந்தவன். மேலும் நான் ஒரு சிறந்த விகடகவி. என்னோடு யாருமே போட்டியிட முடியாது. எனது திறமையை நிரூபிக்கவே உங்களைத் தேடி வந்துள்ளேன்" என்று கூறினார். இவர்களின் கபட நாடகத்தை அறியாத மன்னரும், "வாருங்கள் விகடகவியே! எங்கள் அரசவையிலும் உங்களைப் போன்று ஒரு விகடகவி இருக்கிறார். இருந்தாலும் உங்கள் திறமையை இந்த சபையினில் காட்டுங்கள்" என்று கூறினார்.

"அரசே! உங்கள் நாட்டு விகடகவியோடு நான் போட்டியிட வேண்டும். அதற்கு நீங்கள் அனுமதி தர வேண்டும்" என்று பணிவுடன் வேண்டி நின்றார். அதைக் கேட்ட மன்னரும் ஹ... ஹா... ஹா... என்று பலமாகச் சிரித்தார்.

"அரசவை விகடகவியே நீங்கள் மிகச் சிறந்த அறிவாளி என்று கேள்விப்பட்டேன். கணிதத்திலும் தேர்ச்சி பெற்றவர் என்று அறிந்தேன். அதனால் உங்கள் தலைமுடியை ஒவ்வொன்றாக எண்ணி அதன் மொத்த எண்ணிக்கையையும் உங்களால் கூற முடியுமா?" என்றார். அயல்நாட்டு அறிஞரின் கேள்வி அனைவரையும் திகைப்பில் ஆழ்த்தியது.

"தலைமுடியை எப்படி எண்ண முடியும்?" என்று ஒருவருக்கொருவர் தங்களை கேட்டுக் கொண்டனர்.

"ஐயா! அறிஞரே! நான் மொத்த முடியை எண்ணி முடிப்பதற்கு ஒருநாள் கால அவகாசம் வேண்டும். நாளை என் தலைமுடியின் எண்ணிக்கையை இந்த அரசவையில் தெரிவிக்கிறேன்" என்று கூறினார் பாலா.

அதைக் கேட்ட அதிகாரிகளும் அமைச்சர்களும் "ஒரு நாள் என்ன பத்து நாட்கள் கால அவகாசம் எடுத்துக் கொண்டாலும் பாலா தன் தலைமுடியை எண்ண முடியாது" என்று தங்களுக்குள் கூறிக் கொண்டனர்.

அடுத்த நாள் சபை கூடியது. அனைவரும் விகடகவி பாலா என்ன செய்யப் போகிறார் என்ற ஆவலோடு இருந்தனர். "அறிஞர் பெருமானே! நீங்கள் விதித்தபடி நான் எனது தலைமுடியை எண்ணி முடித்துவிட்டேன். ஆனால் அதற்குள் ஒரு நிபந்தனை. அந்த நிபந்தனைக்கு நீங்கள் கட்டுப்பட்டாக வேண்டும். "எனது எண்ணிக்கை தவறாக இருந்தால் நான் எனது தலையை இழக்க தயாராக இருக்கிறேன். ஆனால், சரியாக இருந்தால் நீங்கள் உங்கள் தலையை இழக்க வேண்டும். சம்மதமா?" என்றார்.

"பாலா! உமது நிபந்தனையை நான் ஏற்றுக் கொள்கிறேன். நீர் உமது தலைமுடியின் எண்ணிக்கையை கூறும்" என்று கம்பீரமாக குரல் கொடுத்தார்.


பாலாவின் பதிலைக் கேட்க எல்லோரும் ஆவலாக இருக்க, அவர் மௌனமாக நின்றபடி தன் தலையின் மேலிருந்த தலைப்பாகையை கழற்றி எடுக்க, அவர் தலையை கண்ட அனைவரும் "கொல்' என்று சிரித்து விட்டனர். பாலா மொட்டை தலையுடன் நின்று கொண்டிருந்தார். அவர் தலையின் முன்னே இரண்டு முடிகள் மட்டும் நீண்டு கொண்டிருந்தன.

"அறிஞர் பெருமானே! என் தலையில் இரண்டு முடிகள் தான் இருக்கின்றன. நீங்களும் நன்றாக எண்ணிப் பாருங்கள்." என்று கூறினார். பாலாவை ஒழிப்பதற்கு திட்டம் போட்ட அதிகாரிகளும் அமைச்சர்களும் வெட்கத்தால் தலை குனிந்தனர். தன் தலைக்கு ஆபத்து வந்துவிட்டதை நினைத்த அயல்நாட்டு அறிஞரின் உடலெல்லாம் நடுங்கியது.

"அறிஞரே! நீங்கள் அச்சத்தால் நடுங்குவது நீங்கள் கற்ற கல்விக்கு அழகல்ல! உங்களுக்கு எந்த ஆபத்தும் வராது. இனிமேலாவது என்னை அழிக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு அலைபவர்களுடன் கூட்டுச் சேர்ந்து கொண்டு இந்த மாதிரி செயல்களில் ஈடுபடாதீர்கள்." என்று கூறினார். மன்னர் விகடகவி பாலாவுக்கு பல பரிசுகள் கொடுத்து தனது பாராட்டையும் தெரிவித்தார்.



கண்டுபிடியுங்கள்...














**மைத்திரி சம்பந்தரை பிரதமர் ஆக்கியிருந்தால்?**

**ஆட்சிக்கு யார்வந்தால் என்ன நமக்கு ஒன்றுதானே. மோதகமும் கொழுக்கட்டையும்தான்?**

**சர்கார் வசூல் எப்படி?**

**சுதன்** — குப்பிளான்

**சிங்களவர்களுக்கு நீதி பெற்றுக் கொடுக்கும் தமிழ் தலைமை தமிழினத்துக்கு ஏதும் பெற்றுத் தருமா?**

அதுதான் பாராளுமன்ற கலைப்புக்கு இடைக்காலத் தடை விதிக்க சில குறுக்கால போனதுகள் வெடி கொளுத்தினதுகளாமே.

இதே விடயத்தை முழுமூச்சாய் தமிழர் உரிமைகளுக்காகப் பேசியிருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும்.

**நேதாஜி** — வதிரி

**பாராளுமன்ற ரணகளம் எப்படி?**

ஒரு சிநேகிதரைச் சந்தித்தேன். அவர் தலையில் அடித்துக்கூறிய விடயம் இது. பாராளுமன்றச் சண்டை ரீ.வியில் நேரடி ஒளிபரப்பப்பட்டுக் கொண்டிருந்தது. அந்த அடிதடியைப் பார்த்த என் மகன் ஓடி வந்து அப்பா நல்ல சண்டைப் படம் பாருங்கோ என்றான்.

நான் இல்லையடா அது பாராளுமன்றத்தில் சண்டை என்றேன். அப்பா அப்பிடி என்றால் எங்கடை தமிழ் எம்.பிக்கள் இதில யாரற்ற கன்னை அப்பா என்றவாறு ஆர்வமாகப் பார்க்கத் தொடங்கினான் என்றார்.

**பரமேஸ்** — வதிரி

**மிளகாய்த்தூள் விலை உயருமா வியாசரே?**

உயர்ந்தாலும் ஆச்சரியப்பட இல்லை. இவை பாராளுமன்றம் தாண்டி மாகாண சபை, மாநகர சபை, நகர சபை, பிரதேச சபை இப்படி எவ்வளவு அமர்வுகள். அவ்வளவுக்கும் மிளகாய்த்தூள் தேவை எனில் வெளிநாட்டில் இருந்துதான் மிளகாய்த்தூள் இறக்குமதி செய்ய வேண்டும். இதுக்கு வரி விலக்கு செய்ய வேண்டியது அரசின் கடமை என்பதை இவ்விடத்தில் பதிவிடுகின்றேன்.

**டிலக்சன்** — இளவாலை

**பசிக்கும் வயிறு யாருக்குப் புரியும்?**

அண்மையில் பேஸ்புக்கில் ஒரு வீடியோ பார்த்தேன். பணக்கார தாய் பிள்ளைக்கு கரண்டியால் சோறூட்டுகிறாள். குழந்தை வேண்டாம் என மறுக்கிறது. உடனே தாய் குழந்தையின் பொம்மைக்கு உணவைக் கொடுக்க அது உண்ணமறுப்பது போல தலையை ஆட்டச் செய்து விட்டு அந்த பொம்மையை அடி அடி என அடிக்கிறாள்.

அதை குழந்தை பார்க்கிறது. அதன் பின் குழந்தைக்கு உணவை ஊட்ட ஆரம்பிக்கிறாள் குழந்தை உணவை உண்கிறது. உணவை உண்ண வைக்க பொம்மைக்கு அடிக்க வேண்டிய நிலை இருக்கிறது. ஆனால் எத்தனையோ ஏழைக் குழந்தைகள் உண்ண உணவு கிடைக்காமல் பட்டினி கிடக்கின்றது.

**கோகுலன்** — வரணி

**திருமணத்துக்கு அப்பாற்பட்ட உறவை பேணுபவர்கள் பற்றி?**

எப்பாற்பட்ட உறவடா புரியவில்லை கொஞ்சம் விளக்கிச் சொல்லுங்களன்.

**இரத்தினம்** — நவாலி

**பாராளுமன்றம் கலைக்கப்பட்டது எதனால்?**

இவை வெல்லுவினம் என்று அவையும் அவை வெல்லுவினம் என்று இவையும் பயந்து பயந்து அடிபட்டு ரத்தக் களரி ஏற்பட்டுப்போய்விடும் என்றுதான் கலைத்தேன் என்கிறாரே ஜனாதிபதி.

**றொபின்சன்** — நவாலி

**மைத்திரி சம்பந்தரை பிரதமர் ஆக்கியிருந்தால்?**

போங்கடா டேய் எதிர்க்கட்சிப் பதவிக்கே இந்தக் கேடென்றால் இதில் பிரதமர் வேறு. உங்கட சிந்தனையில தீயை வைக்க.

**உங்கள் எண்ணத்தில் தோன்றும் கேள்விகளை**
**வியாசரிடம் கேளுங்கள்**
**021 567 1532, 076 636 3378 என்ற Viber இலக்கத்துக்கோ SMS அனுப்புங்கள்**

**ஜக்சன்** — அரசடி

**இப்போது யார் பிரதமர்?**

அதுதான் எனக்கும் குழப்பமா இருக்கு. இப்போது பரீட்சைக் காலம். வரலாற்றுப் பாடம் படிக்கும் மாணவர்களுக்கு இந்தக் கேள்வி வந்தால் எதை எழுதுவார்கள். யாரை எழுதுவார்கள். மன்னிக்கவும் தங்களின் கேள்வி தற்போது இலங்கையில் கேள்விக்குறியாக இருக்கிறது என்று பதில் எழுதினால் சரிவிழும் போல.

**ஜது** — ஆலடி

**ஆட்சிக்கு யார்வந்தால் என்ன நமக்கு ஒன்றுதானே. மோதகமும் கொழுக்கட்டையும்தான்?**

நல்லாச் சொன்னாயடா தம்பி. யார் யார் கொண்டையில பிடிச்சு அடிபட்டா நமக்கென்ன. நாம நடுநிலை எண்டு நின்று வேடிக்கை பாக்கிறதை விட்டுவிட்டு யாருக்கும் பின்னால் போனா ஏதும் நடக்கிறமாதிரி இல்லை என்ன செய்ய எனக்கும் உனக்கும் விளங்குது. விளங்கிறவியளுக்கு விளங்கேல்லையே.

**கரன்** — நல்லூர்

**சிறுவயதுக் காதல் கல்யாணம் வரை நீடிக்குமா?**

பிஞ்சில் பழுத்த வெம்பலை மறுபடி முற்ற வைத்து கனியாக்க முடியுமா? எதுவென்றாலும் வரவேண்டிய வயதில் வந்தால்தான் அதற்கு மதிப்பும் மரியாதையும் இருக்கும். அவ்வளவுதான்.

**ராகுல்** — யாழ்ப்பாணம்

**சர்கார் வசூல் எப்படி?**

இரண்டு நாட்களில் நூறு கோடி எனின் சர்காரின் பிரமாண்ட வெற்றியைச் சிந்தித்து பாருங்களேன். தமிழ் நாட்டின் நிகழ்கால அரசியலை கிழிகிழி என கிழித்திருக்கிறார் முருகதாஸ். அதற்கு விஜய் என்கின்ற பிரமாண்ட மிசனைப் பாவித்திருக்கிறார். விஜயின் அரசியல் பயணம் மெர்சலில் ஆரம்பித்து அடுத்த படமான சர்காரில் உறுதியாதி விட்டது. வாழ்த்துக்கள் விஜய் தங்களின் அரசியல் பிரவேசத்திற்கு.

**சயன்** — யாழ்ப்பாணம்

**நாட்டு நிலை எப்படி இருக்கு?**

நாறிக்போய்க் கிடக்கிறது. பாராளுமன்றக் கலைப்பிற்கு வெடி கொளுத்தி வெற்றி விழாக் கொண்டாடியது எம்மினம் தானா என்று எண்ணும் போது நெஞ்சு வெடிக்கிறது.

என்னவோ தமிழினத்துக்கு உரிமைகள் எல்லாம் கிடைத்துவிட்டு போல வெடி கொளுத்தும் வீணர்களை நினைக்கும் போது வெட்கித் தலைகுனிவதை விட வேறு எதைச் செய்ய முடியும்.

என்னவோ நீதிமன்றில் வாதாடி தமிழர்களின் உரிமைகளை பெற்றுத்தந்துவிட்டார்கள் பாருங்கள். இதெல்லாம் எங்கு போய் முடியுமோ தெரியவில்லை.

**சலோ** — யாழ்ப்பாணம்

**உங்களுக்கு எதைப்பற்றி அதிகம் கவலை வியாசரே?**

ஒவ்வொரு முறை தலை சீவும் போதும் பத்து முடியாவது விழுகிறது அதை நினைக்கத் தான் உயிரே போகிறது.

**சக்தி** — வயாவிளான்

**ஒரு ஆணைக் காதலித்துக் கொண்டு இன்னொரு ஆணுடன் தொடர்பில் இருப்பவர்களைப் பற்றி?**

ஒரு போனில் இரண்டு சிம்கள் போட சொல்லித் தந்தது சைனாக்காரனா இருந்தாலும் அதை கப் என்று பற்றிப் பிடித்தது நம்மாள்கள்தான் போல.

**உங்கள் கேள்விகளை 021 567 1532 / 076 636 3378 எனும் இலக்கத்துக்கு SMS அனுப்புங்கள்**

## உலகம்

இருப்பவன் இல்லாததற்காய் ஏங்குகிறான்
இல்லாதவன் வேண்டுமென ஏங்குகிறான்
இருப்பவன் அலைகின்றான்
இல்லாதவன் தொலைகின்றான்

கொடுப்பவன் கொடுக்க
நினைக்கையில்-அதை
தடுப்பவன் விசமியன்றோ?
கொடுப்பவனையும்
விசமிகளையும் படைத்து
கடவுள் ஆடும் ஆட்டமிது உலகம்

கொடுப்பவன் அதிகம்- அதை
கெடுப்பவன் அருமையெனில்
உத்தமமான நிலையது
உலகம் முன்னேறும் அதனால்

கொடுப்பவன் அளவு
கெடுப்பவன் இருப்பானெனின்
சமரசமான உலகமது
சவாலான வாழ்க்கையிது

ஆனால் இன்று உலகில்
கொடுப்பவன் சில- அதை
கெடுப்பவன் பல
என்னடா வாழ்க்கை இது

உன்னிடம் இருப்பதை
கொண்டு மற்றவனை கெடுக்காமல்
அவனைத் தட்டிக்கொடு
சமரசமாய் வாழ்ந்து பார்

சுவர்க்கம் ஒன்று தேவையில்லை
பூலோகமே ஆகிடும் சுவர்க்கமாய்
கேளடா! மானிடா இதை
வாழடா! நீ இதன் வழியினிலே

செல்வி ஆர்த்திகா சுவேந்திரன்
தொல்புரம் கிழக்கு

## கவிதைக்கலசம்

### முகநூல்

ஏமாறும் மனிதர்களிடையே
ஏமாற்றும் முகம் இது
அகத்தினழகை முகத்தில் காட்டாத
முகப்புத்தகமெனும் அகப்புத்தகம்

இணையத்தில் துடிப்புள்ளவரை
நடிப்பிருக்கும் இதன் முகத்தில்
முகம் பார்த்துச் சிரிக்கும்
முகநூலில் சிரித்தால் மட்டும்

இலவச ஆலோசனைகள் பல
பெற்றிடலாம்-இங்கு
கட்டணங்கள் "விருப்பம்"
தெரிவித்தால் போதுமானது

விருப்புக்கள் நிறைவு
வெறுப்புக்கள் குறைவு
பகிர்ந்தளிக்கும் பண்பு இங்கு தான்
சத்தியமாய் சாத்தியமாகிறது.

போலிகளும் இங்கு உண்மை
உண்மைகளும் இங்கு போலி
பழையன கழிதலும்
புதியன புகுதலும் இங்கு மரபு

அரசியலும் இங்கு சாத்தியம்
அரசியல் பிழைத்தோர்க்கு
முகநூல் கூற்றாகும்

இணுவில் வாகீசன்

### அதைத் திருப்பித் தருவாய்

சிறையில் இருக்கும் எனக்கு
சிதையாது எதை
திருப்பி தருவாய்

கதையளந்து திரிந்த
கிலுவை ஒழுங்கை களையா
கிரவல் பாதைகளையா

காதல் மொழி வரைந்த
கடதாசி தாள்களையா
காகித ஓடங்களையா

போராளிப் பொடியளுக்கு
பால் தேநீர் கொடுத்த
பசுமை நினைவுகளையா
ஊர்த் தெருவில்
ஒய்யார பயணித்த
மண்ணெண்ணெய் உந்துருளி
மறுபடி தருவாயா

ஒன்றும் வேண்டாம் அயர்ந்து
துயிலும் அவர்களின்
அமைதிப் பூங்காவையேனும்
அப்படியே தருவாயா?

விவேகானந்தனூர்
சதீஸ்



### மூச்சுக்காற்று

என் உயிருக்குள்
உதிரமாய் உறைந்தவனே
சிறகின்றிப் பறக்கும்
பட்டாம் பூச்சியாய்
என் மனம் பறக்கக் கண்டேன்
இதழ் கொடுத்து
இதழ் பெறுவது முத்தமா!
இது வலியா! சுகமா என்று
தெரியாமல் புரளுகின்றேன்
மூடாத விழிகளுடன்
இரவுகளில் நானடா....
நான் வாங்கிய உன் சுவாசம்
என் மூச்சுக்காற்றோடு
கலந்துவிட்டது
கனவுகளோடு காலத்தை கடத்திய
என் காதலுக்கு
மோட்சம் கிடைத்து விட்டது
உன் மூச்சுக்காற்று வழியாக ...

சிவாஷா,மல்லாகம்

### கண்டுகொண்டுதான் இருக்கிறோம்

அடிக்கு மேல் அடி அடி
அம்மியும் நகருமென்பர்
அடி அடி என்று அடிக்கிறோம்
அம்மியோ நகரும் பாடில்லை
கும்மியடிக்கும் கூட்டமொன்று
பேரின வெற்றிக்காய்
பாடுபடுகிறது பலனை எதிர்பார்த்து

கூடு தேடிய பறவைகளோ
கூட்டை இழந்து இல்லை இல்லை
நாட்டை இழந்து
நடைபிணமாய் வாழ்கிறது
பூவோடு சேர்ந்து
நாரும் மணம் வீசுமென்பர்
நான்குடன் ஐந்தாய் இருந்துவிட்டு
நாம்தான் என்று
நாலுதிசையிலும்
போலீஸ்டா அடிக்கிறார்
போலி வேடம் காட்டுறார்

வீச்சு வாள்களுக்கு
வேலையில்லாது போய்விட
கூச்சநாச்சமின்றி
சண்டி கட்டியபடி
சண்டித்தனம் காட்டும்
சண்டியர்க்கு சாமரம் வீசும்
சுண்டு விரல் நீட்டிகளே
உங்களை நாம்
கண்டுகொண்டுதான்
இருக்கிறோம்

மாவை. நா. கஜேந்திரன்

## மௌனத்தின் தேடல்- 422



### இச்சந்தர்ப்பம்

பட்டினி கிடந்ததால்
பசித்த வயிறு போக்க
புசிக்க ஏதுமுண்டோ என
ஏங்கிய உன் விழியும்
தூக்கிய உன் கரமும்
மாற்றமின்றி சுட்டிநிற்க

இந்நிலை கண்டும்- அவள்
விதி அதுவென விலகிச் செல்லும்
மானிடமே
விலகிச் செல்வது
நீ மட்டுமல்ல- உனக்கான
சந்தர்ப்பமும்தான் என
அச்சந்தர்ப்பத்தில்
நீ அறிவாயோ

மட்டுவிலூர் தளிர்

### எதிர்நீச்சல்

உறுதியோடு போராடு
உரிமைகளை மீட்டெடு
கூண்டை விட்டு வா வெளியே
தடைகளை உடைத்தெறிந்து
எதிர்நீச்சல் போடு
சமூக வலைத்தளங்கள்
பறைசாற்றட்டும் உன் பெயரை
இரும்பு வலையை
தாண்டி வா வெளியே
மௌன யுத்தம் வேண்டாம்
நின்று நின்று நிமிர்ந்து போராடு

சி.லோட்டஸ் லோறெல்
யா/ யூனியன் கல்லூரி
தெல்லிப்பழை

### என் அன்புக் குழந்தையே

அடைப்புக்கு உள் அகப்பட்டு
தவிக்கும் உன் அழகுமுகம்
புன்னகையிலும் ஒரு சோகமா
என்னால் புரிந்து கொள்ள
முடியவில்லையே
தந்தையை இழந்தாயா
அதை இந்த தாத்தாவுக்கு
சொல்வாயா
பேரச் செல்வமே

ச.பாலையா
கொழும்புத்துறை மேற்கு

### இங்கிதம்

கொஞ்சிப் பேசும்
பஞ்ச வர்ணக்கிளியை
கூண்டிலடைத்து
தனிமைப்படுத்தி
தவிக்க விடுவதை
தவிர்த்தல் நன்று
பண்பாடும் பாரம்பரியமும்
தங்கியிருப்பது இங்கிதமான
பராமரிப்புவென்பது
பாரறிந்தவுண்மை

ச.வரதலிங்கம்
சாவகச்சேரி

### வட்டமுகம்

துருதுருவென்ற கண்கள்
ஒரு சோகம் கதை பேசுகின்றது
அம்மா எங்கே? அப்பா? நவீன யுகத்தில்
இரு கைதட்டினால் ஓசைவரும்
எனவே இருபேர் வேலை செய்தால்
வீடும் உணர் பெறும்
பிள்ளைக்கு அதுபுரியவில்லை
கண்மணியே கவலையை
விட்டுவிடு கதைபேசு

பா.கலாதேவி, சண்டிலிப்பாய்

### வீறு கொண்டெழுந்திடு

கம்பிவேலி உன் கனவினை
தடுக்கின்றதா குழந்தாய்
கவலையை விடு
கம்பிவேலியும்
மலர்க்கொடியாக மாறிடும்
காலம் வரும் கலங்காதே
உற்சாகத்துடன் எழுந்திடு
மனதிலே உறுதியிருந்தால்
வெற்றி நிச்சயம்
வீறுகொண்டு
எழுந்திடுவாய் உரிமை காக்க
சிறுவர் உரிமைக்காக

சி.கஜா
முரசுமோட்டை

## இவ்வார மௌனத்தின் தேடல் -423



அன்பு வாசகர்களே! உங்கள் எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை

ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி-சங்குநாதம்
இல.03, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்

எனும் முகவரிக்கு
எழுதி அனுப்புங்கள்

### அவலம் தீராதா?

பறவைக்கு நிஜ சிறகுகள்
உள்ளதம்மா அறிவாய்
தங்கையே கற்பனைச்
சிறகுகள் உனக்குண்டு
சிந்திக்காமல் அடிமை
மரத்தில் கூடுகட்டாமல்
சுதந்திர மரத்தில்
கூடு கட்ட இப்போதே
எழு சகோதரியே!
போனவாழ்க்கை
வாராதம்மா
வரும் வாழ்க்கையை
அன்பால் எதிர்கொள்
சொந்த உறவுகள் பறக்க
சர்வதேச உறவுகள்
உன்னைத் தாலாட்டிடுமே!

யாழ்.வரணியூர்
கோகுலன்

### தாய்மை கொண்ட இரும்பு

இரும்பும் ஈரம் கொண்டது
நலிவு பச்சைக்கொடி
படர்ந்து
காட்டிக்கொடுத்தது
பாரமாக அது
நினைக்கவில்லை போல்
இவள் மட்டும்
பெத்தவருக்கு சுமையா?
கம்பிகள் தாண்டி
கண்கள் இமைக்காது
நிலைப்பது
நிகழ்காலம் கடந்த
இறந்தகாலம்
தராத தாயின் மழையயும்
தகப்பன் தோள்களை மட்டுமே
தடுமாறிய அவளை
தாங்கிப் பிடித்தது
இரும்புக்கம்பி

சிவம் வேணுஜா
கோப்பாய் வடக்கு




# கனாக் காணும் காலங்கள்

பத்திரிகையை எடுத்தால் ஒரே வாள் வெட்டு, கொலை, கொள்ளை, பலாத்காரம் என்று ஒரே கெட்ட செய்திகளே வெளிவந்த வண்ணம் உள்ளன. ஏன் தான் இந்த மக்கள் இப்படிச் சீரழிந்து போகுதுகள்.. இதைத் தான் கலிமுத்திப் போச்சு என்று சொல்லினமோ தெரியல. உண்மையில் எதுவும் நிரந்தரமல்ல. இந்த கெத்தும், அடாவடியும் இளமை இருக்கும் வரை தான். நாளைக்கு நரை வந்து, தோல் சுருங்கி, கண் பார்வை கொஞ்சம் மங்கிப் போச்சு என்றால் ஒரு நாயும் மதியாது என்று ஏதோ எல்லாம் மனதிற்குள் புலம்பிப் புலம்பி முற்றங் கூட்டிக் கொண்டிருந்தாள் சுமதி... இவள் நாற்பது வயதாகியும் கல்யாணம் கட்டாமல் காத்திருக்கும் ஒரு கன்னி. முதிர்கன்னியாக முன் கல்யாணம் கட்டிவைக்க வேண்டும் என்பது தான் இவளது பெற்றோரின் ஒரே நோக்கம். இருந்தும் இவள் திருமணம் பற்றிச் சற்றும் சிந்திக்கவில்லை. பல வரன்கள் தேடிவந்தது, அழகு என்றால் என்ன என்பதற்கு வரைவிலக்கணம் இவள் தான். இவளிடம் உள்ள சொத்துக்களோ ஏராளம், செல்வச் செழிப்பான குறிப்பு இருந்தும் எதற்காக திருமணம் செய்யாமல் இருக்கிறாள்... என்ற கேள்வி உங்களுக்குள் எழுவது நியாயம் தான் . இதனைத் தான் அவளது அயல்வீட்டு முகுந்தாவும் சுமதியிடம் கேட்கிறாள் "அக்கா.. கேட்கிறது என்று கோபிக்காதயுங்கோ நீங்கள் ஏன் இன்னமும் திருமணம் செய்யாமல் இருக்கிறீர்கள்? திருமணம் செய்யப் பிடிக்கவில்லையா? இல்லை ஆண்களே பிடிக்கவில்லையா?..." என்றதும் அவள் நினைவுகள் பல ஆண்டுகள் முன் னோக்கிச் சென்றது...

ஆயிரத்துத் தொளாயிரத்து தொண்ணூற்றைந்து. இவளுக்கு பத்தொன்பது வயது. க.பொ.த உயர்தரம் எழுதி பெறுபேறு வந்து பல்கலைக்கழக வைத்தியத் துறைக்குத் தெரிவு செய்யப்பட்டிருந்தாள். அப்போது இப்ப மாதிரி பெறுபேறு வந்தவுடன் பல்கலைக்கழகம் தொடங்குவதில்லை. ஒரு இரு வருடங்களாவது காத்திருக்க வேண்டியேற்படும். அப்படி பல்கலைக்கழகத்திற்காக காத்திருந்த போது ஐப்பசி முப்பதாம் திகதி யாழ்ப்பாணத்தை நோக்கிய இராணுவப் படையெடுப்புக் காரணமாக மக்கள் யாழ்ப்பாணத்திலிருந்து தென்மராட்சி நோக்கி இடம்பெயர்ந்தனர். அடிமேல் அடிவைத்து உயிர்தப்பினால் மட்டும் போதும் என்று உடைமைகளை எல்லாம் விட்டு விட்டு இரவோடு இரவாக சொந்த இடங்களை விட்டுப் புறப்பட்டனர். இவ்வாறு சென்று தென்மராட்சியில் ஒரு வளவுக்குள் கொட்டில் போட்டு வாழ்ந்து வந்த போது தான் சுமதிக்கும் அந்த காணியின் உரிமையாளரின் மகன் குமரனுக்கும் இடையில் காதல் மலர்ந்தது. பாலைவனத்திலும் பூக்கள் பூக்கலாம் என்றால் போல் இந்த யுத்த அவலத்தில் கூட இவர்கள் காதல் அரங்கேறியது. குமரனும் மருத்துவ பீட முதலாம் வருட மாணவன். அழகிய கம்பீரமான தோற்றம் உடையவன். இருவருக்குமிடையேயான காதல் பற்றி விபரிக்க வார்த்தைகள் போதாது. அப்படியொரு காதல். ஆனாலும் நாகரிகமான காதல். இன்றைய காதல் போல் அல்லாது அன்றைய காதலில் ஒரு உண்மை, பற்று, உணர்வு இருந்தது, பெற்றோருக்கு பயமும் பக்தியும் மதிப்பும் இருந்தது. இதனால் இவர்கள் காதலித்தது இவர்கள் பெற்றோருக்கோ அல்லது நண்பர்களுக்கோ தெரியவில்லை. காலம் நகர்ந்தோடியது மீண்டும் ஒரு இடம்பெயர்வு அரங்கேறியது. தென்மராட்சியிலிருந்து வன்னி நிலப்பரப்புக்கு இடம்பெயரவேண்டிய சூழ்நிலை. குமரன் குடும்பமும் சுமதி குடும்பமும் ஒரேயடியாக இடம்பெயர்ந்து முல்லைத்தீவிற்குச் சென்று ஒரு தெரிந்தவர்கள் வீட்டில் தங்கியிருந்தனர். அந்த காலம் தான் இவர்களின் வாழ்க்கையில் பெரும் இடியை போட்டது. இதுவரை காலமும் ஒருவரை ஒருவர் நேசித்தவர்கள் இருவரும் தேசத்தை நேசித்தவர்களாக மருத்துவத்துறையில் ஈடுபாடுடைய போராளிகளானார்கள்...

அறிவும், திறனும் மிக்க இருவரும் தமது முழு அறிவையும் பயன்படுத்தி மிகக் குறுகிய காலத்திலேயே வைத்தியத்திற்குத் தேவையான நுட்பங்களைப் பெற்றுச் சிறந்த வைத்தியப் பேதராளியாக பணியாற்றினார்கள். இந்தக் காலகட்டத்தில் மீண்டும் ஒரு இடம்பெயர்வு ஏற்பட்ட காலத்தில் இராணுவ முன்னகர்வில் எதிர்த்துப் போராடிய போராளிகள் காயப்படும் போது களத்திலேயே வைத்திய சேவை புரிந்து கொண்டிருந்த குமரன் குண்டடிபட்டு களத்திலேயே இறக்கின்றான்... இப் பெருங்சுமை மனதில் கனகனக்க கண்ணால் நீர் வடிய மெல்லத் துடைத்தாள் சுமதி .

"என்னக்கா நான் கதை கேட்க நீங்கள் ஏதோ நினைவில முழ்கிப்போயிருக்கிறீயள்" என்ற முகுந்தாவின் குரல் சுமதியை மெல்ல நிய உலகிற்கு வரவழைத்தது... இல்லை முகுந்தா சும்மா ஏதோ ஒரு ஞாபகம் தான் வேறு ஒன்றுமில்லை" நீ வந்த விடயத்தைச் சொல்லு" இல்லை அக்கா நான் ஒரு விடயம் தொடர்பாக உங்களிட்ட கேட்கலாம் என்று தான் வந்தன். தயவுசெய்து எங்கட வீட்ட சொல்லிப் போடாதேயுங்கோ.. என்னைக் காதலிக்குமாறு சிவகுமார் ஒரே கரைச்சல். நான் காதலிச்சுப் போட்டன். பிறகு அவன் போனில் என்னுடைய படத்தை அனுப்பச் சொல்ல நானும் அனுப்ப அதை அவன் ஏதோ கொம்பியூட்டர் கிறாப்பிக்கில் தப்புத் தப்பாச் செய்து போட்டு இப்ப தான் சொல்லும் இடத்துக்கு வந்து தன்னுடன் வாழாட்டி இதை எல்லா நண்பர்களுக்கும் போட்டு என் வாழ்வை நாறடித்துப் போடுவன் என்று வெருட்டுகின்றான். நான் உண்மையில் அவனுடன் அப்படித் தப்பாக ஒரு போதும் இருந்ததில்லை. இப்ப இது அப்பாவுக்குத் தெரிஞ்சா என்னைக் கொன்றே போடுவார். நான் அதற்கு முன் தூக்கில கீக்கில தொங்கிப் போகிடலாம் என எண்ணுகின்றேன். அதற்கு முன் உங்களைப் பார்த்து விட்டுப் போகலாம் என்று தான் வந்தன்...

உடனே எட்டிக் கன்னத்தில் அறைந்தாள். சுமதி எதற்கெடி நீ சாகணும் உரிமைக்காகப் போராடி இறந்திருந்தாலும் பரவாயில்லை. துரோகிக்குப் பயந்து உன் உயிரை விடப் போகிறீயா? இப்ப உனக்கு பதினாறு வயது. இன்னமும் ஓ எல் பரீட்சை கூட எழுதவில்லை. அதற்குள்ள காதலும் கத்தரிக்காயும். காதலிப்பது தப்பில்லை. அதற்கு ஒரு வயது இருக்கு. பத்தொன்பது இருபது வயதில் காதலியுங்கள். அது உண்மையான காதலாக இருக்கும், ஆயுள் உள்ளவரை நிலைத்திருக்கும். ஒருவனைக் காதலிக்கும் போது அவனைப் பற்றி முழுமையாகத் தெரிந்து விட்டு காதலியுங்கள்.. அம்மா அப்பாவுக்குப் பிடித்த பிள்ளைகளாக வாழப் பழகுங்கள். நீ வா அவனா இல்லாடி நாங்களா எனப் பார்ப்பம் என ஒரே இழுவையாக முகுந்தாவை இழுத்துக் கொண்டு புறப்பட்டாள் சுமதி. "அக்கா வேண்டாம் வாங்கோ வீட்ட போவம் நான் சாக மாட்டன் வாழ்ந்து காட்டுவேன் வாங்கோ வீட்ட போவம். அவங்கள் கண பேர் கத்தியெல்லாம் வைத்திருக்கக்கூடும் வாங்கோ.." போற உயிர் உனக்காகப் போகட்டும் இனிமேல் பெண்களை பகடைக்காயாகப் பயன்படுத்துபவர்களுக்கு இது ஒரு பாடமாக அமையட்டும்" எனக் கூறியவள் சிவகுமார் வழமையாக நிற்கும் ஆலடிச் சந்திக்குப் போனாள். இங்கு சிவாவும்ஆறு நண்பர்களும் நின்றார்கள். முகுந்தாவைக் கண்டதும் "என்ன என்னுடன் ஒருநாள் மட்டும் இருந்திட்டுப் போறியா?என்ற சிவாவின் வார்த்தை முகுந்தாவுக்கு சிவாவின் உண்மையான தோற்றத்தை வெளிச்சம் போட்டுக் காட்டியது. என்னடா சொன்னாய் என்று சொல்ல எண்ணியவள் தமிழ் பண்பினை மதிக்கும் பெண்ணாக மௌனம் காத்தாள். மீண்டும் தொடர்ந்தான் சிவா... என்ன நீ மட்டும் வராமல் இன்னொரு அழகிய தேவதையையும் கூட்டி வந்திருக்கிறாய். அவளும் எனக்குத்தானோ என்றதும் சற்றும் எதிர்பாராமல் சிவாவின் கன்னத்தில் பெரும் அறை விழுந்தது. மற்றவர்கள் மலைத்துப் போனார்கள். என்னடா சொன்னாய் நான் யார் என்று உனக்குத் தெரியுமா எங்கட பண்பாடு கலாசாரத்தை பேணும் எனக்கு நீ என்னடா கதைக்கிறது. மீண்டும் பல அறைகளை விட்டாள் சுமதி. இதை சற்றும் எதிர்பாராத அவனது நண்பர்கள் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டனர். கடைசியில் ஒருவன் வாள் எடுத்து வெட்ட வந்தான். அவனுக்கு சுமதி போட்ட அடியோடு இளைஞர்கள் எல்லாம் ஓட்டம் பிடித்தனர். எதிரி எவ்வளவு பலமானவன் என்பது முக்கியமில்லை. எமது மனம் எவ்வளவு திடமானது என்பது அவள் இன்று கற்றுக் கொண்ட விடயமல்ல. அந்தக்காலத்தில் ஒருவரால் கற்றுக் கொடுக்கப்பட்ட விடயம். ஆலடியில் சிவகுமாரை அடித்தவள் அவனை இழுத்து வந்து புது வீதியில் விட்டாள். உன் போன்ற இளைஞர்களுக்கு இது ஒரு பாடமாக அமையட்டும். இனியொருவரும் இன்னொரு பெண்ணின் வாழ்வோடு விளையாடக் கூடாது. ஒருவனுக்கு ஒருத்தி என்பதே எமது கலாசாரம். கல்யாணம் கட்டின பிறகு இன்னொருத்தியை காதலிக்கிறது, இல்லாடிக்கு கல்யாணம் கட்டின பெண்ணைக் காதலிக்கிறது, வயது கூடிய பெண்ணை வயது குறைந்த ஆண் காதலிப்பது, இதெல்லாம் சினிமாவுக்குப் பொருத்தமாக இருந்தாலும் யாழ்ப்பாணத்து தமிழ் சனத்திற்கு செல்லாது. கனாக் காணுங்கள் நல்லாக வாழ வேண்டும் என்ற கனாக் காணுங்கள். இப்ப இருப்பதை விட ஒருபடி மேலே எழ வேண்டும் என்று கனாக் காணுங்கள் அதைவிட்டு விட்டு அதிக பெண்களுடன் வாழலாம் என்ற கனவை மட்டும் காணாதீர்கள். எந்த ஒரு பெண்ணும் தன் கணவன் தன்னை விட மற்றவள் அழகானவள் என்று சொல்வதையே விரும்ப மாட்டாள். தன்னுடன் இன்னொருத்தியை பங்கு போட விரும்புவாளா...எனக்கு இப்ப நாற்பத்திரெண்டு வயது. அழகும் அறிவும் பணமும் இருந்தும் இன்னமும் கல்யாணம் கட்டாமல் இருப்பதற்கான உண்மை இதுவரை என் அப்பா அம்மர் ஏன் என் நண்பர்களுக்கு கூடத் தெரியாது. இன்றைக்குச் சொல்கிறன் கேள் என தான் குமரனை உயிருக்குயிராகக் காதலித்து தன் கண்முன்னே பறிகொடுத்த சோகத்தைச் சொல்லி கண்ணீர் விட்டாள் சுமதி... தனது இளமைத்துடிப்பில் தான் விட்ட தவறை உணர்ந்தவனாக மன்னிப்புக் கேட்டான் சிவகுமார். "நான் உன்னிடம் மன்னிப்பை எதிர்பார்க்கவில்லை மனிதனாக மாறி உன்னுடன் உள்ளவர்களையும் மனிதனாக மாற்று. அது போதும் எனக்கு என்று கூறியவள் தனது மோட்டார் சைக்கிளில் குமுதினியை ஏற்றிக் கொண்டு சிவன் கோவில் நோக்கி வேகமாகப் புறப்பட்டாள். அந்த வேகத்திலும் ஒரு நிதானம் காணப்பட்டது. மீண்டும் அவள் நினைவுகள் குமரனுடன் பழகிய பசுமையான காலத்தின் கனவுகளைச் சுமந்து வந்தது...

நிதர்சன்

# சுட்டும் விழிச்சுடர்...

## சமூக விபரீதங்கள் பற்றிய கண்ணோட்டம் 09

# சில இழப்புக்களும், குறிப்புக்களும்



10.11.2018 சனிக்கிழமை காலை... இரத்தினபுரி மாவட்டத்தின் பலாங்கொட நகரை அண்மித்த பெலிகுல் ஓயா பிரதேசத்தில் பொங்கிப் பிரவாகிக்கும் பஹன்துடா நீர்வீழ்ச்சி அருவியாக சலசலத்து ஓடிக்கொண்டிருந்தது. புள்ளினங்களின் கீச்சிடும் ஓசையும், செழித்து ஓங்கிய மரங்களின் அசைவும் அந்தக் காலைப் பொழுதிற்கு ரம்மியத்தைக் கொடுத்தன.

வழமை போல அமைதியாக ஓடிக்கொண்டிருந்த அருவியின் ஆழம் குறைந்த பகுதியிலிருந்த சிறிய குன்றைச் சுற்றி சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் கணிய அளவையியல் கற்கும் மாணவர்கள் எழுவர் நீராடிக் கொண்டிருந்தனர். வாரம் முழுவதும் பல்கலைக்கழகமும், தம் சிறிய வதிவிட அறையுமென்று அடைபட்டுக் கிடந்த அவர்கள் அன்றைய நாள் விடுமுறையென்பதால் மகிழ்வாகத் தம் பொழுதைப் போக்க அங்கே சென்றிருந்தனர். அவர்களின் பல்கலைக்கழகம் அந்த அருவியிலிருந்து 2 கிலோ மீற்றர் தொலைவிலிருந்தது.

ஆசியாவிலேயே கணிய அளவையியல் பட்டப்படிப்பு நெறியைக் கொண்டுள்ள ஒரேயொரு பல்கலைக்கழகம் அதுதான். ஏனைய உயர்கல்வி நிறுவனங்களில் பட்டய நெறிகளேயுண்டு.

பஹன்துடா நீர்வீழ்ச்சி அமைதியானது-ஆபத்துக் குறைந்தது. ஆயினும் எப்போதாவது அது சீற்றம் கொள்வதுமுண்டு. அதன் சீற்றத்தில் சிக்கி இதுவரை 19 உயிர்கள் காவு கொள்ளப்பட்டுள்ளன. இந்தத் தகவல்களை நீராடிய மாணவர்கள் அறிந்திருக்கவில்லை. சிரிப்பும், குதூகலமுமாக அவர்கள் நீராடிக் கொண்டிருந்தனர்.

அந்தவேளையில் நீரின் மட்டம் திடீரென உயர்ந்தது. பெரு வெள்ளம் மாணவர்களை நோக்கிப் பாய்ந்தது. நொடிப் பொழுதில் அவர்கள் அள்ளுண்டு போனார்கள். நால்வர் கரை



நோக்கி வீசப்பட மற்றைய மூவரும் சேற்றில் அமிழ்ந்து போயினர்.

அனர்த்தத்தையறிந்த கிராம வாசிகள் தாமதிக்கவில்லை. அகப்பட்டவர்கள் தமிழர்கள் என்று கூட அவர்கள் தயங்கி நிற்கவில்லை. தம் முயிரை துச்சமென நினைத்து அருவியில் பாய்ந்தனர். எழுவரையும் மீட்டெடுத்து வாகனம் பயணிக்க முடியாத கரடுமுரடான பாதையில் சுமார் 1 கிலோமீற்றர் சுமந்து சென்று, அதற்கப்பால் குறுக்கலான பாதைகளில் வாகனத்தில் விரைந்து பலாங்கொட தள வைத்தியசாலையில் சேர்த்தனர்.

மருத்துவர்களும், தாதிகளும் பம்பரமாய் சுழன்றனர். முதலுதவி துரிதமாக வழங்கப்பட்டது. ஒருவர் அனுமதிக்கப்படுகையிலேயே மரணித்தது உறுதி செய்யப்பட்டது.

ஏனையவர்களின் உயிர்களை மீட்க மருத்துவர்கள் போராடினர்கள்.

தகவல் நகரெங்கும் பரவியது. பல்கலைக்கழக மாணவர்கள், கிராம வாசிகள் என்று பலரும் வைத்திய சாலையைச் சூழ்ந்தனர்.

எல்லோர் முகங்களிலும் சோகம், மனங்களிலோ ஏக்கம். மேலுமிருவர் மரணித்துவிட்டனர் என்று செய்தி வெளியாகியதும் வைத்தியசாலையில் எழுந்த அழுகுரல்கள் மலை நாடெங்கும் எதிரொலித்தது. சக மாணவ, மாணவிகள் தம் தலைகளை சுவருடன் முட்டிக் கதறியழுதனர். மயங்கிச் சரிந்தனர்.

### இலட்சங்கள் சாதிக்காததை இழப்புக்கள் சாதித்தன

பஹன்துடா நீர்வீழ்ச்சியில் காவு கொள்ளப்பட்டவர்கள் வரிசையில் சப்ரகமுவ பல்கலை மாணவர்களான சாரங்கன், கோபிஷான், ரிசாந் ஆகிய மூவரும் நினைவுகளாகினர். ஊரைப் பிரிந்து வேற்றூரில் தனிமரங்களாய் கல்விபயின்ற அவர்களது இழப்பு அந்த ஊரில் வாழ்ந்த அத்தனை பேருக்கும் அவர்களை சொந்தங்களாக்கின. பெலிகுல் ஓயா பிரதேசமே சோகமயமானது. இறந்தவர்கள் தமிழர் என்று அவர்கள் விலகியிருக்கவில்லை. தம் சொந்த உறவுகளையே இழந்துவிட்ட உணர்வே அங்கு வியாபித்தது. எல்லோர் கண்களிலும் கண்ணீர் சொரிந்தது.

அடுத்து ஆகவேண்டியதைக் கவனிக்க வேண்டும். உடலங்களை அவர்களின் சொந்த ஊர்களுக்கு எடுத்துச் செல்ல வேண்டும். இவர்களை இழந்து தவிக்கும் குடும்பங்களுக்கு அவர்களின் முகத்தையாவது பார்ப்பது தானே இனி ஆறுதல்.

சப்ரகமுவ பல்கலையின் துணைவேந்தர் பேராசிரியர் சுனில் சாந்த உடன் களத்திலிறங்கினார்.

இலங்கையின் பிரபலமான பொருளியல் பேராசிரியர் அவர். ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் தலைவராகவும் இருந்தவர்.

அடுத்த நாள் ஞாயிறு புலர்ந்தது.

அன்று பொதுவாக பிரேதப் பரிசோதனை இடம்பெறுவதில்லை. ஆனாலும் துணைவேந்தரின் முயற்சியால் உடனேயே பிரேதப் பரிசோதனை நடந்தது. உடலங்கள் துணைவேந்தரிடம் ஒப்படைக்கப்பட்டன. நகரிலுள்ள பிரசித்தமான அந்தியகால சேவையினரை அழைத்து தன்சொந்தப்பணத்தைக்கொடுத்து உடலங்களை சிறப்பாகப் பதப்படுத்தி காவு வண்டிகளில் யாழ்ப்பாணம் எடுத்துச் செல்ல வழிவகுத்தார்.

அந்தப் பணத்தை பல்கலைக்கழக மாணவர் நலன் சேவை அலகிடமிருந்து பெறமுடியாவிட்டாலும் பரவாயில்லை, அது என் பிள்ளைகளுக்கு நான் செய்த கடமையாக இருக்கட்டுமென்றார் துணைவேந்தர்.

பல்கலைக்கழத்திற்கு சொந்தமான நான்கு பேருந்துகள், இரண்டு தனியார் பேருந்துகளென சக மாணவர்கள் யாழ்.வந்து இறுதிக்கிரிகையில் கலந்து கொள்ள நிர்வாகத்தால் ஒழுங்கு செய்யப்பட்டன. வேறு மார்க்கங்களிலும் மாணவர்கள் யாழ்.நோக்கிப் பயணித்தனர். ஆயிரக்கணக்கான தென்னிலங்கை மாணவர்கள் யாழ்ப்பாணம் வந்து 12,13 ஆம் திகதிகளில் இங்கு தங்கியிருந்து தம் சகாக்களுக்கு இறுதியஞ்சலி செலுத்தினர்.

### மரணங்களும் சில செய்திகளும்

அண்மைக் காலமாக நீர் நிலைகளில் நிகழும் அவலச் சாவுகள் அதிகரித்து வருகின்றன. மாரி காலங்களில் நீர் நிலைகளில் நீராடுதல் மற்றும் தொழில் முனைவுகள் மிகுந்த எச்சரிக்கையோடு இடம் பெறவேண்டும். நீர் நிலைகளில் நீராடுமுன் அவற்றின் ஆழமான பகுதிகள், சேறு நிறைந்த பகுதிகள், நீரோட்டம் பற்றி விசாரித்தறிவது நல்லது. நீச்சல் தெரிந்த சிலரையாவது கூட வைத்திருப்பது சிறந்தது. அவசர சேவையிலக்கங்களை பெரும்பாலானோர் நீராடுமிடங்களில் காட்சிப்படுத்த வேண்டும். எம் உயிர்கள் எமக்கு மட்டுமல்ல எம்மைச் சார்ந்தோருக்கும் பெறுமதியானவை என்பதை என்றும் நினைவில் வைத்திருப்பது நலம்.





## அக்னி

அவர்களின் உணர்வு பூர்வமான பங்கேற்பைக் கண்டு எம் மக்களே உருகிப்போயினர்.

தெற்கு மாணவர்கள் மட்டுமன்றி இறந்த மாணவர்கள் வழமையாக உணவருந்தும் கடை உரிமையாளர், சிப்பந்திகள், முடிவெட்டும் அழகக உரிமையாளர், எப்போதாவது அவர்கள் பயணிக்கும் முச்சக்கர வண்டி ஓட்டுநர், வழமையாக அவர்கள் யாழ்.வந்து திரும்பும் பலாங்கொட போக்கு வரத்துச்சாலையைச் சேர்ந்த பேருந்துக்களின் 2 சாரதிகள், 2 நடத்துநர்கள் என்று தெற்கின் பெரும்பட்டாளமே இறுதிச் சடங்கில் கலந்து கொண்டனர்.

இவர்கள் தவிர இம் மாணவர்கள் இங்கு கற்ற பாடசாலைகள், கல்வி நிலையங்களின் ஆசிரியர்கள், மாணவர்களென பெரும் திரளானோரின் கண்ணீரின் மத்தியில் முத்தான மூன்று இளையோரும் தீயுடன் சங்கமித்தனர்.

இறுதி நிகழ்வில் கலந்து கொண்டோரின் பேசு பொருள் தென்னிலங்கை மாணவரின் உணர்வு பூர்வமான பங்கேற்புப் பற்றியதாகவேயிருந்தது.

தெற்குப் பல்கலைக்கழகங்களில் கல்வி பயிலும் எம் மாணவர்களும் "இவ்வளவு காலமும் நாங்கள் அங்கு கல்வி கற்றாலும் தெற்கு மாணவருடன் அந்நியோன்னியமாக பழகுவதில்லை. எமக்கிடையே ஒரு இடைவெளி எப்போதுமிருக்கும். ஆனால் இந்த இழப்புக்களின் போது அவர்கள் காட்டிய உணர்வு வெளிப்பாடு இனித் தென்னிலங்கை மாணவர்களைத் தவிர்க்கமுடியாத உறவுகளாக்கிவிட்டது" என்று கண்கலங்கினர்.

தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சும், திணைக்களங்களும் இலட்சம் இலட்சமாகச் செலவழித்து நடத்தும் விழாக்களால் ஏற்படாத இன ஐக்கியத்தையும், நல்லிணக்கத்தையும், சகோதர வாஞ்சை யையும் இந்த மூன்று இழப்புக்கள் ஏற்படுத்தியிருந்தமை தெளிவாகியது.

### பார்வையாளராகிப் போன நம்மவர்கள்

வடமாகாணமே ஸ்தம்பித்துப் போன இம் மரணங்கள் தொடர்பில் தமிழ் மாணவர்களின் தாய்ப் பல்கலைக்கழகமாகிய யாழ்.பல்கலைக்கழகம் செயற்பட்டவிதம் எம் மக்களுக்கு சற்று விசனத்தையே அளித்ததை இறுதிச் சடங்கில் கலந்து கொண்டோரின் கருத்துக்கள் பிரதிபலித்தன.

தனிப்பட்ட ரீதியில் கணிசமான எம் பல்கலைக்கழக மாணவர்கள் இறுதி நிகழ்வில் கலந்து கொண்ட போதிலும் ஸ்தாபனப்படுத்தப்பட்ட ரீதியில் எதுவுமிடம் பெற்றதாகவே தெரியவில்லை. மாணவர் ஒன்றிய பிரதிநிதித்துவமோ, கண்ணீர் அஞ்சலி பிரசுரங்களோ அன்றில் இரங்கல் செய்திக்குறிப்புக்களோ எதையும் காணமுடியவில்லை. பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்திற்கும் இது பொருந்தும்.

அன்றைய தினம் எம் பல்கலைக்கழக மாணவர்களின் ஒருசாரார் எம் மலையக சகோதர தோட்டத் தொழிலாளரின் வேதன உயர்விற்காக நடத்திய அடையாளப் போராட்டம் காரணமாக சிலவேளைகளில் இந்த இறுதி நிகழ்வுகளில் முழுமையான பங்களிப்பு வழங்கமுடியாமல் போயிருக்கலாம்.

அண்மையில் எம் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளரொருவர் காலமானார். அவர் பல்கலையில் மாணவனாகக் கற்ற காலத்தில் மாணவர் ஒன்றிய செயற்பாடுகளில் முன்னின்றுழைத்து மாணவர் மறுமலர்ச்சிக்கு வழிகோலியவர். அவரின் இழப்பில் கூட பல்கலைக்கழக சமூகம் உத்தியோகபூர்வ செய்திக் குறிப்புக்களெதனையும் வெளியிட்டதாகத் தெரியவில்லை.

முன்னொரு காலத்தில் மக்களின் துயரங்கள், நெருக்கடிகளில் தோளோடு தோளாக துணை நின்ற வரலாறு நம் பல்கலைக் கழகத்திற்குண்டு. அண்மையில் அரசியல் கைதிகளுக்காக நம் மாணவர்கள் மேற்கொண்ட பாத யாத்திரையும்வரலாற்றுப்பதிவாகும்.

ஆயினும் இன்று மக்களின் துயரத்திலும் சரி முன்னேற்றத்திலும் சரி எம் பல்கலைக்கழகத்தின் பங்கேற்பு தளர்வுற்றிருப்பதாகவே மக்கள் கருதுகின்றனர்.

வேறு பல்கலைக்கழகங்களில் கற்கும் தமிழ் மாணவர்கள் க.பொ.த. சாதாரண தர மற்றும் உயர்தர பரீட்சைகளுக்காக எம் இளைய மாணவர்களைத் தயார்படுத்த இங்கு பல்வேறு வழிகாட்டல் செயலமர்வுகளையும் மாதிரிப் பரீட்சைகளையும் நடத்திவரும் நிலையில் எம் பல்கலைக்கழகம் இத்தகைய முயற்சிகளிலிருந்து அண்மைக்காலமாக அந்நியப்பட்டே நிற்கிறது.

இன்று இளையோர்கணிசமானோர் வன்முறைகளிலும், போதைப்பொருள் பாவனைகளிலும், ஏனைய சீர்கேடுகளிலும் தம்மைத் தொலைத்துக் கொண்டிருக்கின்றனர். இவர்களுக்கு ஆக்கபூர்வமான தலைமைத்துவத்தை வழங்கி சமூக முன்னேற்றப் பணிகளின் பால் திசைமுகப்படுத்த வேண்டிய பல்கலைக்கழகம் தம் பணி மறந்து பார்வையாளராகி விட்டதாகவே தோன்றுகின்றது.

யாரையும் குறைசொல்வதோ, குறைத்து மதிப்பிடுவதோ சுட்டும் விழிச்சுடரின் நோக்கமல்ல. ஆயினும் நெஞ்சிற்கு நெருடல் தரும் விடயங்களை சுட்டிக்காட்டாமல் இருத்தலும் தர்மமல்ல. எது எவ்வாறாயினும் சாரங்கன், கோபிஷான், ரிசாந் ஆகியோரின் மரணங்களில் தெற்கத்தையரின் உணர்வலைகளும் மனித நேயமுமே பொங்கியெழுந்தன. நாம் சற்று மங்கித்தான் போனோம்.

## இது நம்ம கதைகள்... 25

# நண்பேன்டா

கடந்த வார சங்குநாதத்தில் "ஆலடி மாநாட்டு" உறுப்பினர் "மூப்பர்" வைத்தியசாலையில் ICU பிரிவில் அனுமதிக்கப்பட்ட செய்தியறிந்து கலங்காத நெஞ்சமேயில்லையெனலாம். ஏனைய உறுப்பினர்களும் பதறியடித்தபடி வைத்தியசாலை நோக்கி விரைந்தனர்.


முன்னொரு காலத்தில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுவதென்றால் அது ஆபத்தான நிலைமை. ஆயுள் நிச்சயமில்லையென்றே பொருள்படும். ஆனால் இன்று நவீன வசதிகள், மருத்துவ நிபுணத்துவ அறிவு மேம்பட்ட நிலையில் இக் கருத்து அடியோடு மாறிவிட்டது. வைத்தியசா லைகளில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவுகள் ( Intensive Care Unit - ICU) ஆரம்பிக்கப்பட்ட பின்னர் நிலைமை மேலும் முன்னேற்றம் கண்டுள்ளது. இலங்கையின் முதலாவது அதி தீவிர சிகிச்சைப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டு 50 வருடங்கள் பூர்த்தியாகிவிட்டன. 15.07.1968 அன்று கொழும்பு தேசிய வைத்தியசாலையில் முதலாவது அதி தீவிர சிகிச்சைப்பிரிவு அப்போதைய சுகாதார அமைச்சர் E.L. சேனநாயக்கவால் திறந்து வைக்கப்பட்டது.



1968 ஆம் ஆண்டு இலங்கையில் முதலாவது அதி தீவிர சிகிச்சைப் பிரிவு ஆரம்பிக்கப்பட்ட போது...

வைத்தியசாலைகளில் 100 சாதா ரண நோயாளர் படுக்கைகளுக்கு 1 அதிதீவிர சிகிச்சைப் பிரிவு படுக்கை என்ற விகிதத்தில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவு கட்டமைக்கப்பட்டுள்ளது. அதிதீவிர சிகிச்சைப் பிரிவின் படுக்கையொன்றினை ஆண்டொன்றுக்கு சராசரி 70 முதல் 90 வரையிலான நோயாளர்கள் பயன்படுத்து வதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. அதிதீவிர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்படும் நோயாளர்களில் நோயியல் பிரிவு நோயாளர்களில் 32 விகிதமும், சத்திர சிகிச்சைப்பிரிவு நோயாளர்களில் 15 விகிதமும் மரணிப்பதாகவும் ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன.

**Intensive Care Unit** என ஆங்கிலத்தில் அழைக்கப்படும் அதிதீவிர சிகிச்சைப் பிரிவு ICU என சுருக்கப் பதங்களைக் கொண்டுள்ளது. இன்று குறுஞ் செய்தி அனுப்புபவர்கள் சொற்களை சுருக்கி செய்தி அனுப்பும் முறையே அதிகம் புழக்கத்திலுள்ளது. அப்படிப் பார்த்தால் ICU என்பதற்கு "I see you" என்ற கருத்துமுண்டு. அதாவது "நான்உன்னை பார்த்துக் கொண்டிருக்கின்றேன்" என்ற அர்த்தமும் எதிரொலிக்கிறது. பார்த்துக் கொண்டிருப்பது மருத்துவரா அல்லது கடவுளா என்பது தான் புரியவில்லை.



இரு நெருங்கிய நண்பர்களிருந்தனர். பால்ய காலத்திலிருந்து அவர்கள் நட்பு நகமும் சதையுமாகத் தொடர்கிறது. இப்போது இருவரும் பேரப்பிள்ளைகளைக்கூட கண்டுவிட்டார்கள். அவர்களிலொருவர் திடீரென கடும் சுகயீனமுற்று ICU இல் அனுமதிக்கப்பட்டிருந்தார். தன் சகா ICU இல் அனுமதிக்கப்பட்டிருந்ததையறிந்த மற்றவர் பதறியடித்துக் கொண்டு ஆஸ்பத்திரிக்கு ஓடினார். ICU இல் நண்பருக்கு செயற்கைச் சுவாசம் கொடுக்கப்பட்டிருந்தது. உடலின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் குழாய்கள் பொருத்தப்பட்டு அவதானிக்கப்பட்டுக் கொண்டிருந்தது.

நண்பரை அந்தக் கோலத்தில் பார்த்தவருக்கு தலை சுற்றியது. நண்பரின் கட்டிலுக்கருகில் சென்று அதன் ஒரு விளிம்பைப் பிடித்துக் கொண்டார். தங்கப் பதக்கம் சிவாஜி போல கன்னம் துடித்தது, உதடுகள் நடுங்கின, கண்களால் கண்ணீர் அருவியென சொரிந்தது. ,

நோயாளி நண்பர் இவரைப் பார்த்து ஏதோ பேச முயன்றார். முடியவில்லை. சைகை செய்தார். அது இவருக்குப்புரியவில்லை. உடனே தன்னிடமிருந்த கடதாசித்துண்டையும், பேனாவையும் கொடுத்தார். நோயாளி நண்பரும் கைகள் நடுங்க ஏதோ எழுதிக் கொடுத்தார். ஏதாவது இறுதி ஆசையாக இருக்கும். அதை நான் தனிய படித்துப் பார்ப்பது நல்லதல்ல. அதை அவரின் பிள்ளைகளிடம் கொடுத்து எல்லோர் முன்னிலையிலும் படிப்போமென்று மடித்து சட்டைப்பையில் வைத்தார். சிறிது நேரத்தில் நண்பர் மூச்சுவிடக் கஷ்டப்பட்டார். அவர் கைகளைப் பிடித்துக் கொண்டார். இறுதிமூச்சு விட்டு மரணித்தார்.

நண்பரின் இறுதிக்கிரியைகள் நடந்து கொண்டிருந்தன. அந்த நேரத்தில் மரணித்த நண்பர் எழுதிக் கொடுத்த கடிதம் ஞாபகம் வந்தது. இறந்தவரின் மூத்த மகனிடம் "உன் அப்பா கடைசி நேரம் எழுதிய கடிதம். இதை எல்லோர் முன்னும் உரக்கப்படி " என்றார். மூத்தவன் உரக்கப்படித்தான் "டேய் நண்பா...... நீ என் செயற்கை சுவாசம் வரும் குழாயை மிதித்துக் கொண்டு நிற்கிறாய். என்னால் மூச்சுவிட முடியவில்லை. நீ அதிலிருந்து உன் காலை எடுக்காவிட்டால் நான் மூச்சுவிடமுடியாமல் செத்துவிடுவேன்" என்று எழுதியிருந்தது. பிறகென்ன செத்த வீடு நம்மவருக்கு சாத்தல் வீடாகியது.

**உதவி செய்கிறேனென்று முன்வருவோர் பலர்**
**மற்றவர்களுக்குத் தாம் உபத்திரமே**
**என்பதை உணர்வதேயில்லை**

**எப்.எக்ஸ்.அன்ரன்**

# விடிவைக் கண்டுவிட்டோமா வெடிகொளுத்திக் கொண்டாட





"இன்று இந்த இலங்கை திருநாட்டினுடைய ஜனநாயகத்தை நிறுத்துவதற்காக எந்த தமிழர் தரப்பு உச்சநீதிமன்றத்தில் அந்த தமிழன் என்ற அடையாளத் தோடு வாதிட்டதோ அதே தமிழர் தரப்பு இந்த இலங்கைத் தீவில் இவ்வளவு காலமும் அல்லல்படுகின்ற, துன்பப்படு கின்றன சதா துன்பச் சிலுவைகளை சுமந்த அந்த தமிழி னத்திற்கான ஒரு ஏற்றுக்கொள்ளக்கூடிய நிரந்தர தீர்வை அதே ஆர்வத்தோடும் அதே சட்ட புலமைகளோடும் சிங்களத் திடமிருந்து வாதாடி சிங்கள தேசத்திடமிருந்து நிரந்தர தீர்வை பெற்றுத் தருகின்ற அந்த புலமையை தான் இன்று தமிழ் மக்கள் எதிர்பார்த்து நிற்கிறார்கள்"

உயர் நீதிமன்றத்தினால் வழங்கப் பட்டுள்ள தீர்ப்புக்காக தமிழர் தரப்பானது ஏதோ தனியான தேசம் தங்களுக்கு தருவிக்கப்பட்டு விட்டது என்றோ அல்லது நிரந்தரமான ஒரு ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வு கிடைக்கப் பெற்றுள்ளது என புள காங்கிதம் அடைய அல்லது வெடி கொளு த்தி ஆரவாரம் செய்யுமளவிற்கு அவ்வாறு எதுவுமே தமிழர் தரப்புக்கு இந்த இலங் கைத் தீவில் கிடைக்கப்பெறவில்லை.

இது இவ்வாறு இருக்க ஏதோ 70 வருடகாலமாக பற்றியெரிந்த இந்த இனப் பிரச்சினைக்கு ஒரு நிரந்தர தீர்வு கிடைக் கப் பெற்றதாக சில தமிழர் தரப்புக்கள் பொங்கி புளகாங்கிதம் அடைவது/ மிடுக் கடைவது வேடிக்கையாக இருக்கிறது.


உண்மையில் இலங்கை நாடென்ற ரீதியில் அதனுடைய ஜனநாயகத்திற்கு ஒரு இழுக்கு ஏற்படுகின்ற போது அந்த ஜனநாயகத்திற்காக போராடுகின்ற தரப் பாக அதில் வாழுகின்ற மக்கள் என்ற வகையில் தமிழர்கள் தங்களது ஆதங் கங்களை அல்லது பங்களிப்புகளை வழங் குவது என்பது முக்கியமானது ஒன்று தான்.

அந்த வகையில் இலங்கையின் ஜனநா யகம் மீறப்பட்டிருக்கிறது அல்லது அரசிய லமைப்பு மீறப்பட்டிருக்கிறது என்ற வகை யில் தமிழர் தரப்பாக ஜனநாயகத்தை நிலைநாட்டுகின்ற பொறுப்பை தமிழர்கள் ஏற்றுக் கொள்வதில் எந்த பிழையும் இல்லை.

மீறப்பட்ட ஜனநாயகத்தை நிலைநாட்டு வதற்காக சிங்களத் தரப்புகளோடு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது பக்க வாதங் களை முன்வைத்து உச்சநீதிமன்றத்தில் வாதிட்டதை நாங்கள் வரவேற்க தான் வேண்டும்.

எனினும் இந்த இலங்கைத் தீவில் மாறி மாறி ஆட்சி அமைத்து வந்த இந்த இரு பெரும்பான்மை சிங்கள கட்சிகளும் தமிழர்களுக்கு ஒரு நீதியான தீர்வை தராது புறக்கணித்து வந்ததன் பின்ன ணியில் நாடு எதிர் நோக்கக் கூடாத பல இன்னல்களையும், வரலாற்றின் கறுப்புப் பக்கங்களையும், இரத்தக்கறை தோய்ந்த வரலாறுகளையும் கண்டு வந்து





இருப்பதை யாரும் மறக்கவும் மறுக்கவும் முடியாது .

இது இப்படி இருக்க சிங்களத்தின் இரு பெரும் பிரிவுகளுக்கிடையில் நடைபெற்றுக் கொண்டிருக்கிற ஒரு இராஜதந்திர போரிலே தமிழர் தரப்பின் உடைய பங்களிப்பும் வகிபங்கும் மிகப்பெரும்பாலான காத்திர மான பங்களிப்பாக அமைந்திருப்பதை உற்றுநோக்கக் கூடியதாக இருக்கிறது .

அந்த வகையில் ஒரு நாட்டினுடைய இறை யாண்மை ஜனநாயகம் மீறப்படுகின்றது. அந்த ஜனநாயகத்தை தூக்கி நிறுத்து கின்ற வல்லமையும் புலமையும் தமிழர் தரப்பிடம் இன்று தக்கவைக்கப்பட்டுள்ளது என்பதில் வடக்கு- கிழக்கு தமிழர்கள் பெருமிதம் கொள்ள வேண்டிய் ஒரு விடய மாக இருந்தாலும் ஒட்டுமொத்தமாக சட்டையின் கழுத்துக்கொலரை இழுத்து விட்டு மிடுக்கோடு நெஞ்சை நிமிர்த்தி நடக்கின்ற எந்த ஒரு நிலைமையையும் இன்னும் தமிழினம் இத்தீவிலே எதையும் பெற்றுக்கொள்ளவில்லை.

70 வருட காலங்களாக ஒரு விடிவுக்கா கவும் ஏற்றுக்கொள்ளக்கூடிய சுதந்திரத் திற்காகவும் சிங்களத்தோடு போராடி வருகின்ற தரப்பாக தமிழர் தரப்பு இன்று வரை போராடிக் கொண்டிருக்கின்ற தரு வாயில் தமிழர்களுக்கு ஒரு நீதியான நியாயமான ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு தீர்வு இத்தீவிலே எட்டப்படும்போது அவர் கள் வெடி கொளுத்தி ஆரவாரம் செய்தும் புளகாங்கிதம் அடையவும் வெற்றியை கொண்டாடும் உகந்த காலமாகும்.

அதை விடுத்து சிங்கள தேசத்தில் ஏற்பட்ட உள்முரண்பாடுகள் காரணமா கவும் ஸ்திரமற்ற நிலைமை காரணமாக ஏற்பட்ட வரலாற்று சந்தர்ப்பத்தை பயன்படுத்திக்கொண்டு அதில் ஏதோ ஒரு சிங்களத் தரப்புக்கு ஆட்சியமைப்பதற்கு ஏதுநிலைகள் ஏற்படுகின்ற போது அதை தமிழர்களது வெற்றிகளாக நாங்கள் கொண்டாடிவிட முடியாது, கொண்டாடவும் கூடாது.

இன்று இந்த இலங்கை திருநாட்டினுடைய ஜனநாயகத்தை நிறுத்துவதற் காக எந்த தமிழர் தரப்பு உச்சநீதிமன்றத்தில் அந்த தமிழன் என்ற அடையாளத்தோடு வாதிட்டதோ அதே தமிழர் தரப்பு இந்த இலங்கைத் தீவில் இவ்வளவு காலமும் அல்லல்படுகின்ற, துன்பப்படுகின்றன சதா துன்பச் சிலுவைகளை சுமந்த அந்த தமிழினத்திற்கான ஒரு ஏற்றுக் கொள்ளக் கூடிய நிரந்தர தீர்வை அதே ஆர்வத்தோ டும் அதே சட்ட புலமைகளோடும் சிங்களத் திடமிருந்து வாதாடி சிங்கள தேசத்திடமிருந்து நிரந்தர தீர்வை பெற்றுத் தருகின்ற அந்த புலமையை தான் இன்று தமிழ் மக்கள் எதிர்பார்த்து நிற்கிறார்கள்.

ஆகவே தங்களது சட்ட புலமைகள் இனத்துக்காக இன்னும் இன்னும் நகர்த்தி செல்லப்பட்டும், இனத்தின் விடிவுக்காக எங்களுடைய இதே தமிழ் சட்டவாளர்கள், புலமையாளர்கள் தீர்வை நெம்பித்தர அவை பிரயோசனப்படும்.

200 வருட பழைமை பாரம்பரியம் வாய்ந்த நீதித்துறை தனித்துவம் பெற முழுமையான வெற்றி பெற வேண்டு மாயின் 70ஆண்டுகால தமிழர் பிரச்சினை தீர்க்கப்படுதல் அவசியமாகும்.

அப்படி எங்களுக்கு ஒரு நிரந்தரமான தீர்வை இந்த கடல்சூழ் தீவில் நிலை நாட்டுகின்ற போது அன்று தான் தமிழர் கள் வெடி வெடித்து புளகாங்கிதம் அடைய வேண்டுமே ஒழிய சிங்கள தேசத்தில் ஏற்படுகின்ற ஆட்சி வெற்றிகளுக்காக தமிழர் தரப்பு, புளகாங்கிதம் அடைவதும், அதிகம் மகிழ்வதும் பொருத்தமானதல்ல.

கு. மதுசூதன்

# கிரிக்கெட்டில் அசத்தும் தமிழர்



சச்சின் டெண்டுல்கர் இந்தியாவின் மூலை, முடுக்கெல்லாம் பிரபலமான கிரிக்கெட் ஜாம்பவான். உலக அளவில் பல சாதனைகளைப் படைத்தவர். இந்திய ஆண்கள் கிரிக்கெட்டையும், உலக கிரிக்கெட்டையும் அதன் அடுத்த கட்டத்திற்கு கொண்டு சென்றவர்.

ஆண்கள் கிரிக்கெட்டை பொறுத்தவரை, அவருக்கு இணை அவர்தான். மகளிர் கிரிக்கெட்டிலும் இப்படி ஒருவர் இருக்கிறார். அவர் ஒரு தமிழர் என்பது குறிப்பிடத்தக்கது. அவர் தான் மித்தாலி ராஜ். இந்திய மகளிர் கிரிக்கெட்டின் சச்சின்.

14 வயதில் 1997 மகளிர் உலகக்கோப்பை கிரிக்கெட் போட்டியில் பங்கேற்கும் இந்திய அணியின் உத்தேச பட்டியலில் இடம் பிடித்தார். ஆனால் இறுதியாகப் பங்கேற்கும் அணியில் இடம் கிடைக்கவில்லை. பின் 1999 இல் தேசிய அணியில் விளையாட வாய்ப்பு கிடைத்தது. தான் விளையாடிய முதல் ஒருநாள் போட்டியில், அயர்லாந்து அணிக்கு எதிராக 114* ஓட்டங்கள் குவித்து, தனது கிரிக்கெட் பயணத்தைச் சாதனையுடன் தொடங்கினார். 19 வயதில் தன்னுடைய மூன்றாவது டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணிக்கு எதிராக 214 ஓட்டங்கள் அடித்து டெஸ்ட் கிரிக்கெட்டிலும் சாதனைகள் படைத்தார்.

ஒன்று இரண்டல்ல. அவர் படைத்த சாதனைகள் ஏராளம். 1999 முதல் தேசிய அணியில் உள்ள இவர், இன்றும் இந்திய அணியின் முக்கிய நம்பிக்கை நட்சத்திரம்.



கிட்டத்தட்ட 20 ஆண்டுகள் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் பங்கேற்று வருகிறார். மகளிர் கிரிக்கெட்டில் அதிக வருடங்கள் கிரிக்கெட் விளையாடி வருபவர். இவருக்கு அடுத்த படியாக இருப்பவர் இங்கிலாந்தின் சார்லோட்டே எட்வர்ட்ஸ். இவர் 19 வருடங்கள் (1997-2016) சர்வதேச மகளிர் கிரிக்கெட்டில் பங்கேற்றவர்.

அதிக ஒருநாள் போட்டிகளில் பங்கேற்ற பெருமையும் மித்தாலி ராஜ்க்கு உண்டு. இதுவரை 197 ஒருநாள் போட்டிகளில் விளையாடியுள்ளார். 6550 ஓட்டங்கள் எடுத்து, உலக அரங்கில் அதிக ஓட்டங்கள் எடுத்த மகளிர் கிரிக்கெட் வீரர் என்ற பெருமையைப் பெற்றார். இங்கிலாந்தின் சார்லோட்டே எட்வர்ட்ஸ் 5992 ஓட்டங்கள் எடுத்து இரண்டாம் இடத்தில் உள்ளார். ஒருநாள் போட்டிகளில் மித்தாலி ராஜ் 7 சதங்கள், 51 அரைச்சதங்கள் அடித்துள்ளார். 50 முறை ஆட்டமிழக்காமல் துடுப்பாட்ட வீரராக இருந்து சாதனை புரிந்துள்ளார். துடுப்பாட்டத்தின் சராசரி 51.17. 10 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ள மித்தாலி ராஜ், ஒரு சதம், 4 அரைச்சதம் உட்பட 663 ஓட்டங்கள் குவித்துள்ளார். துடுப்பாட்ட சராசரி 51.85. இருபது-20 துடுப்பாட்டங்களில் பங்கேற்றுள்ள அவர் 2283 ஓட்டங்கள் அடித்துள்ளார்.

இதில் 17 அரைச்சதங்கள் அடங்கும். துடுப்பாட்டத்தின் சராசரி 37. இருபது-20 இல் அதிக துடுப்பாட்டத்தின் சராசரி கொண்டவர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது. மகளிர் இருபது-20 இல் அதிக ஓட்டங்கள் குவித்த வீரர்கள் பட்டியலில் நான்காம் இடத்தில் உள்ளார்.



ஆண்கள் ஆதிக்கம் செலுத்தி வரும் கிரிக்கெட் போட்டிகளில் மகளிரின் சிறப்பையும் வெளிபடுத்தியவர் மித்தாலி ராஜ். மகளிர் கிரிக்கெட்டில் அதிகம் பிரபலமான வீரர் மித்தாலி ராஜ். லேடி கிரிக்கெட்டின் சச்சின் எனப் போற்றபடுபவர். இதுவரை ஐந்து ஒருநாள் உலகக்கோப்பை போட்டிகளில் பங்கேற்றுள்ளார்.

இந்திய அணியின் தலைவராகவும் மிகப்பெரிய பங்களிப்பை அளித்துள்ளார். 2005 உலகக்கோப்பை போட்டிகளில் இறுதி போட்டிவரை இந்திய அணியை அழைத்துச் சென்றவர். இவரது தலைமையின் கீழ் இங்கிலாந்தில் டெஸ்ட் போட்டியை வென்றது வரலாற்று சிறப்பு மிக்க ஒரு நிகழ்வாக உள்ளது. 2016 இல் அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற இருபது-20 தொடரைக் கைப்பற்றித் தனது சிறந்த கப்டன்ஷிப் திறமைகளை வெளிப்படுத்தினார்.

6 டெஸ்ட் போட்டிகளில் கப்டனாக இருந்த மித்தாலி ராஜ் 3 வெற்றிகளைப் பெற்று கொடுத்துள்ளார். அதிக வெற்றி சதவீதம் உள்ள இந்திய அணியின் டெஸ்ட் கப்டன். 3 டெஸ்ட் போட்டிகளை வென்ற ஒரே இந்திய டெஸ்ட் கப்டன் இவர். 76 ஒருநாள் போட்டிகளில் கப்டனாகப் பணியாற்றி 42 வெற்றிகளைத் தந்துள்ளார். வெற்றி சதவீதம் 57.

2003இல் அர்ஜுனா விருதும், 2015இல் பத்மஸ்ரீ விருதும் பெற்றுள்ளார். பி.பி.சி. இன் உலகின் சிறந்த 100 பெண்கள் பட்டியலில் 2017 ஆம். ஆண்டு இவர் இடம் பிடித்தார். மித்தாலி ராஜின் வாழ்க்கை வரலாறு படமாக்க ஏற்பாடுகள் நடந்து வருவது குறிப்பிடத்தக்கது. நிகழ்கால மற்றும் வருங்கால தலைமுறை பெண் களுக்கு இவர் ஒரு சிறந்த ரோல் மொடலாக உள்ளார்.

# அவர்கள் வீணாக வம்பு இழுத்தால் தக்க பதிலடி கொடுப்போம்

## ஸ்லெட்ஜிங் குறித்து கோலி அதிரடி

இந்திய அணி டெஸ்ட், ஒருநாள்,இருபது-20 என்று மூன்று விதமான கிரிக்கெட் போட்டிகளில் விளையாடுவதற்காக அவுஸ் திரேலியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ள இருக்கிறது.

அவுஸ்தி ரேலிய அணி என்றாலே ஸ்லெட்ஜிங்க்கும், சர்ச்சைக் கும் பஞ்சமே இல்லாதது. ஏற்கனவே அந்த அணியின் முன்னாள் கப்டன் ஸ்டீவன் ஸ்மித் போல் டாம்பரிங் செய்த தற்காக ஒரு வருடம் சர்வ தேச கிரிக்கெட் போட்டிகளில் விளையாட தடை விதிக்கப்பட் டுள்ளது. அதற்கு உதவிய துணை கப்டன் டேவிட் வோர் னரும் ஒரு வருடம் விளை யாட தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் அந்த அணியின் நிலை மிகவும் கவலைக்கிடமாகத் தான் உளளது.

அவுஸ்திரே லிய அணியில் இந்த இர ண்டு முக்கிய வீரர்கள் இல் லாதது, அணிக்கு பலம் குறை ந்தும் ஸ்லெட்ஜிங்கிற்கு ஆள் குறைந்தும் உள்ளது.

இந்நிலையில், அவுஸ் திரேலிய தொடரில் இந்திய அணி கலந்துகொள்வது குறித்து கப்டன் கோலி அளித்த பேட்டியில், "தற்போது கப்டனாக இருப்பதால் அணியின் நலன் மற்றும் வெற்றி தவிர வேறு எதைப்பற்றியும் சிந்திக்கவும் நேரம் இல்லை. இதனால் கடந்த காலத்தைப் போல எந்தவிதமான மோதலும் உருவாகாது. நாங்கள் எப்போதும் வாங்குவதை திருப்பிக் கொடுப்பவர்களே தவிர பிரச்சினையை தொடங்குபவர்கள் இல்லை. ஆகையால் அவுஸ்திரேலிய வீரர்களுடன் எந்தவிதமான மோதலிலும் நாங்கள் ஈடுபட மாட்டோம்.

ஆனால், அவுஸ்தி ரேலிய வீரர்கள் ஸ்லெட் ஜிங்கை விரும்பினால் திருப்பி கொடுப்பதில் எங்களுக்கு எந்தவித ஆட்சேபனையும் இல்லை. அவர்கள் வீணாக வம்பு இழுத்தால் நாங்கள் தக்க பதிலடி கொடுப்போம்" என்று அதிரடியாக தெரிவித்துள்ளார்.

# ஏன் ஐ.பி.எல் தொடரில் இருந்து விலகினேன்

## – மிட்செல் ஸ்டார்க்

ஐ.பி.எல். போட்டிகளில் இருந்து விலகியதற்கான காரணம் குறித்து அவுஸ்திரேலிய வீரர் மிட்செல் ஸ்டார்க் விளக்கம் அளித்துள்ளார்.

அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த வேகப்பந்து வீச்சாளர் மிட்செல் ஸ்டார்க், 2018ஆம் ஆண்டு ஐ.பி.எல். தொடரின் போதான ஏலத்தில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியில் சேர்க்கப்பட்டார். ஆனால், காலில் ஏற்பட்ட காயம் காரணமாக அவர் ஐ.பி.எல். மற்றும் அதனைத் தொடர்ந்து நடைபெற்ற கிரிக்கெட் தொடர்களில் விளையாடவில்லை.

இந்நிலையில், 2019ஆம் ஆண்டுக்கான ஐ.பி.எல். தொடரில் விளையாடவுள்ள அணிகளின் வீரர்கள் பட்டியல் மாற்றப்பட்டு வருகிறது. அதன்படி, கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணியில் இருந்து மிட்செல் ஸ்டார்க் விலக்கப்பட்டுள்ளார். ஆசஸ் மற்றும் உலகக்கோப்பை கிரிக்கெட் தொடரை முன்னிட்டு இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அணி நிர்வாகம் தெரிவித்தது.

இதுகுறித்து பேசியுள்ள மிட்செல் ஸ்டார்க், ஐ.பி.எல். போன்ற உலகளாவிய இருபது-20 தொடர்களில் விளையாடுவது எனக்கு மிகவும் பிடிக்கும். இதன்மூலம் நிறைய பணம் சம்பாதிக்க முடியும்.

ஆனால், என் இப்போதைய தேவையெல்லாம் டெஸ்ட் மற்றும் ஒருநாள் கிரிக்கெட் தொடர்களில் அதிக கவனம் செலுத்தி, அதில் என் திறன்களை மேம்படுத்திக் கொள்வது மட்டுமே. அதற்காகவே கடுமையாக உழைத்துக் கொண்டிருக்கிறேன் என விளக்கமளித்துள்ளார்.

# சரணாகதி

குளுமையான இனிய காலை வேளையில் ஞாயிறு சங்குநாத வாசகர்களுக்கு ஜிம்மிக்குடியின் காலை வந்தனங்கள். புலோகமே கழுவித் துடைச்ச மாதிரி அருமையான மழை- ஓமோம் அனர்த்த முகாமைத்துவம் எச்சரிக்கை தந்ததாலை எல்லாருமே கவனமா பாதுகாப்பா இருந்திருக்கினம். செமைக் காத்தும் புயலும் நல்ல நாகரிகமான பேருகளோடை தான் புயலுகளும் வருகுது. முந்தநாள் நல்ல பளிச்செண்டு கண்ணாடி மாதிரி வானமும் சுள்ளென்று பொறி பறக்கிற வெயிலும். சனமும் பாவம்தான் நனைஞ்சதுகளைக் காய விடவும் சேர்ந்து கிடந்த உடுப்புகளைக் கழுவிப் போடவும் ஈரச்சாக்குகளை உலர்த்திக் காய வைக்கவும் சூரிய பகவான் சிரிச்ச முகத்தோடை வந்தாரே ஒரு வருகை என்ரை சாக்குகளையும் நானே இழுத்துக் கொண்டு போய் புரட்டிப் புரட்டிக் காய வைச்சு பெரியவரின்ரை சாய்மனைக் கதிரைக்குக் கீழை மடிச்சும் வைச்சு நல்ல பெயரும் வாங்கிப் போட்டன். நான் வீடு வளவுக்கை அசிங்கப்படுத்திற பழக்கமில்லாததாலை எல்லாருக்கும் என்னிலை ஒரு மரியாதை...



என்ன சிரிக்கிறியள். மரியாதை எண்டிறது குடுத்து வாங்கிற நல்ல விடயம்-நாங்கள் ஒரு ஆளை மதிச்சால்தான் அவையும் எங்களை மதிப்பினம்- ஆரையும் கண்ட உடனை எழும்பி நீட்டி நிமிர்ந்து சோம்பல் முறிச்சு ஒரு செல்லமாச் சத்தம் போட்டு நடந்து போனன் எண்டால் சும்மா சொல்லக் கூடாது...அந்த மாதிரி வடிவா இருப்பன்...

போன கிழமை முழுக்கப் பெரியவரோடை கோயிலும் புராணப் படிப்பும் எண்டு ஒரே பக்தி மயம். அவரின்ரை வயசுக்கு பகல் முழுக்கப் பட்டினி -இரவிலை ஒரு சின்னக் கிளாசிலை பாலும் இரண்டு வாழைப்பழமும்தான். ஆனால் களைக்காமல் மணிக்கணக்காக மைக்குக்கு முன்னாலை பேசுவார்- இடையிலை பாடுவார். கனகாலம் நோய் நொடியில்லாமை வாழ வேணும்.

ம்...ஆரோ வருகினம். யூனிவசிற்றிப் பிள்ளைகள் போல. லதாக்குட்டியும் பேரனாருக்குக் கஞ்சி கொண்டு வந்து குடுத்திட்டுப் பக்கத்திலை இருக்கிறா. பெரியவர் தலையாட்டி வரவேற்றுக் கதிரையைக் காட்டுறார். குனிஞ்சு காலைத் தொட்டுக் கும்பிட்டிட்டு இரண்டு பிள்ளையளும் கதிரையிலை இருக்கினம். பெரியவர் நிமிர்ந்து இருக்கிறார்.

இவை முந்தியும் வந்த பிள்ளையள்தான். என்னையும் பார்த்துச் சிரிக்கினம். எனக்கும் வலு புழுகம்தானே. பெரியவர் தொடங்கிறார். உள்ளுக்கை நிண்டு மகனும் பாலாண்ணையும் வந்து அவையும் இருக்கினம். சரியே கதை- ஒரு நல்ல விடயம் வரப் போகுது போலை. நானும் காதை உயர்த்திக்கொண்டு கேக்கிறன். எனக்கும் இப்பெல்லாம் இந்த மாதிரி விடயங்களும் விளங்குது.

"சொல்லுங்கோ மகள். ஏதோ ஆய்வுக்கட்டுரை எண்டு போனிலை சொன்னனீங்கள். ஒரு மணித்தியாலம் பேசலாம். என்ன தலைப்பு..."

ஒரு பிள்ளை முன்னுக்குக் கதிரையைத் தூக்கி வைச்சுப்போட்டு மெல்லிய குரலிலை பணிவா பண்பாக் கதைக்குது.

"பூரண சரணாகதி" எண்டிற விடயத்தை கந்தபுராணத்தை அடிப்படையா வைச்சு எழுத வேணும். சூரபன்மனுக்குத் திருப்பெரு வடிவம் காட்டி அவனுக்கு அருள் கொடுக்கிற யுத்த காண்டத்திலைதான் சில தெளிவு வேணும் சேர். நல்லறிவையும் கொடுத்து விஸ்வரூப தரிசனத்தையும் காட்டி அதை மனமொற்றிப் பார்த்துப் பரவசப் படவும் வைத்து முழுமையாக ஆட்படுற கட்டத்தையும் கொடுத்து "தடுத்தது மானமொன்றே எண்டு அவனை மீண்டும் யுத்த சன்னத்தனாக்கிய நிலை அருமையா இருக்கும் சேர்" நல்ல படிச்ச பிள்ளை நல்ல வடிவாச் சொல்லுது.பெரியவர் மெல்லச் சிரிக்கிறார்.

"தகப்பனைப் போல மகனும் விளையாடும் ஒரு சிறு விளையாட்டு மகள். சூரன் தேவர்களைச் சிறை செய்தது அவனைப் பொறுத்தவரை நன்மையைத் தந்தது எண்டு அவனே சொல்லும் கட்டம்- ஒரு பாவமும் அறியாத தேவர்களைச் சிறை செய்தது தீது எண்டு எல்லாரும் சொல்லியபோது அந்தச் செயலால் தானே பிரம்மா, விஷ்ணு எவருமே காணுதற்கரிய திவ்ய தரிசனம் தனக்குக் கிடைத்தது என்று அகமகிழும் சூரன் சாகா வரம் பெற்று சண்முகனைச் சரணடைய வேண்டிப் பிறந்தவன். தேவர்கள் சிதறி ஓடி சிவகுமரனை அடைக்கலம் புகுந்தும் சூரன் பல்வேறு மாய வடிவங்களோடு போராடினான்-முடிவில் அவன் சென்ற பிறவியில் கோரிய வரத்தின்படி சேவலும் மயிலுமாக சிவகுமரனோடு இணையாது வாழும் வாழ்வு பெறுகிறான். அவன் தேவர்களை விடுதலை செய்து உடம்போடு கூடிய அருமையான உயிரைப் பாதுகாத்து வாழ்ந்திருக்கலாம். ஆனால் அவனுக்கு உயிர் வாழ்வதல்ல இலட்சியம். அவன் வீரன். மாவீரனோடு போராடிப் பெறும் புகழே நிலையானது. நேருக்கு நேர் நின்றும் மறைந்தும் மாயம் செய்தும் அவன் தன் வீரத்தை நிலைநாட்டி மரணம் இல்லா வாழ்வு பெறும் அற்புதம் பெருமைக்குரியது. ஆணவம் இருக்கும் வரை இறைவனை அடைய முடியாது. அதே வேளை ஆணவம் அழிக்கப்பட முடியாதது. ஆனால் அது திருவருள் சக்தியால் அடக்கப்பட்டு வலிமை கெட்டதும் ஆன்மா இறைவனையடையும் என்னும் தத்துவத்தையே மானிடர்க்குப் போதிக்கும் இடம்தான் இந்த சூரபன்மன் வதைப்படலம் வென்றது. சூரபன்மனே வெற்றியை பக்தர்களுக்கு வழங்குவதே இறைவனின் திருவிளையாடல்- அலைக்கழித்து அடக்கி ஆட்கொள்ளும் கருணையே தெய்வீகம்" பெரியவர் பெரு மூச்சு விடுறார்.

உள்ளேயிருந்து லதாக் குட்டி வாறா. அவவும் இவ் வளவையும் கேட்டுக்கொண் டுதான் இருந்தவா. ம்...ஏதோ சொல்லுறா..

"தாத்தா சூரன் சூரன் எண்டு கதைக்கிறியள்... சூரன் தனியானவன் இல்லை. முற்பிறப்பிலே சாகதீவரசன் என்பவனுக்கு சூரன், பதுமன், சிங்கன், தாரகன் எண்டு நாலு ஆண் பிள்ளைகள் இருந்ததாம். சூரனும் பதுமனும் இப் பிறப்பில் முருகனுக்கு மயில் வாகனமாகவும் சேவல் கொடியாகவும் சேவை செய்யத் தவம் செய்து மாயையின் மகனாக சூரபன்மன் எனும் பெயரோடு பிறந்து வீர யாகம் நிறையச் செய்து சிவபிரான் இடத்தில வரம் வாங்கி அதுக்குப் பிறகுதான் ஆணவம் மேலோங்கி இவ்வளவும் செய்தவனாம். ஆனாலும் அவன் விரும்பியது கிடைச்சிட்டுதுதானே. தப்புச் செய்தால் சரணடைய வேணும். இல்லாவிட்டால் இப்படி நிறைய துன்பங்கள் கடந்துதான் அறிவு தெளியும்". பெரியவர் பெருமைப்பட்ட படியே தலையை வருடிக் கொடுக்கிறார் ம்...வெட்கக் கேடு. எனக்கே இப்பதான் இந்த விடயம் விளங்கினது. சரி சரி மழை வர முன்னம் சாப்பிட்டிட்டுப் படுத்திடுங்கோ. அப்ப வாறன்.

திருமதி.பாரதி கணேஷ்
சுன்னாகம்.

# காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம் : இரு கோடுகள்
இயற்றியவர் : ரம்யா
இசை : வி.குமார்
பாடியவர் :பி.சுசிலா, ஜமுனா ராணி



புன்னகை மன்னன் பூவிழி
கண்ணன் றுக்மணிக்காக
புன்னகை மன்னன் பூவிழி
கண்ணன் றுக்மணிக்காக
அவர் புல்லாங்குழலில் உள்ளம்
மயங்கும் கண்மணிக்காக

புன்னகை மன்னன் பூவிழி
கண்ணன் இருவருக்காக
இந்தா பாமா றுக்மணி
இருவருமே அவன் ஒருவனுக்காக
புன்னகை மன்னன் பூவிழி
கண்ணன் றுக்மணிக்காக்
இந்தா பாமா றுக்மணி
இருவருமே அவன் ஒருவனுக்காக

தேவன் முருகன் கோவில்
கொண்டது வள்ளியின் நெஞ்சத்திலே
அவன் தெய்வானை என்றொரு பூவையை
மணந்தது திருப்பரங்குன்றத்திலே (2)

மாலையிட்டால் அது ஓர் முறைதான்
என நினைப்பது பெண்மையன்றோ?..
ஒரு மாலையை இரு தோளுக்கு
சூடுதல் இறைவன் தன்மையன்றோ!!
அது ஏட்டில் உள்ள கதை
இது இன்றும் தொடரும் கதை
அது பொம்மை கல்யாணம்
இது உண்மை கல்யா...ணம்
வசனம்: ஏன் பாட்டை நிறுத்திஙங்க, பாடுங்க
புன்னகை மன்னன் பூவிழி கண்ணன்
றுக்மணிக்காக
அவன் புல்லாங்குழலில் உள்ளம்
மயங்கும் கண்மணிக்காக


கொஞ்சும் கணவன் குங்குமம்
வைப்பது ஒருத்தியின் நெற்றியிலே
அந்த குங்குமம் வைத்தவன்
சங்கமமானது இருவரின் நெஞ்சினிலே
கொஞ்சும் கணவன் குங்குமம்
வைப்பது ஒருத்தியின் நெற்றியிலே...
அந்த குங்குமம் வைத்தவன்
சங்கமமானது இருவரின் நெஞ்சினிலே
ஈருயிர் என்றும் ஓர் உடல்
தன்னில் இருந்திட வழியுண்டோ?...
ஒரு முகத்துக்கு இரண்டு விழிகளை
வைத்த இயற்கையில் தவறுண்டோ?
இந்த கேள்விக்கு பதில் ஏது?...
சிலர் வாழ்வுக்குப் பொருள் ஏ..து?.
அது உறவின் மாறாட்டம்
இது உரிமைப் போரா..ட்டம்
புன்னகை மன்னன் பூவிழி
கண்ணன் ருக்மனிக்காக
அவன் புல்லாங்குழலில் உள்ளம்
மயங்கும் கண்மணிக்காக
புன்னகை மன்னன் பூவிழி
கண்ணன் இருவருக்காக
இந்தா பாமா றுக்மணி
இருவருமே அவன் ஒருவனுக்காக



Velvet
sandalwood & venivel
for soft & radiant skin
100 g
பொலிவான மென்மையான சருமத்திற்கு
வெல்வட் சந்தனம் மற்றும் மரமஞ்சள்
பாரம்பரியம் தொட்டு பெண்களின் சரும அழகை மெருகூட்டி வரும்
சந்தனம் மற்றும் மரமஞ்சளின் குணநலன்கள் கொண்ட
புதிய வெல்வட் இப்போது ஹயிட்ரோசொ.ஃப்ட் டெக்னொலஜி உடன்.
உங்கள் சருமத்தின் ஈரப்பதனை தக்க வைத்து
பொலிவான மென்மையான சருமத்தை தரும்.
ரூ. 60/-
HEMAS


Hero
ஹீரோ வழங்கும்
பண்டிகைக்கால
தள்ளுபடிகள்
ரூ. 15,000/- வரை
விசேட தள்ளுபடி
5
WARRANTY
BS IV
STANDARD
Pleasure
MAESTRO EDGE
HF Deluxe
100cc
ரூ. 245,000/-
விசேட விலை
ரூ. 230,000/-
ரூ. 15,000/-
தள்ளுபடி
110cc
ரூ. 260,000/-
விசேட விலை
ரூ. 245,000/-
ரூ. 15,000/-
தள்ளுபடி
100cc
ரூ. 229,500/-
விசேட விலை
ரூ. 219,500/-
ரூ. 10,000/-
தள்ளுபடி
இந்த சிறப்பு விலைகள் குறுகிய காலத்திற்கானது.
*நிபந்தனைகள் உண்டு. விலைகள் முன்னறிவித்தலின்றி மாறலாம்.
Abans AUTO
☎:011 5 777 000
நாடளாவிய அபான்ஸ் ஹீரோ காட்சியறைகள் மற்றும் அங்கீகாரம் பெற்ற ஹீரோ முகவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.

# இலங்கை அரசியல் நெருக்கடி முடிவுக்கு வரவேண்டும்!







இலங்கை நாடாளுமன்றத்தைக் கலைத்த ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேனவின் உத்தரவு செல்லாது என்று அறிவித்துவிட்டது உச்ச நீதிமன்றம். அதன் பிறகு கூடிய நாடாளுமன்றக் கூட்டத்தில் மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை உள்ளவர்களே பிரதமராகப் பதவி வகிக்க வேண்டும் என்ற நாடாளுமன்ற ஜனநாயகத்தை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பொருட்படுத்தாமல் தனது அதிகார வரம்புகளைத் தவறாகக் கையாண்டதன் காரணமாக இலங்கையின் அரசியல் சூழலே குழப்பம் நிறைந்ததாக மாறியிருக்கிறது.

ரணில் விக்கிரமசிங்கவைப் பிரதமர் பதவியிலிருந்து நீக்கிவிட்டு அந்த இடத்துக்கு மகிந்த ராஜபக்ஷவை நியமித்தார் மைத்திரிபால சிறிசேன. ரணிலைப் பதவியிலிருந்து நீக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டா என்று பல அரசியல் கட்சிகள் கேள்வி கேட்டதை அடுத்து, நாடாளுமன்றத்தை முடக்கி உத்தரவிட்டார் மைத்திரிபால சிறிசேன. மகிந்த ராஜபக்ஷவுக்குப் பெரும்பான்மை உறுப்பினர்களின் ஆதரவைத் திரட்டுவதற்காக இப்படி அவகாசம் செய்து தரப் பட்டது. மகிந்த ராஜபக்ஷவுக்குப் பெரும்பான்மை இல்லை என்று தெரிந்ததும் நாடாளுமன்றத்தையே கலைத்துவிடும் தவறான முடிவையெடுத்தார். இனி பிரதமராக மகிந்த ராஜபக்ஷ நீடிக்க முடியாது என்பது உறுதியான பிறகு நாடாளுமன்றத்தைச் சந்தித்துப் பெரும்பான்மை வலு இருக்கிறதா என்று சோதிக்குமாறு மகிந்த ராஜபக்ஷவுக்கு ஜனாதிபதி கட்டளை இட்டிருந்தால் தற்போதைய அரசியல் நெருக்கடியைத் தவிர்த்திருக்க முடியும்.

மைத்திரிபால சிறிசேனவும் ரணில் விக்கிரமசிங்கவும் சேர்த்து அமைத்த கூட்டணி அரசு 2015இல் அரசியல் சட்டத்துக்குப் புதிய திருத்தத்தைக் கொண்டுவந்தது. அதன்படி, தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்றம் நான்கரை ஆண்டுகள் பதவிக்காலத்தைப் பூர்த்திசெய்வதற்கு முன்னால் கலைக்கப்படக் கூடாது. அப்படிக் கலைப்பதாக இருந்தால் நாடாளுமன்றத்தின் மூன்றில் இரண்டு மடங்கு உறுப்பினர்கள் தீர்மானம் கொண்டுவந்த பின் கலைக்கலாம். அதேசமயம், நாடாளுமன்றத்தைக் கூட்டவும், திகதி குறிப்பிடாமல் ஒத்திவைக்கவும், கலைக்கவும் ஜனாதிபதிக்கு அதிகாரம் இருக்கிறது என்று இலங்கை அரசியல் சட்டத்தின் கூறு 33(2)(சி) கூறுகிறது.

இலங்கை நாடாளுமன்றத்தைப் பொறுத்தவரையில் இப்போதுதான் மூன்று ஆண்டுகள் கடந்துள்ளன. நாடாளுமன்றத்தைக் கலைக்க வேண்டும் என்று எந்தக் கட்சி உறுப்பினர்களும் கேட்கவில்லை. அரசியல் சட்டத்துக்குச் செய்த சில சீர்திருத்தங்களே காற்றில் பறக்கவிடப்படும் நிலையில் புதிய, அனைத்துத்தரப்பு நலனையும் உள்ளடக்கிய அரசியல் சட்டம் இயற்றப்படும் என்ற நம்பிக்கையைத் தோற்றுவிக்கவில்லை.

உள்ளூராட்சி மன்றங்களுக்கு நடந்த தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ கட்சிக்குக் கிடைத்த வெற்றியை அடுத்து மைத்திரிபால சிறிசேன போட்ட அரசியல் கணக்கு பிசகாகிவிட்டது. உச்ச நீதிமன்றம் தலையிட்டு ஜனாதிபதியின் அதிகார வரம்புக்கு எல்லை வகுத்திருக்கிறது. நாடாளுமன்ற ஜனநாயகத்தில் உச்ச நீதிமன்றம் அரசியல் சட்டத்தின் பாதுகாவலராக இருக்கிறது என்பது உண்மைதான். ஆனால், அரசின் நிர்வாகத் தலைமையை வகிக்கும் ஜனாதிபதியும் நாடாளுமன்றமும் அப்படியொரு சூழலை உருவாக்குவது ஜனநாயக நெறிகளுக்கு எதிரானது மட்டுமில்லை. அவர்களைத் தேர்ந்தெடுத்த மக்களுக்குச் செய்யும் துரோகமும்கூட.

**த ஹிந்து ஆசிரியர் தலையங்கம்**

# தேசிய இளைஞர் கொள்கை அலட்சியப்படுத்தப்பட்டது ஏன்?

தேசிய இளைஞர் கொள்கை யொன்றின் தேவை இந்த நாட்டில் பலதசாப்த காலத்துக்கு முன்னதாகவே உணரப்பட்டது. தெற்கில் இரண்டு தடவைகள் இடம்பெற்ற இளைஞர் புரட்சிகள் போன்று வடக்கிலும் இடம்பெற்ற யுத்தத்தால் பாதிக்கப்பட்ட இலங்கை பொருளாதார கலாசார, அரசியல் சவால்களுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

1988-1989ஆம் ஆண்டு இளைஞர் புரட்சிக்குப் பின்னர் இளைஞர்களின் அதிருப்தியை நீக்க ஆணைக்குழுவொன்று அமைக்கப்பட்டது. இளைஞர்களிடையே ஜனநாயகம், நல்லாட்சி தொடர்பான நம்பிக்கையை ஏற்படுத்த பல யோசனைகள் ஆணைக்குழுவால் முன்வைக்கப்பட்டன. போட்டிப் பரீட்சை முறை மற்றும் உள்ளூராட்சி மன்றங்களில் இளைஞர் கோட்டா என்பன ஆணைக்குழுவால் பரிந்துரைக்கப்பட்ட யோசனைகளாகும்.

அந்த யோசனைகள் செயற்படுத்தப்பட்டாலும் இளைஞர் புரட்சியும் யுத்தமும் பௌதிக ரீதியாக குற்றுயிராக்கப்பட்டாலும், இளைஞர்களின் தேவைகளை நிறைவேற்ற போதுமான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்றே கூற வேண்டும்.

மூன்று இளைஞர்களில் ஒருவர் வெளிநாடு செல்ல விருப்பத்துடன் இருப்பதாக ஆய்வறிக்கைகள் கூறுகின்றன. அதற்குக் காரணம் நமது நாட்டில் அரசியல், பொருளாதார, சமூக ரீதியாக நியாயமான மற்றும் யதார்த்தமான செயற்றிட்டங்கள் செயற்படுத்தப்படவில்லை என்று அறிந்து கொள்ளப்பட்டுள்ளது. அதேபோல் நாட்டின் நிர்வாகம் தொடர்பாக மற்றும் கொள்கை வழாங்கல் தொடர்பாக இளைஞர்களிடையே நம்பிக்கையின்மை நிலவுவதாகத் தெரியவந்துள்ளது.

விசேடமாக இளைஞர்களின் திறமையை தேசிய அபிவிருத்திக்குப் பாவிப்பதற்குப் பதிலாக அரசியல் கட்சி நடவடிக்கைகள் ஊடாக இளைஞர்களை ஏமாற்றினர். அரசியல் பலம்வாய்ந்தவர்கள் மற்றும் உயர் பிரபுவர்க்கத்தினர் உறவினர்களுக்கு சலுகைகள் வழங்குவதற்காக போட்டிப் பரீட்சைகளில் கூட தலையீடு செய்தார்கள்.

இவ்வாறான சூழல் தேசிய இளைஞர் கொள்கை தொடர்பாக கடந்த காலங்களில் இருந்தது. பல முயற்சிகள் எடுக்கப்பட்டு வந்தன. அதேபோல் அதற்காக பல்கலைக் கழகங்கள், இளைஞர் அமைப்புகள் போன்று அரச பிரிவினரும் பலவிதத்திலும் தலையிட்டார்கள். பல சந்தர்ப்பங்களில் அரச நிதி அனுசரணையின் கீழோ அல்லது வேறு நிதியங்களை பாவித்தோ தேசிய இளைஞர் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. அம்முயற்சிகளின் பயனாக 2007ஆம் ஆண்டு தேசிய இளைஞர்கள் கொள்கைகள் சட்டவரைவு முன்வைக்கப்பட்டது. ஆனால் இளைஞர் சமூகம் மற்றும் ஏனையோராலும் நிராகரிக்கும் நிலைமை ஏற்பட்டது. அந்த சட்டவரைவு போதுமான அளவு இளைஞர் பங்களிப்பு இல்லாமல் மேற்கொள்ளப்பட்டதால் அதன் மூலம் இந்நாட்டு இளைஞர்களின் தேவைகளும் மற்றும் பிரச்சினைகளும் சரியாக அறிந்து கொள்ளப்படவில்லை.

அவ்வாறான அனுபவத்துக்கு சமனான சூழலில் மீண்டும் இந்த கொள்கைகளின் தேவை காரணமாக பல அழுத்தங்கள் ஏற்படுத்தப்பட்டன. அதன் பலனாக அன்றைய தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் தலைவர் லலித் பியூம் பெரேராவும் இளைஞர் நடவடிக்கைகள் அமைச்சர் டலஸ் அழகப்பெருமவும் தலையிட்டு இளைஞர் அமைப்புகளின் அழுத்தங்களைப் புரிந்துகொண்டதால் இளைஞர் அமைப்புக்களின் கொள்கைகளுக்காக செயற்குழுவொன்று நியமிக்கப்பட்டது.

நாடு பூராகவும் இளைஞர் விவகாரங்கள் தொடர்பில் நடவடிக்கையில் ஈடுபடும் அரச, தனியார் மற்றும் சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டதுடன், இளைஞர்களின் கருத்தை அறிய விரிவான திட்டங்களின் மூலம் தேசிய இளைஞர் கொள்கைகள் சட்டவரைவை தயாரிப்பதற்கு இலங்கை திறந்த பல்கலைக்கழகத்துக்கு சந்தர்ப்பம் கிடைத்தது. நிறைய முயற்சிகளுக்குப் பின்னர் அரச நிதியத்தைப் பாவித்து மேற்கொள்ளப்பட்ட அந்த நிகழ்ச்சித் திட்டத்துக்கு உள்ளூர் சிவில் அமைப்புகள் போன்று வெளிநாடுகளின் இளைஞர் அமைப்புக் களின் ஒத்துழைப்பும் கிடைத்தது.

இந்த இளைஞர்கள் கொள்கை கள் சட்டவரைவு பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்ட தோடு, அந்த தேசிய இளைஞர் கொள்கை களை செயற்படுத்துவதற்காக ஜனாதிபதி இளைஞர் ஆணைக்குழு அமைத்தல் மற்றும் இளைஞர் நடவடிக்கைகளுக்காக குறைகேள் அதிகாரியொருவரையும் நியமித்தல் போன்ற அனைத்து பொறுப்பு களும் இளைஞர் விவகார அமைச்சுக்கு வழங்கப்பட்டன.

கொள்கையொன்று அரசாங்கம் மாறினாலும் தொடர்ந்து அதனை மாற்றமின்றி செயற்படுத்தவே உருவாக்கப்படுகின்றது. இளைஞர் கொள்கை அடிப்படையானது ஒரு அரசியல் கட்சியின் இளைஞர் சமுதாயத்துக்கு மாத்திரம் சொந்தமானதல்ல. அனைத்து இளைஞர் சமுதாயத்தின் பிரச்சினைகளுக்கும் யோசனைகளுக்குமாகவே ஏற்படுத்தப்படுகின்றது.

கடந்த மூன்று தசாப்த காலமாக இளைஞர் கொள்கையொன்று இல்லாமையால் உள்ளூராட்சி மன்ற இளைஞர் கோட்டா இல்லாமற் போனது. மாகாண சபை புதிய சட்டத்தின் கீழ் இளைஞர் பிரதிநிதித்துவம் முற்றாக இல்லாமற் போகும் சூழல் உருவாகியுள்ளது. முடிவு எடுக்கும் எந்தவொரு பொறிமுறையிலும் இளைஞர் பிரதிநிதித்துவம் இல்லாமலாக்கப்பட்டுள்ளது. தேசிய ரீதியான நடவடிக்கைகளைப் போன்று எந்தவொரு கோரிக்கையையும் வெற்றி கொள்வதற்குக் கூட இளைஞர்கள் குரல் ஒலிப்பது மிகக் குறைவாகும்.

அதனால் ஆட்சியாளர்கள் இளைஞர் தேவைகளை நிறைவேற்றும் வரை காத்திருக்காது அவற்றை வெற்றிகொள்ள இளைஞர் அமைப்புகள் இளைஞர் பாராளுமன்றம், பல்கலைக்கழகங்கள் இணைந்து குரல் எழுப்ப வேண்டும். ஜனநாயக ரீதியிலோ மற்றும் சட்ட ரீதியாக நடவடிக்கையில் ஈடுபட்டு தேசிய இளைஞர் கொள்கைகளை செயற்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

# facebook சிறு துளி

(சென்றவார தொடர்ச்சி)

மாலை அந்த குடத்தருகே மேலும் சில்லறை காசுகள் கிடந்தன. எண்ணிப் பார்க்க கிட்டத்தட்ட ஐந்து ரூபாய்க்கு மேல் இருந்தது.

மறு நாள் பழக்கடைக்கு சென்றான். பழக்கடைக்காரர், நேற்று இவன் செய்ததை பார்த்துக் கொண்டிருந்தார். இந்தாப்பா நேத்து நிறைய கூலி ஆளுங்க உன் குடத்துல வச்சிருக்கிற தண்ணிய குடிக்கறதை பார்த்தேன்.நமக்குள்ள சின்ன வியாபாரம் பண்ணிக்கலாம். நான் கொஞ்சம் சாமான் தாரேன். நீ எனக்கு அந்த பொருளுக்கான வாடைகையை கொடுத்துடணும் சரியா? அவரை பொருத்தவரை வியாபாரம் அது போதும். வியாபாரம் எங்கு ஆனால் என்ன?

அந்த சிறுவன் யோசித்து சரி என்றான். அவர் ஒரு பெஞ்சும், இரண்டு புது குடங்களும், கொஞ்சம் டம்ளர்களும் கொடுத்தார். அது போக ஐந்து ரூபாய்க்கு எலுமிச்சம் பழங்களையும் கொடுத்தார்.



இப்பொழுது ஒரு குடத்தில் உப்பு கலந்தும், மற்றொன்றில் சர்க்கரை கலந்தும் வைத்தான். அன்றும் ஏழை மக்கள் அவனுக்கு சில்லறைகளை நிறைய போட்டிருந்தனர். அவன் அதை எடுத்து கொண்டு பழக்கடைக் காரருக்கு, எலுமிச்சை பழத்துக் குண்டான தொகையும், குடம், பெஞ்சுக்குண்டான வாடகையும் கொடுத்தான். அது போக கையில் பத்து ரூபாய்க்கு மேல் இருந்தது.

அவன் அம்மாவிடம் சொல்லி விட்டான் இனி பிச்சை எடுப்பது கூடாது. இது நமக்கு பிழைப்பதற்கு ஒரு வழி. அதனால், இதனையே செய்யலாம்.

நாளடைவில் நல்ல வளர்ச்சியை அடைந்து கொண்டிருந்தான் அந்த சிறுவன்.

இப்பொழுது இவனே புதிய குடங்களும், மற்ற பொருட்களும் வாங்கி விட்டான். ஒன்றே ஒன்று மட்டும் உறுதி எடுத்து கொண்டான். ஏழைகளுக்காக ஆரம்பிக்கப்பட்டதால், அவர்களிடம் அதிக தொகை கேட்கவில்லை. அதனால் அதிகமான வாடிக்கையாளர்கள் அவனது இடத்துக்கு வர தொடங்கினர். அவனும் தன் தாயுடன் ஒரு அறையை வாடகைக்கு எடுத்து தங்கி கொண்டான்.

காலங்கள் உருண்டன. அன்று பார்த்த அந்த சிறுவன் இப்பொழுது நகரில் நான்கைந்து பழக்கடைகளுக்கு சொந்தக்காரன். நகரில் அவனுக்கும், அவன் அம்மாவுக்கும் சொந்தமாக ஒரு வீடு கட்டிக்கொண்டான் என்றாலும், இந்த கடை எப்பொழுதும் போல் ஏழைகளுக்காகவே இப்பொழுதும் சேவையாக செய்து கொண்டிருக்கிறான். அவனும் இளைஞனாய் ஆகியிருந்தான்.

குட்டீஸ் வளர்ச்சி என்பது எப்படி வரும் என்று சொல்ல முடியாது. முடிந்தவரை இல்லை, முடியாது என்பது போன்ற வார்த்தைகளை கையாளாதீர்கள்.

-முற்றும்

## நன்றியை மறப்பது பாவம்

நன்றியை மறப்பது மிகப் பெரிய பாவம்! முல்லை மலர் என்ற காட்டில் விறகு வெட்டுவதற்காக சென்று கொண்டிருந்தான் மனிதன் ஒருவன்.

அப்போது காட்டில் எங்கிருந்தோ சிங்கத்தின் கர்ஜனை கேட்டது. பயத்துடன் ஓடத் தொடங்கினான் மனிதன். மனிதனே பயப்படாதே! இங்கே வா! நான் உன்னை ஒன்றும் செய்ய மாட்டேன் என்ற குரல் கேட்டது. தயக்கத்துடன் குரல் வந்த திசையை நோக்கிச் சென்றான் மனிதன்.

அங்கு ஒரு கூண்டில் சிங்கம் அடைப்பட்டு இருந்தது. வேட்டைக்காரர்கள் சிலர் சிங்கத்தை உயிருடன் பிடிப்பதற்காக ஒரு கூண்டு செய்து அதற்குள் ஓர் ஆட்டை விட்டு வைத்திருந்தனர். ஆட்டிற்கு ஆசைப்பட்ட சிங்கம் கூண்டிற்குள் மாட்டிக் கொண்டது.

மனிதனைப் பார்த்த சிங்கம், மனிதனே, என்னை இந்தக் கூண்டிலிருந்து விடுவித்து விடு... நான் உனக்குப் பல உதவிகளைச் செய்வேன், என்றது. நீயோ மனிதர்களைக் கொன்று தின்பவன். உன்னை எப்படி நான் விடுவிக்க முடியும்? என்றான் மனிதன்.

மனிதர்களைக் கொல்லும் சுபாவம் எங்களுக்கு உண்டு தான். அதற்காக உயிர்காக்கும் உன்னைக் கூடவா அடித்துக் கொன்றுவிடுவேன். அவ்வளவு நன்றியில்லாதவனா நான்? பயப்படாமல் கூண்டின் கதவைத்திற. உன்னை ஒன்றும் செய்ய மாட்டேன், என்று நைசாகப் பேசியது சிங்கம்.

சிங்கத்தின் வார்த்தையை உண்மையென்று நம்பிவிட்டான் மனிதன். கூண்டின் கதவைத் திறந்தான். அவ்வளவுதான்! நன்றி கெட்ட சிங்கம் மனிதன் மேல் பாய்வதற்கு தயாராயிற்று.

இதனைக் கண்ட மனிதன், சிங்கமே, நீ செய்வது உனக்கே நியாயமா? உன் பேச்சை நம்பி உன்னைக் கூண்டிலிருந்து விடுவித்தேனே... அதற்கு இதுதானா நீ காட்டும் நன்றி, என்றான்.

என் உயிரைக் காத்துக் கொள்வதற்காக நான் ஆயிரம் பொய் சொல்லுவேன். அதை நீ எவ்வாறு நம்பலாம்? மனிதர்கள் என்றால் பகுத்தறிவுள்ளவர்கள் என்று தானே பொருள். அந்த அறிவைக் கொண்டு இது நல்லது, இது கெட்டது என்று பகுத்தறிய வேண்டாமா? முட்டாள்தனமான உன் செய்கைக்கு நான் எப்படிப் பொறுப்பாக முடியும்? என்றது சிங்கம்.

கடவுள் உன்னை தண்டிப்பார். உன் உயிரை காப்பாற்றிய என்னையே சாப்பிடுவது நியாயமா? உன்னை விடுவித்ததற்கு இம்மாதிரி நடந்து கொள்வது முறையல்ல, என்றான் மனிதன்.

அவ்வழியாக ஒரு நரி வந்தது. இதனிடம் நியாயம் கேட்போம், என்று கூறிய மனிதன் நடந்த கதையனைத்தையும் நரியிடம் கூறினான்.

எங்கள் தொழில் அனைவரையும் அடித்துக் கொன்று சாப்பிடு வது தான். இது இவனுக்கு நன்றாகத் தெரிந்திருந்தும் கூட என்னைக் கூண்டிலிருந்து விடுவித்தான், முட்டாள்தனமான இந்தச் செய்கைக்கு உரிய பலனை இவன் அனுபவித்தே தீர வேண்டும். நீ என்ன சொல்ற நரியாரே... என்றது.

அனைத்தையும் கேட்ட நரி ஒன்றும் புரியாததைப் போல் பாவனை செய்தது. நீங்கள் இந்த மாதிரி சொன்னால் எனக்கு ஒன்றுமே புரியல. ஆரம்பத்திலிருந்து சொல்லுங்கள், என்றது நரி.

உடனே சிங்கம் சொல்லத் தொடங்கியது. நான் அந்தக் கூண்டிற்குள் அடைந்து கிடந்தேன்...

எந்தக் கூண்டிற்குள்? என்றது நரி. அதோ இருக்கிறதே அந்தக் கூண்டிற்குள், என்றது சிங்கம். எப்படி அடைந்து கிடந்தீர்கள்? என்றது நரி.

சிங்கம் விடுவிடுவென்று கூண்டிற்குள் சென்றது. இதுதான் சமயம் என்று கருதிய நரி சட்டென்று கூண்டுக் கதவை இழுத்து மூடியது.

நரியாரே! இது என்ன அயோக்கியத்தனம்! நியாயம் கூறுவதாகக் கூறி என்னை மறுபடியும் கூண்டில் அடைத்துவிட்டீரே!" என்று கத்தியது சிங்கம்.

நீங்கள் பேசாமல் கூண்டிற்குள்ளேயே இருங்கள். நான் ஒன்றும் இந்த மனிதனைப் போல் முட்டாள் அல்ல. உங்களுக்குச் சாதகமாக நியாயம் சொன்னால் முதலில் மனிதனை அடித்துக் கொல்வீர்கள். பிறகு என்னையே அடித்துக் கொன்று விடுவீர்கள். அதனால் தான் உங்களைக் கூண்டிற்குள் செல்லுமாறு செய்து கதவைப் பூட்டி விட்டேன், என்றது நரி.

நன்றி மறந்த சிங்கம் தன் நிலையை நினைத்து நொந்து போனது.

நீதி:- ஒருவர் செய்த நன்றியை மறப்பது மிகப் பெரிய பாவம். அப்படி செய்பவர்களை இறைவன் தண்டிக்காமல் விடமாட்டார்.

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1560

### நந்ததீபன்

அட பாவிங்களா நாளைக்குத் தான்டா சண்டே.. இன்னைக்கே உருச்சிட்டிங்களேடா...



### சச்சி சின்னவன்

தூக்கத்தில் சிரிக்கும் குழந்தை கடவுள் வியக்கும் அழகு இந்தச் சிரிப்பு எத்தனை பேருக்கு பிடிக்கும் நண்பர்களே... இப்படி ஒரு சிரிப்பை ரசித்திருக்கிறீர்களா



### அருணன்

லீவும் சரி போனஸும் சரி வந்ததும் தெரியல, போனதும் தெரியல



### தயாளன்

தொட முடியாத உயரம் என்பது யாரும் முயற்சிக்காத இடம் மட்டுமே



### சண்முகராஜ்

ஏன்டா பழத்தைச் சாப்பிட்டு தோல் மட்டும் எனக்குத் தார?



தோல் கொடுப்பான் தோழன் அது இதுதான்டா

### ரூபன்

பிறப்பால் ஏழைதான்... குணத்தால் கோடீஸ்வரி




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

யாழ். மருத்துவக் குழுவினர் தொகுத்து வழங்கும்

# சுகமான விடியல்

வலம்புரியின் மருத்துவச்சுடர் 158

## ஆரோக்கியம் தேடி சில கேள்வி பதில்கள் - 02



**● எமது தற்போதைய வாழ்க்கை முறை அல்லது பண்பாடு எமது சுகாதார நிலையில் எவ்வாறு தாக்கத்தை ஏற்படுத்துகிறது?**

எமது அன்றாட வாழ்க்கை செயற்கைத்தனமாகி இயந்திரமயமாகி உணவுவகைகள் கூட பக்கற்றுகளிலும் பேணிகளிலும் வருகின்ற இரசாயன உணவுகளாக மாறி பானங்கள் எல்லாம் போத்தலில்வருகின்ற செயற்கை சுவையூட்டிகளின் கலவையாகி எமது உடற்பயிற்சிகள் கூட இயந்திரங்களில் என்று ஆகி நாம் இயற்கையில் இருந்து அந்நியப்பட்டுச் சென்று கொண்டிருக்கிறோம்.

இயற்கையான உணவுகளான ஊர்க்கோழிமுட்டை, மோர், தயிர், இளநீர், தேசிக்காய் தண்ணி, சுண்டக்கத்தரி, அகத்தி, சண்டி, வாழைப்பொத்தி போன்றவை எமக்கு மறந்துபோயின. அம்மியும் உரலும் நூதனசாலையின் காட்சிப்பொருள் போல வீட்டிலே சும்மா கிடக்கிறது.

செயற்கைத்தனத்தின் காலடியில் நாம் சரணாகதி ஆவதால் நாம் நோய்வாய்ப்பட்டுக் கொண்டிருக்கிறோம். சோறு தீத்துவதை ஒரு சம்பிரதாய சடங்காகவே கொண்டாடியதாலோ என்னவோ நாம் அனைவரும் சோற்றுக்கும் மாப்பொருளுக்கும் அடிமையாகி மேலதிக மாப்பொருளை உண்டு பல நோய்களுக்கு ஆளாகிக் கொண்டிருக்கிறோம். ஆரோக்கியமான உள்ளூர் உற்பத்திகளின் மகிமை மக்களுக்கு உணர்த்தப்பட்டால் எமது ஆரோக்கியம் மேம்படும்.

**● குடாநாட்டின் வேளாண்மையால் நீர் மாசடைகிறது என்பதனையும் மனிதனிலே பல நோய்த்தாக்கங்களுக்கு இது காரணமாக அமைகிறது என்பதையும் எந்த அளவுக்கு ஏற்றுக்கொள்ளலாம்?**

இது உண்மையிலேயே ஒரு பெரும் பிரச்சினையாக விசுவரூபம் எடுத்து நிற்கின்றது. வேளாண்மைக்கு பயன்படுத்தப்படும் செயற்கை உரங்



களும் கிருமிநாசினிகளும் குடாநாட்டின் நிலத்தடி நீரை கடுமையாக மாசுபடுத்தி இருக்கிறது. யாழ்ப்பாண கிணற்று நீரிலே செய்யப்பட்ட சோதனைகள் இதனை உறுதிப்படுத்தி இருக்கிறது.

கிணற்று நீரிலே கரைந்திருக்கும் இந்த இரசாயன மாசுக்களை கொதிக்க வைப்பதன் மூலம் அகற்ற முடியாது. இந்த உரக்கலவைகளாலும் இரசாயனப்பொருட்களாலும் மாசுபடுத்தப்பட்ட நீரை அருந்துவோமாக இருந்தால் சிறுநீரக நோய்கள், புற்றுநோய்கள் உட்பட பல நோய்கள் தோன்றுவதற்கான ஆபத்து இருக்கிறது. அத்துடன் அதிகளவு செயற்கை உரம் பாவிக்கப்பட்டு கிருமிநாசினி தெளித்து வளர்க்கப்பட்ட மரக்கறி வகைகளை உண்பதும் உடல் ஆரோக்கியத்திற்கு நல்லதல்ல.

**● சாதாரண பொது மகன் நோய் நிலைகளிலிருந்து தம்மை எவ்வாறு தற்காத்துக்கொள்ளலாம்? நடைமுறையில் அவர்கள் என்னென்ன வழிமுறைகளை கைக்கொள்ளலாம்?**

பின்வரும் முறைகளை கைக்கொள்வோமாக இருந்தால் நாம் ஒவ்வொருவரும் எம்மை தற்காத்துக்கொள்வதுடன் எமது சமுதாயத்தையும் காத்துக்கொள்ளலாம்.

◎ மருந்து தெளிக்கவோ செயற்கை உராங்கள் போடவோ தேவைப்படாத இயற்கையாக வளரக்கூடிய மரக்கறி வகைகளான பசளி, தவசி முருங்கை, சண்டி, வாழைப்பொத்தி, வாழைக்காய், சுண்டங்கத்தரி, அகத்தி இலை, அகத்திப்பூ, முருங்கை, கொவ்வை போன்றவற்றை பயன்படுத்துதல்.

◎ வீட்டிலே இயற்கை உராங்களை பாவித்து வீட்டுத்தோட்டம் அமைத்து மருந்து தெளிக்காது அவற்றை வளர்த்து பயன்பெறுதல்.

◎ மழைகாலத்திலே கூரையில் விழும் மழை நீரை இலகுவான பொறிமுறை மூலம் வடிகட்டி சேகரித்து குடிநீராகவும் சமையலுக்கும் பயன்படுத்துதல். இதன்மூலம் சேகரிக்கப்படும் நீர் வருடம்முழுவதும் வைத்து பருகுவதற்கு பாதுகாப்பானது.

◎ விவசாயிகளுடன் கலந்துரையாடி அவர்களின் உண்மையான நடைமுறை பிரச்சினைகளுக்கு தீர்வுகாண முயலுதல்.

◎ ஆரோக்கியமான உணவுகளான மீன், இறால், ஊர்க்கோழி இறைச்சி, இயற்கையான உணவை உண்ணும் பசு கறந்த பால், காடைமுட்டை, தாராமுட்டை, ஊர்க்கோழி முட்டை, பச்சை இலை உண்ணும் ஆடு கறந்தபால் போன்றவற்றை உணவில் சேர்த்தல்.



◎ ஒவ்வொருவரும் தமக்கு பொருத்தமான உடல்நிறையை பேணுதல்.

◎ ஒழுங்கான உடற்பயிற்சி.

◎ தீய பழக்கங்களை தவிர்த்தல். மனஅமைதி செயற்பாடுகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தல்.

**● எமது இளைய தலைமுறை படிப்புடன் அதிக நேரத்தை செலவிடுகின்றனர். பொதுவாசிப்பு, விளையாட்டு, இயற்கை ரசிப்பும் பாதுகாப்பும், சமூக நடவடிக்கைகள் போன்றவற்றில் அக்கறை அற்றவர்களாக இருக்கிறார்கள். இதற்கு என்ன செய்யலாம்?**

அன்றுதொட்டு எமது முக்கிய பலம் கல்வியாகத்தான் இருந்து வந்திருக்கிறது. உடலும் மனமும் ஆரோக்கியமாக இருந்தால் மட்டுமே கற்ற கல்வி எமது ஆழ்மனதில் படிந்து அதனை நடைமுறையில் பயன்படுத்தக் கூடிய தெம்பு ஏற்படும். ஓடிவிளையாடுதல், உடற்பயிற்சி செய்தல் என்பன உடலுக்கு தெம்பை கொடுக்கும்.

இயற்கையை வளப்படுத்துதல், இயற்கையை இரசித்தல், சமூக நடவடிக்கைகளில் ஈடுபடுதல் என்பன மனதுக்கு மகிழ்ச்சியையும் ஆரோக்கியத்தையும் கொடுக்கும். ஒவ்வொரு பெற்றோரும் தாம் தமது பிள்ளைகளுக்கு முன் உதாரணமாக திகழ்ந்து இந்த நடைமுறைகளை கடைப்பிடித்து வந்தால் பிள்ளைகள் அவர்களை பின்பற்ற முனைவர்.

பாடப்புத்தப் படிப்பு ஒரு மனிதனை முழுமை ஆக்க மாட்டாது. வாழ்க்கையை படிப்பதற்கு பொது வாசிப்பு இன்றியமையாதது. வாழ்க்கையைப் படித்தால் மாத்திரமே வாழ்வை வெற்றி கொள்ள முடியும். திட்டமிட்டு செயற்படுவோமாக இருந்தால் நாம் எல்லாவற்றிற்கும் நேரம் ஒதுக்கிக் கொள்ள முடியும். நேரமில்லை என்று சொல்லுவதை தவிர்த்து நேரத்தை எவ்வாறு திட்டமிட்டு செலவுசெய்வது என்பதையும் கற்றுக்கொள்வோம்.

Dr. சி. சிவன்சுதன்
பொது வைத்திய நிபுணர்.



பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூகமேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (0764685555) என்ற இலக்கத்திற்கு SMS செய்துவிடுங்கள். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்